
# பித்தப்பூ

க. நா. சுப்ரமண்யம்




க. நா. சுப்ரமண்யம்

# பித்தப்பூ

க. நா. சுப்ரமண்யம்

# முன்னுரை

விஷயங்களை எட்ட நின்று பார்க்க வேண்டியதாக இருக்கிறது. நெருங்கி, நெருக்கப்படுவதால் மட்டும் அனுபவங்கள் கிடைத்து விடுவதில்லை. இதனால்தானோ என்னவோ நாவல்களில வருகிற மனிதர்கள், கதைகளில் வருகிற அனுபவங்கள், அதிகமாகக் காண்பது போலவும், நேரில் கண்டு, பட்டகஷ்டங்கள் அவ்வளவு காரமாகக் காண்பதில்லை போலவும் தோன்றுகின்றன.

பயனெண்ணாது கதைப்பதென்பதும் தாமரையிலைத் தண்ணீர் மாதிரி பட்டும் படாமலும் இருப்பதென்பதும், எல்லாவற்றையும் பற்றில்லாமல் சாட்சிபூர்வமாகப் பார்த்து இருந்துவிடுவது என்பதும் லட்சியங்களாக — இந்தியாவில் மட்டுமில்லை, உலகம் பூராவிலும் மனித ஜாதி பூராவிலேயே ஒரு லட்சியமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது.

இப்படி ஓர் அனுபவம் — பட்டுக்கொள்ளவும் முடியாது, படாமலும் ஆக்க முடியாது என்று ஒரு அனுபவம் ஏற்படுகிறபோது அந்த அனுபவத்தை அசைபோட்டுப் பார்ப்பது என்பது அது நடந்து மறந்துபோன பிறகுகூட வெகுகாலம் சாத்தியமாக இருக்கிறது. நேராகக் கண்டு பாதிக்கப்பட்ட அனுபவங்களைவிட அதிகநாள் மனத்தில் நீடிக்கிறது.

இப்படி ஏற்பட்ட ஒரு விஷயத்தை, மனித மனத்தில் பைத்தியம் என்று ஒரு வியாதி ஏன் ஏற்படுகிறது, அது ஏற்படுகிற விதத்தை நாவலாகச் செய்ய முடியுமா என்று யோசித்துக் கொண்டிருந்ததன் மத்தியிலே அது பூர்த்தியாகிவிட்டது என்பதனாலேயே முழுதும் தெரிந்து கொண்டு விட்ட மாதிரி பித்தப்பூவை ஆரம்பித்துக் கொண்டேன். பைத்தியக்காரர்கள் கடவுளின் அன்புக்கோ, கோபத்திற்கோ பாத்திரமானவர்கள் என்று நினைப்பது எத்தனை அசட்டுத்தனம். பைத்தியத்தின் காரணங்கள் — அது தேகங்காரணமாக ஏற்படுகிறதா, மனம் காரணமாக ஏற்படுகிறதா, இரண்டிற்கும் ஏற்படுகின்ற அதிர்ச்சியினால் உண்டாகிறதா என்றெல்லாம் கண்டுகொண்டு கூறும் அளவில் இந்தக் காலத்தைய மனோதத்துவ அறிவு வளர்ந்து விட்டதாய் நினைக்கிற மேல்நாட்டு மனோதத்துவ சாஸ்திரமும் ஓரளவிற்கு அசட்டுத்தனந்தான் என்று எனக்குத் தோன்றியதைச் சொல்ல ‘பித்தப்பூ’ என்ற தலைப்பைக் கொண்ட

நாவல் ஒன்று எழுத வேண்டுமென்று 1959இல் எண்ணினேன். மூன்றுதரம் வெவ்வேறு கோணங்களிலிருந்து வெவ்வேறு வழிகளில் எழுதிப்பார்த்தேன். திருப்தியளிப்பதாக இல்லை. இப்போது செய்திருப்பது நாலாவது முயற்சி. இதில் நான் காட்டுகின்ற முதல் லட்சியம் — மனித மனம் உடைவதைக் காட்டும் முயற்சி — முற்றும்கூட இல்லையென்று எனக்கே தெரிகிறது. சாட்சிபூதமாகக் காட்ட உபயோகப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது.

எல்லா சம்பவங்களும் கற்பனை — பாத்திரங்களும் பொய் என்று சொல்வது நாவல் மரபு. மாறாக, இதில் வருகிற எல்லாக் கதாபாத்திரங்களும், சம்பவங்களும் எனக்குத் தெரிந்தவரையில் முழு உண்மை. இதில் சம்பந்தப்பட்ட யாரையும் குற்றம் சாட்டுவதற்கோ, குறை சொல்வதற்கோ எழுதப்பட்டதல்ல. தங்களைத் தான் சொல்லியிருக்கிறேன் என்று நினைப்பவர்கள்கூட என்னைத் தப்பாக நினைக்கக் கூடாது என்பதற்காக இதைக் கூறுகிறேன்.

தியாகு என்பவன் இருந்ததும், இறந்ததும் பழங்கதையாகப் போய்விட்டது. அது நினைவிலிருப்பவர்கள் — அந்த அல்பாயுசில் போய்விட்ட முழு மனிதனின் நினைவில், அதில் தங்கள் குறைபாடு என்ன என்று கருதிப்பார்க்க வேண்டிய அவசியமே கிடையாது. ஒரு மனிதனைப் பற்றிய முழு உண்மையும் நெருங்கியிருப்பவர்களுக்குக்கூட பூரணமாகத் தெரிவதில்லை இதில் தவறு ஒன்றுமில்லை. சம்பந்தப்பட்டவர்களின் மன்னிப்பை — நானும் தியாகுவிடம் ஏராளமான மதிப்பு வைத்திருந்தவன், அவனுக்கு என்னாலான அளவில் நண்பனாக இருக்க முயன்றவன் என்கிற அளவில் முன்கூட்டியே மன்னிப்புக் கேட்டுக்கொண்டு விடுகிறேன். தவறு ஏதாவது இதில் இருந்தால் தவறு என்னுடையதுதான். தவறு என் அறிவிற்கெட்டாத, எனக்குத் தெரியாத விஷயங்களில்தான் இருக்க வேண்டும். மன்னிக்கவும்.

**க. நா. சுப்ரமண்யம்**

**மைசூர்.**

**'த்வன்யா லோகா'**

23.02.1984

# 1

“எனக்குப் பைத்தியமா சார் பிடித்திருக்கு?”

“ம்... ம்... ம்”

“எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கு என்று எல்லோரும் கூறுகிறார்களே. நான் உண்மையிலேயே பைத்தியமா?”

“இந்தக் கேள்வியைக் கேட்கக் கூடிய நீ உண்மையிலேயே எப்படிப் பைத்தியமாக இருக்க முடியும்?” என்று கேட்டேன்.

•

# 2

இன்று இந்தக் கேள்வியைக் கேட்டவன் தியாகராஜன். எனக்கு அவனை அவன் பிறந்த நாள் முதற்கொண்டு தெரியும். நடுநடுவே பல ஆண்டுகள் நான் அவனைப் பார்க்காமல் இருந்திருக்கலாம். இப்படியும், அப்படியுமாக அவனைப்பற்றி எனக்கு அனேகமாக எல்லா விஷயங்களும் தெரியும். அவன் பிறந்த அன்றைக்குத்தான் என் பதினாறு வயது மனைவியும் என் வீட்டிற்கு வந்தாள்.

சாத்தனூரில் சர்வமானியர் தெருவில் எங்கள் வீட்டிற்குப் பத்துவீடு தள்ளி எதிர் வரிசையில் இருந்தது தியாகுவின் வீடு. அவன் அப்பா ஊரின் மதிப்பிற்கும், மரியாதைக்கும், பாத்திரமானவர். ஒரு லட்சியவாதி என்று சொல்ல வேண்டும். ஊரில் சிலர் அவரைப் பைத்தியம் அல்லது அரைப் பைத்தியம் என்றுதான் சொன்னார்கள். அதற்குக் காரணம் அவர் மற்றவர்களைப் போல இருக்க மறுத்ததுதான். மற்றபடி அவருக்குப் பைத்தியம் என்று சொல்ல முடியாது.

சற்று வயதானவர்தான். கிட்டத்தட்ட அறுபது வயதிற்கு ஒன்றிரண்டு குறைவாக இருக்கும்போது தியாகு வந்தான். இளைய மனைவி வீட்டில் அந்த அம்மாள் இருக்கும் இடம் தெரியாது. ஆனால் அவர் கைவண்ணம் எங்கும் தெரியும்.

ஊரோடு ஒத்து வாழத் தெரியாத ஒரு மனிதன் வாழ்ந்து குப்பை கொட்டுவது மிக மிகச் சிரமம். அந்தச் சிரமமான காரியத்தை அந்த அம்மா மிகவும் சிறப்பாகச் செய்து, “அவங்களா? அவங்களுக்கென்ன லக்ஷ்மியேதான் அவங்க!” என்று அவளை அறிந்தவர்கள் எல்லோரும் சொல்ல வாழ்ந்தவள்.

நாற்பது ஐம்பது நாளைய குழந்தையை அவள் எடுத்துக் கொண்டு வருவாள் — கஷ்கு, முஷ்கு என்று குழந்தை சிவப்பாக அழகாகச் சிரித்த பொக்கைவாயும் அதுவுமாக — எனக்குக் குழந்தையைப் பற்றி பயம். தனியாகப் பிறந்து தனியாகவும் வளர்ந்தவன். குழந்தைகளை எடுத்துக் கொள்ளவும் தெரியாது; சீராட்டவும் தெரியாது. ராஜி நாலைந்து தம்பி, தங்கைகளுடன் பிறந்தவள். அவள் அஜாக்ரதையாக யாராத்துக் குழந்தையையோ தூக்குகிறமாதிரி எனக்கு இருக்கும். “கீழே போட்டுடாதே! அவாத்திலே ஏதாவது சொல்லப்போறா” என்பேன். “தியாகு! தியாகு!” என்று அவன் முகவாய்க் கட்டையிலே விரல் வைத்து அமுக்குவாள். ஏதோ ஒரு

பெரிய வேலையைச் செய்கிற மாதிரி. தியாகு பொக்கை வாயைத் திறந்து முழுச் சிரிப்பாக சிரிப்பான். ஒரு அவுட் வாணம் வானத்தில் வெடித்துச் சிதறுவதுபோல இருக்கும். ராஜிக்குத்தான் குழந்தைகளிடம் எத்தனை ஆசை என்று எண்ணத் தோன்றும்!

•

# 3

தியாகுவின் ஆண்டு நிறைவிற்கு தெருவிற்கெல்லாம் அவர்கள் வீட்டில்தான் சாப்பாடு. பத்மநாபய்யருக்கு வஞ்சனையில்லாத மனசு. ஊரார் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று நினைப்பவர். தாராளமானவர். ஊரார் அவர் நன்றாக இருப்பது கண்டு பொறாமைப்படுபவர்கள். பெரிய பணக்காரராக இருந்து கண் எதிரிலேயே படிப்படியாக இறங்கிக் கொண்டிருப்பவர். அவர் இறங்கிக் கொண்டிருப்பதில் சாத்தனூர்க்காரர்களுக்குப் பரம திருப்தி.

படி இறங்கிக் கொண்டிருப்பதற்காக எதையாவது குறைக்க முடிகிறதோ! பத்து ஐயர் பகட்டாக தன் கடைக் குட்டியின் ஆண்டு நிறைவைக் கொண்டாடினார். அவரை வேண்டாதவர்கள் எல்லாம் வந்து சாப்பிட்டுப் பெரிய ஏப்பம் விட்டுக் கொண்டு, ‘‘சாப்பாடு போட்டவன் நீடூழி வாழ்க’’ என்று மூன்று மொழிகளால் — சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் இம் மூன்றிலும் வாழ்த்திவிட்டு மன ஆசுவாசத்துடன் திரும்பினார்கள். ‘‘இந்தக் கிழவனுக்கு ஏகப்பட்ட கடன், சொத்து சுதந்திரம் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் ஆடம்பரத்தில் குறைச்சலில்லை. இந்தக் காலத்தில் ஆயிரம் ரூபாயாவது செலவழிந்திருக்கும்? எங்கு கடன் வாங்கினானோ! வேணும் அவனுக்கு’’ என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு போனார்கள் சாத்தனூர் சர்வமானியத் தெருவில் வசிப்பவர்கள்.

இதற்கு ஒன்றிரண்டு விலக்குகளும் உண்டுதான். போஸ்ட் மாஸ்டர் நாணு ஐயர், பணக்காரராக இருந்து நொடித்துப் போயும் மனம் குன்றாத சாம்பமூர்த்தி ஐயர், இம்மாதிரி சிலர் உண்டு. ஆனால் பத்து எல்லோரையும் ஒரே மாதிரிதான் நடத்துவார்; பறையமார் சிநேகிதம், விரோதம் என்று அவருக்குப் பாராட்டவே தெரியாது. எல்லோரையும் சமமாக, மனிதர்களாகப் பார்ப்பவர் அவர். மகா வினைக்காரரான ஸ்கூல் மாஸ்டர் மகாலிங்கமும் அவருக்கு ஒன்றுதான். எதிர்வீட்டு ராமச்சந்திரனும் ஒன்றுதான். இதுவே ஊரில் பலரும் பைத்தியம் என்று அவரைக் கருதுவதற்குக் காரணமாக இருந்தது.

சமையல் மற்றும் எல்லா வீட்டுக் காரியங்களும் பத்துவின் மனைவி — பெண் குலமா? அவர் குணம் போக்கு போலவே லக்ஷ்மி தான் என்று நினைக்கிறேன் — ஒண்டியாகச் செய்து கொள்வாள். மூத்தாள் பெண் இரண்டு பேர்

கல்யாணமாகாதவர்கள். நன்றாக வளர்ந்து — குதிரை மாதிரி என்று சொல்வார்கள். நடைபோட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு ஒரு காரியமும் செய்யத் துப்புக் கிடையாது. ஆனால் அவர்களை லக்ஷ்மி கடுமையாக ஒரு சொல்கூடச் சொல்லமாட்டாள். சொன்னால் இளைய தாயார் என்று பட்டம் வந்து விடுமே.

கூடமாட உதவி செய்தது மூத்தாளின் கல்யாணமான முதல்மகளும், அவளுடைய கல்யாணமாகாத பி.ஏ. படித்துக்கொண்டிருந்த பதினெட்டு வயதுப் பெண்ணும்தான். அம்மா பெயர் பாகீரதி. பெண்ணின் பெயர் கமலம். ஒரு நூறு, இரு நூறு பேருக்குச் சமையல் செய்து விருந்தளித்து விட்டார்கள் அவர்கள். மூவரும் ராஜியும், என் ஒன்றுவிட்ட சித்தப்பாவின் மனைவி பட்டுவும் அவர்களுக்கு உதவி செய்ததாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இருக்கலாம்.

•

# 4

‘‘எங்கப்பாவைச் சிலபேர் என் காதில் விழும்படியாகப் பைத்தியம் என்று சொல்கிறார்களே! அது நிஜமா சார்?’’

‘‘யார் அவரைப் பைத்தியம் என்று சொன்னது?’’

‘‘உங்கள் காதில் விழுந்ததில்லையா? அவர் பைத்தியம். அதனால்தான் சொத்தை வைத்து ஆளத் தெரியாமல் நிறைய சொத்துடன் ஆரம்பித்தும் ஏழையாகிவிட்டார் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்.’’

‘‘அவரை ‘Excentric’ என்று சொல்லலாம். பல விஷயங்களில் அவர் மற்ற சாத்தனூர் சர்வமானியத் தெருவினரைப் போல இல்லை. பிறர் நடந்து கொள்கிற மாதிரி தன் விஷயத்தைத் தவிர பிறர் விஷயத்தைப் பற்றிக் கவலைப்படாதிருப்பது என்பதெல்லாம் அவரால் முடியாது. யாருக்கும் வேலைகளுக்கு கூலி குறைத்துக் கொடுக்க அவருக்கு மனசு வராது. ஒரு ரூபாய் கேட்பானானால், ஒண்ணேகால் தருகிறேன் — நன்றாகச் செய்’’ என்பார். இதனாலெல்லாம் அவரைப் பைத்தியம் என்றோ சொல்ல முடியாது.

‘‘அவரை லட்சியவாதி என்று சொல்லலாமா?’’

‘‘லட்சியவாதிதான் அவர். உலகில் லட்சியவாதிகளைப் பைத்தியக்காரர்களாக எண்ணத் தொடங்கி விட்டார்கள் அந்தக் காலத்திலேயே என்று வேண்டுமானால் சொல்லலாம். சற்று பிடிவாதக்காரர். சற்று முன்கோபி. ஆனால் அவர் பிடிவாதத்தினாலும் முன்கோபத்தினாலும் கஷ்டப்பட்டவர் என்று அவர் மனைவியைப் பற்றி வேண்டுமானால் சொல்லலாம். மற்ற யாருக்கும் அவரால் ஒரு தொந்தரவும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. பத்துவைப்போல எல்லோரும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று என் வாழ்க்கையில் பல தடவைகள் நினைத்ததுண்டு. ஆனால் மற்றவர்கள் பலரும் குறுகிய மனத்தவர்களாக, பிறருக்குத் தீங்கு செய்பவர்களாக, தன் காரியத்தையே கவனிப்பவர்களாக இருக்கிறார்களே — என்ன செய்ய? லட்சியம் என்றால் அது என்ன என்று கேட்பவர்கள் அதிகரித்துக் கொண்டிருக்கும் இந்த நாளில் லட்சியவாதியாக இருப்பது பைத்தியக்காரத்தனம்தான்!’’

‘‘அம்மாவைப் பற்றி’’?

‘‘உன் அம்மாவைப்பற்றி எனக்கு நேரடியாக ஒன்றும் தெரிய வாய்ப்பில்லை. என் மனைவி உங்கம்மாவைப் பார்த்துப் பழகிய அளவில் ஒரு சடங்காக ஊரோடு ஒத்துப் போகாத கணவனோடு ஈடு கொடுத்துக்கொண்டு, மூத்தாள் குழந்தைகள் — மூன்றும் பெண்கள் — மூன்றிடமும் நல்ல பெயர் வாங்கிக்கொண்டு படிஇறங்கும் தருணத்தில் குடும்பத்தைக் கட்டிக்காப்பாற்றிய பெருமை உங்கம்மாவுடையதுதான்!

இதற்குள் உள்ளே வந்த ராஜி, ‘‘லக்ஷ்மி என்றால் அந்தப் பெயர் உங்கம்மாவுக்குத்தான் பொருந்தும்’’ என்றாள்.

•

# 5

‘பத்து’ என்கிற பத்மநாபய்யரின் முதல் மனைவி மூலமாகப் பிறந்த குழந்தைகள் மூன்றும் பெண்கள், அவற்றில் இரண்டு கல்யாணத்திற்கிருந்தன. மூத்த மகளுக்கு கலியாணமாகி ஒரு பெண்ணும் பிள்ளையும் இருந்தன. அவள் புருஷன் உள்ளூரிலே ஒரு பள்ளிக்கூட வாத்தியார்.

பத்துவிற்கு இளையாளிடம் பிறந்த முதல் ஆறு குழந்தைகளும் பையன்கள். மூத்தவன் பெயர் ராஜா. அவன்தான் மற்ற குழந்தைகளையெல்லாம் தூக்கி வைத்துக்கொண்டு வளர்த்துப் பெரியவனாக்கியவன் என்று சொல்லவேண்டும். பத்து அதிகமாகக் குழந்தைகளைச் சீராட்டிப் பாராட்டிக் கொஞ்சமாட்டார்; அவருக்கு நேரம் கிடைக்காது என்பது மட்டுமல்ல; குழந்தைகளிடமும் அதிகமாக ஈடுபாடும் கிடையாது ஒதுங்கி விடுவார். அம்மாவுக்கோ வீட்டு வேலைகள் ஏராளம். இரண்டு கட்டுவீடு, வாசலில் ஒரு கிணறு, கொல்லையில் ஒரு கிணறு, தினமும் வீட்டுப் பேர்வழிகள் பத்துப் பனிரெண்டு பேருடன் — சாப்பிடுவதற்கு தெருவோடு போகிறவர்கள், தெரிந்தவர்கள், தேடி வந்தவர்கள் என்று யாரையாவது நாலு பேரைக் கூட்டிக்கொண்டு வந்து விடுவார்.

நானும், அம்மாவும், பாட்டியும் சாத்தனூரில் பழைய வீட்டைப் புதுப்பித்துக் கொண்டு தங்குவதற்கு முந்தியேகூட நான் சாத்தனூரில் பத்மநாப அய்யர் வீட்டிற்குப் பலதடவை போயிருக்கிறேன். எங்கள் சொல்ப நிலங்களை அவரிடம்தான் குத்தகைக்கு விட்டிருந்தோம். குத்தகைப் பணத்தை வாங்க சிலசமயம் நான் போவதுண்டு. பத்துவிற்கு என் பெயர் ஞாபகம் இராது. ‘‘நாணா வந்திருக்கிறார் — சாப்பாடு போடு’’ என்று நல்ல சாப்பாடும் போட்டு, குத்தகைப் பணமும் கொடுத்தனுப்புவார் அவர்.

குழந்தைகளைப் பெறத்தான் அந்த அம்மாளுக்குப் பொழுது இருந்ததே தவிர அவர்களைக் கவனிக்கப் பொழுது இல்லை. முதலில் ராஜாவைக் கட்டாயப்படுத்தி முதல் இரண்டு குழந்தைகளைத் தூக்கி வைத்துக்கொண்டு விளையாட்டுக் காட்டி சமாதானமாக வைத்துக்கொள்ள வேண்டியிருந்து, பிறகு அவனுக்கு அதுவே வழக்கமாகிவிட்டது. பொழுது போக்காகவும் முழுக்காரியமாகவும் குழந்தைகள் காரியத்தைக் கவனிக்கவும், நன்றாகப் பார்த்துக் கொள்ளவும் ராஜா பழகி விட்டான் என்றே சொல்லலாம்.

முதல் ஆறு பிள்ளைகளுக்குப் பிறகு வரிசையாக இரண்டு பிள்ளைகள் பிறந்தன லக்ஷ்மியம்மாளுக்கு. அதற்குப் பிறகு ஒரு பிள்ளை. அவன்தான் தியாகராஜன். அது 1933ஆம் வருஷம் என்று நினைக்கிறேன். 1933தான். அந்த வருடம்தான் ராஜி எங்கள் வீட்டிற்கு வந்தாள். தியாகராஜன் என்கிற தியாகுவிற்குப் பிறகு அந்த அம்மாளுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை. வீடு இதற்குமேல் தாங்காது என்ற நினைப்பும் இருக்கலாம். அல்லது அந்த அம்மாள் உடம்பு ஒன்பது பிள்ளைகளுக்கு மேல் தாங்காது என்று டாக்டர் சொல்லியிருக்கலாம். பத்து விருத்தியை நிறுத்திக் கொண்டார்.

அந்த வருஷம் ராஜா கும்பகோணம் காலேஜில் இண்டர்மீடியட் இரண்டாவது ஆண்டு படித்துக் கொண்டிருந்தான் என்று ஞாபகம். கடைசிக் குழந்தைகள் மூன்றையும் கவனித்துக் காலையில் தூக்கி வைத்துக் கொண்டிருந்துவிட்டு பரக்கப்பரக்க அரை வயிறு சாப்பிட்டு விட்டு, ஐந்து மைல்கள் நடப்பதற்கு ஒரு மணி நேரம் வைத்துக் கொண்டு ஒன்பது மணிக்குக் கிளம்பி காலேஜுக்குப் போவான். நடைதான். சைக்கிள் வாங்கித் தந்திருக்கலாம், சைக்கிளில் போனால் பையன் விபத்துக்குள்ளாகி விடுவான் என்று பத்துவிற்கு பயம். மூன்றாவது பையன் தலைப்பட்டு காலேஜுக்குப் போக ஆரம்பித்தவுடன்தான் அவர் சைக்கிள் வாங்க சம்மதித்தார் என்று எனக்கு நினைவிற்கு வருகிறது.

•

# 6

“எங்கண்ணாவும் சிலசமயம் பைத்தியக்காரர் மாதிரி நடந்துகொள்வான் என்று அந்த நாட்களில் அவரைத் தெரிந்தவர்கள் சொல்கிறார்களே?”

“அவனும் கொஞ்ச விஷயங்களில் ‘Excentric’ என்றுதான் சொல்ல வேண்டும். அவனுக்கு எப்போதும் அந்த நாட்களில் நான் அறிந்தவரையில் ஒரு தார்மீகமான கோபம். தன் அப்பா தன் காரியங்களைக் கவனித்துக்கொண்டு மற்றவர்களைப் போல இல்லையே என்று வருத்தம். இரண்டு வருடங்களுக்கொரு குழந்தையாகப் பெற்று தன் தலையில் கட்டி விடுகிறாரே என்று கோபம். அம்மாவைப் போட்டு உதவியில்லாமல் இரவு பகல் வேலை வாங்கிக் கொண்டிருக்கின்றாரே என்று ஆத்திரம். படிப்பில் ஈடுபாடிருந்தும் படிக்க முடியவில்லையே என்று ஆதங்கம். எல்லாமானதும் அவர் பெரியப்பா ஒருவர் அடிக்கடி வந்து உதவி செய்வதற்குப் பதிலாக கிடைத்ததையெல்லாம் வாரிக்கொண்டு போகிறாரே என்று வருத்தம்.

“இத்தனைக்கும் மத்தியிலும் நன்றாகப் படித்தானில்லையா அவன்?”
“நன்றாகத்தான் படித்தான்”.

“இப்பொழுது அவனை ‘Excentric’ ஆகக்கூடச் சொல்ல முடியாது. சாதாரண, பணம் சேர்த்துக் கொள்வது, தன் குடும்பத்தைப் பார்த்துக்கொள்வது என்கிற மாதிரி மாறியிருப்பான்.”

“இது நல்லதுதான் என்றும் சொல்லலாம். நன்றாக இல்லை என்றும் சொல்லலாம்.”

•

# 7

பார்ப்பதற்கு யாருடைய மனதையும் கவரக்கூடிய குழந்தை; கண்களையும்தான். தெருவில் 'பத்து' ஐயரைப் பிடிக்காதவர்கள் வீட்டில்கூட தியாகுவைக் கொண்டு வந்து வைத்துப் பாராட்டுவார்கள். அதுவும், கல்யாணத்திற்கு இருக்கும் பெண்களும், புதிதாகக் கல்யாணமாகிப் புக்ககத்திற்கு வந்திருக்கும் பெண்களும், புக்ககத்திற்குப் போய்விட்டு முதல் தடவையாக அம்மா வீட்டிற்கு வந்திருக்கும் பெண்களும் தியாகுவை வெகுவாகத்தான் கொண்டாடினார்கள்.

ஒரு வீட்டுக்குத் தூக்கிப் போனார்களானால் அங்கிருந்து அடுத்த வீடு, அதற்கடுத்த வீடு, எதிர்வீடு என்று பல வீடுகள் தாண்டிவிடுவான். "எங்க தியாகு உங்காத்திலே இருக்கிறானா?" என்று கேட்டுக்கொண்டு ஒவ்வொரு நாளும் பத்துவின் பத்து பையன்களில் ஒருவனாவது ஒவ்வொரு வீட்டிற்கும் போய் வருவான். இதில் பத்துவோ, லக்ஷ்மியோ தேடிக்கொண்டு வரமாட்டார்கள்.

ஆனால் பத்து ஐயர் மற்ற கிராமத்து பிராமணர்கள் போல ஒவ்வொரு வீட்டுத் திண்ணையிலும் போய் துண்டைப் போட்டுப் பேசிக்கொண்டிருக்க மாட்டார்.

தெருவிலிருந்த இருபது இருபத்தியைந்து வீடுகளிலும் அநேகமாக ஒவ்வொரு நாளும் ஏறியிறங்கித் துண்டைப் போட்டு, திண்ணையில் சாய்ந்து கொண்டிருந்துவிட்டு வருபவர் அதிகமாக ரிடையர்டு போஸ்ட் மாஸ்டர் நாணா ஐயர்தான். பல தடவைகள் துண்டை எங்கே விட்டோம் என்று தெரியாது — சாயங்காலம் மறுபடி ஒருதரம் வீடு வீடாகப் போய் தேடிக் கண்டுபிடித்து எடுத்துக்கொண்டு வந்துவிடுவார்.

நாணாவிற்குப் பொடி போடுகிற பழக்கம். யார் கும்பகோணத்திற்குப் போகிறேன் என்று கிளம்பினாலும் "கால் ரூபாய்க்கு எனக்கு ஒரு மட்டை பட்டணம் பொடி வாங்கிண்டு வந்து தாயேன்" என்று சொல்லிக் கால் ரூபாயைக் கொடுத்து விடுவார். அவருக்குப் பணத்தட்டுப்பாடு கிடையாது. பென்ஷன் வந்து கொண்டிருந்தது. குடும்பபாரம் அதிகம் கிடையாது. ஒரு பெண் — கலியாணம் பண்ணிக் கொடுத்துவிட்டார். அவள் கணவனுடன் டில்லியில் இருக்கிறாள். அவளுக்கு இரண்டு குழந்தைகள் — ஒரு பையனும் பெண்ணும்

இருக்கிறார்கள். அது தவிர ஒரே ஒரு பிள்ளைதான். பிள்ளை பெயர் சாமா. பி.ஏ. படித்துவிட்டு வேலைக்குப் போகமாட்டேன் என்று சொல்லிக்கொண்டு, சுதந்திர வாழ்வே சுகமான வாழ்வு என்று சொல்லிக்கொண்டு, கதைகள் எழுதிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான்.

தன் பிள்ளையைப்பற்றி அப்பாவிற்கு எல்லையில்லாத பெருமை. அவன் கதைகள் எங்காவது அபூர்வமாகப் பேப்பரில் வந்துவிட்டால் அதைத் தூக்கிக்கொண்டு வீடு வீடாகக் காட்டிக்கொண்டு ஒரு சுற்று சுற்றிவருவார். மற்றவர்களுக்கு கதையெழுதுவது பற்றியோ, கதை படிப்பவர்கள் பற்றியோ அதிகமான ஈடுபாடு கர்வம் கிடையாது. அதை அவர்கள் ஒரு பெருமையாகவும் கருதுவதில்லை. பையன் அப்பாவிடம் சொல்லிப் பார்த்தான். ‘‘இப்படிச் செய்யாதே! எனக்கு அவமானமாக இருக்கிறது" என்று அவர் கேட்பதாக இல்லை.

பத்து ஐயருக்கும், நாணாவிற்கும் ஐம்பது வருஷத்து சினேகிதம். நாணா அதே தெருவில் பிறந்து, வளர்ந்து பெரியவனானவர். பத்து எட்டாவது வயதில் கும்பகோணம் ‘டம்பீர்’ தெருவிலிருந்து சாத்தனூரில் ஸ்வீகாரமாய் வந்தவர். அவர் பிறந்த இடத்திலும் ஏழை என்று சொல்ல இயலாது, சொந்த மாமாவுக்குத் தான் ஸ்வீகாரம். முப்பது, நாற்பது ஏக்கருக்கு புஞ்சைக்கு சர்வமானியத் தெருவிலுள்ள ஒரு வீட்டுக்கு ஸ்வீகாரம். சொத்தை சொந்த முயற்சியால் சரசரவென்று செலவு செய்துகொண்டே வந்தார். அது ஒன்றும் சிரமமாக இருக்கவில்லை. ஏனென்றால் அவர் பெரிய சம்சாரி தாராள மனப்பாங்கு உடையவர். தியாகு பிறந்தபோது நாற்பது ஏக்கரா நிலம் ஆறேழுக்கு வந்துவிட்டது. அப்படியொன்றும் கெட்ட பழக்கங்கள் இருந்தன என்றும் சொல்லமுடியாது. தாராளமாய் இருந்தது ஒன்றுதான் குறை அவரிடத்தில்.

அவருக்கு மூத்தவர் ஒருவர் கும்பகோணத்தில் வக்கீலாக இருக்கிறார். அப்படியொன்றும் சொத்தை வக்கீலும் இல்லை. நிறைய வருமானம் வருவதாகத்தான் சொன்னார்கள். இருந்தும் மாதத்தில் ஒரு தடவையோ, இரண்டு தடவையோ சாத்தனூர் வருவார். தன் தம்பி வீட்டில் சுரண்டிக்கொண்டு போகக் கூடியதையெல்லாம் சுரண்டிக்கொண்டு போவார். வாழைக்காய், வாழையிலை, நார்த்தங்காய், மாங்காய் மற்றும் எலுமிச்சம்

பழம் என்று தம்பியும் எதையும் தனக்கென்று வைத்துக் கொள்ளாமல் கொடுத்து விடுபவர். 'அண்ணா' 'அண்ணா' என்று அந்த அண்ணாவிடம் பயபக்தி அவருக்கு.

இந்த அண்ணாவைத் தவிர அவருக்கு இன்னொரு தங்கையும் உண்டு. அவளும் முக்கியமாய் பலாப்பழ சீசனில்தான் வருவாள். சுரண்டிக்கொண்டு போகத்தான். பணப்பரிசாக யாருக்கும் எதுவும் கொடுக்க பத்துவால் முடியாது. சாமானாக அவர் வழங்கி விடுவார்.

அவர்கள் வந்து போகும்போது ஒவ்வொரு தடவையும் ராஜா எதிர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு அவர்களை ஊரறிய சபித்துக்கொண்டு இருப்பான். அவன் சொன்னால் அவரா கேட்பார்? நிச்சயமாகக் கேட்க மாட்டார். தன் ஆற்றாமையை வெளிப்படுத்திக் கொள்ளும் விதத்தில் தியாகுவை தொடையில் போட்டுத் தட்டிக்கொண்டே பெரியப்பாவையும், அத்தையையும் சபித்துக் கொண்டிருப்பான் ராஜா.

ராஜா கும்பகோணம் காலேஜுக்குப் போய்விட்டு வரும்போது, ஒருவாய்த் தண்ணீர் வேண்டுமானால்கூட அந்தப் பெரியப்பா வீட்டிற்குப் போகமாட்டான். இன்னொரு சித்தப்பா இருந்தார். அவர் மகா கஞ்சன்தான் என்றாலும் அண்ணா வீட்டிற்கு எதையும் சுரண்டிக்கொண்டு போக வரமாட்டார். அவர் வீட்டுக்குத்தான் போவான். சிலசமயம் காபி, டிபன் கிடைக்கும்; சிலசமயம் வெறும் தண்ணீர்தான் கிடைக்கும்.

•

# 8

“என் அத்தைக்கும் பைத்தியம் பிடித்துக் கட்டிப்போட்டு வைத்திருந்தார்களாமே!?”

“நான் பார்த்ததில்லை. அப்படிப்பட்ட ஒரு அத்தை, பத்து வீட்டிலிருந்தாள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.”

“தாங்கள் பார்த்திருப்பீர்களோ என்று நினைத்தேன்.”

“நான் சாத்தனூருக்கு முதல் தடவையாகப் போனது 1924இல். என் அம்மா தஞ்சாவூரில் செத்துப் போனாள்; அவள்கருமத்தைச் சாத்தனூரில் சொந்த வீட்டில்தான் பண்ணவேண்டுமென்று ஒரு மாசம் லீவு எடுத்துக்கொண்டு வந்தார். அப்போதுதான் தெரிந்தது, அந்த அத்தை இறந்து நாலைந்து வருடங்கள் ஆகிவிட்டன என்று சொன்னார்கள்.”

“அதுபற்றி உங்களுக்குத் தெரியுமோ என்று கேட்டேன்.”

“ஒரு பெரிய அறையில், உங்கள் வீட்டில் இரண்டாவது கட்டில் வலதுபக்கம் தாழ்வாரத்திற்கப்பாலிருந்த ஒரு அறையில் நாள் பூராவும் ஒரு தூண்டா விளக்கு எரிந்து கொண்டிருக்கும். அந்த அறையில்தான் உன் அத்தையை இருபது ஆண்டுகளுக்கும் அதிகமாக அடைத்து வைத்திருந்தார்கள். உன் லக்ஷ்மி அம்மா தலையில்தான் அந்த அத்தைக்கு சிசுருஷை செய்யும் பொறுப்பும் விழுந்தது என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

“பைத்தியம் என்றால் என்னமாதிரிப் பைத்தியம் என்று தெரியுமா?”

“பலருடனும் சண்டைக்கும், அடிதடிக்கும் சென்ற பைத்தியம் அல்ல என்றும், அடிக்கடி புடவை, துணிமணிகளை களைந்து போட்டுவிட்டு “அய்யோ, நெருப்பு நெருப்பு” என்று ஓட ஆரம்பித்து விடுபவள் என்றும், தெருவிலே இப்படி ஓடுவது அவமானமாக இருக்கிறதே என்றும் அடைத்து வைத்திருந்தார்கள் என்றும் என் அக்கா — அதாவது என் அப்பாவின் அம்மா — அவளைப் பாட்டி என்று கூப்பிடுவதற்கு பதில் அக்கா என்றுதான் என் வீட்டில் எல்லோரும் கூப்பிடுவோம் — சொல்லித்தான் கேட்டிருக்கிறேன்.”

•

# 9

சாமாவின் தாயார் இறந்த பிறகு அவன் பாட்டிதான் குடும்ப பாதுகாப்பு. அவளுக்கு அப்போது வயது எண்பதிற்கும் மேலிருக்கும். சிட்டுப் போல சிவப்பாக இருப்பாள். மொட்டையடித்து தலையில் துணிபோட்ட விதவை. சிவகங்கைச் சீமையிலிருந்து பத்து வயதில் சாத்தனூரில் புக்ககம் வந்தவள். முப்பது வருஷங்கள் சாத்தனூரில் 'மிடில் ஸ்கூல்' தலைமை உபாத்தியார். வேறு ஒரு தலைமை அல்லது உபாத்தியாரும் அந்தப் பள்ளியில் இருந்தார். கே.சுப்பிரமணிய ஐயருடைய மனைவியாக சீரும், சிறப்புமாக இருந்தாள். அவளுக்கு ஒரு பெண்ணும், மூன்று பிள்ளைகளும் பிறந்தன. நாணாதான் எல்லோருக்கும் மூத்தவன். மதுரம் என்கிற பெண் இரண்டாவது. மற்றவர்கள் இருவரும் பின்னால் பிறந்தவர்கள்.

எல்லோருக்கும் அக்காவாகப் பாட்டி நாற்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக விதவையாகக் காலம் தள்ளி வருகிறாள்.

அவளுக்கு ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரியாதிருந்ததே தவிர நல்ல கேள்வி ஞானம் உண்டு. வீட்டில் நடந்த நடுப்பள்ளி வகுப்புகளில் கார்த் வெயிட் ரீடர்கள் என்பதிலிருந்து தன் புருஷன் தன் வகுப்புப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது சமையல் அறையிலிருந்தபடியே கமலா கேட்டுக் கொண்டிருந்திருக்கிறாள். பாடங்கள் யாவும் அவளுக்கும் இரண்டொரு வருடங்களிலேயே மனப்பாடமாகி விட்டன. அவளேகூட சொல்லிக் கொடுக்கக்கூடிய அளவிற்கு ஆங்கிலம் தெரியும். ஆனால், தெரியும் என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் காட்டிக்கொள்ள மாட்டாள். பெண்களுக்கு ஆங்கிலம் தெரிவது சரியல்ல என்று ஏதோ ஒரு தப்பான நினைப்பு.

இந்த அக்காவிற்கு இன்னொருவிதத்தால் அனுபவம் அதிகம். அவள் சின்னப்பிள்ளைகளில் மூத்தவன் — கிருஷ்ணசாமி என்று பெயர். வீட்டில் சின்ன வயதில் ஏதோ அல்ப காரணத்திற்காகக் கோபித்துக்கொண்டு மெட்ரிகுலேஷன் பரீட்சை எழுதிவிட்டு வீட்டை விட்டு ஓடிவிட்டான். ஒரு பத்து, பனிரெண்டு வருடங்கள்வரை ஒரு தகவலும் இல்லை. பின்னர் பெரும் பொருளீட்டும் வியாபாரியாய் லாகூரிலிருந்து வந்து, கலியாணம் செய்து கொண்டு, கூட உதவுவதற்கு அக்காவையும் அழைத்துக்கொண்டு போனான். இரண்டு

ஆண்டுகள் அக்கா லாகூரில் இருந்து குளிரில் ஒரு விரலைப் பறிகொடுத்து விட்டு வந்திருந்தாள்.

பின்னர் மூன்றாவது பிள்ளைக்கும் வடக்கே கல்கத்தாவில் வேலையாகி அவள் கல்கத்தாவிற்கும் போய் இரண்டொரு வருஷங்கள் இருந்து விட்டு வந்தாள். இந்த மூன்றாவது பிள்ளை சாமாவின் மனைவிக்கு பிறந்தகம் என்று சொல்லிக்கொள்ள இடம் கிடையாது. அதனால் உற்சவத்திற்கு, மற்றும் லீவுகளுக்கெல்லாம் அவள் — அவள் பெயர் பாகிரதி — நாணா வீட்டிற்குத்தான் வருவாள். அக்கா வீட்டுக்குச் செல்ல வேண்டும்; அக்காவையும் உட்காரவைத்துச் செய்வாள் பாகிரதி. சாமாவும் — அதாவது நாணாவின் பிள்ளை சாமாவும் வேலையொன்றும் செய்வதில்லை என்று ஏற்பட்டுப் போனவுடன் அடிக்கடி தன் சித்தப்பா சாமா வீட்டிற்குக் கல்கத்தாவுக்கு வருவான். அங்கே இம்பீரியல் லைப்ரரியில் அவனுக்கு இங்கெல்லாம் கிடைப்பதைவிட அதிகமாகப் புதுப் புத்தகங்கள் கிடைப்பதாக அவன் சொல்வான்.

தியாகராஜன் வளர்ந்து மூன்றாவது வயதையெட்டும் மட்டும் ராஜா சென்னைப்பட்டணத்தில் பிரசிடென்ஸி காலேஜில் இலக்கியம் படிக்கச் சென்று விட்டான். நாணாவின் தம்பிகள் குழந்தையைப் பார்த்துக் கொண்டாலும்கூட அவர்களுக்கு அவ்வளவாகக் குழந்தையிடம் ஈடுபாடில்லை. நடக்கத் தெரிந்தபின் தைரியமாக கிளம்பி தத்தக்கா பித்தக்கா என்று நடந்து சாமா வீட்டுக்குப் போய்விடுவான் தியாகு. அக்காவுக்கு அவனிடம் ரொம்பவும் ஈடுபாடு. ராஜியும் அவனை எடுத்து வைத்துக்கொண்டு கொஞ்ச ஆரம்பித்து விட்டால் சமையல் காரியங்களைக்கூட மறந்துவிடுவாள். கல்கத்தாவிலிருந்து பாகிரதி வந்திருந்தால் தியாகு விளையாட அவள் குழந்தைகள் இருக்கும். பாகிரதியின் மூத்த பையனுக்கு அப்போது நான்கு வயதிருக்கும், இரண்டாவது பெண்ணுக்கு இரண்டரை வயதிருக்கும். நாணாவின் வீட்டில் நண்டும் சிண்டுமாக வீடு கலகலப்பாக இருக்கும்.

-

## 10

நான் என் பாகிரதி சித்தியைக் கல்கத்தா கொண்டுபோய் விட்டுவிட்டு ஒருமாதம் போல் அங்கு தங்கிவிட்டு மீண்டும் சாத்தனூர் வந்தபோது காலேஜ் விடுமுறைக்குப் பத்துவீட்டு ராஜா சாத்தனூர் வந்திருந்தான்.

முதல் இரண்டு நாட்கள் நான் அவனைப் பார்க்கவில்லை. வீட்டிலே அப்பாவுடன், அக்காவுடன் பேசிக் கொண்டிருப்பதில் போய்விட்டது. மூன்றாவதுநாள் காலை காவேரியில் குளிக்கலாம் என்று கிளம்பி பத்து வீட்டைத் தாண்டிப் போகும்போது ராஜா வாசலில் தன் கடைசித் தம்பி தியாகுவுடன் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டுப் போனேன்.

போனவுடன் முதலில் கண்ணில்பட்டது வீட்டுச் சுவர்களில் எல்லாம் எழுதியிருந்த ஆடு, கோழி, யானை படங்கள்தான். "இது என்ன எக்ஸிபிஷன்?" என்று கேட்டதும் "தியாகு வரைந்த படங்கள் இத்தனையும்! He is becoming a great artist!" என்றான் ராஜா.

தியாகுவிற்கு பள்ளிக்கூடம் போக வயது வந்தாகவில்லையென்று எண்ணுகிறேன்; அவனைப் பள்ளிக்கூடத்திற்கு இன்னும் அனுப்பவில்லை.

"நன்றாகப் படம்போட வருகிறாப்போல இருக்கே, Artist ஆக அவனுக்கு சான்ஸ் கொடுத்தால்..."

"அதெல்லாம் ஏது? சாத்தனூர் எலிமெண்டரி ஸ்கூலில் சேர்த்து விடுவதுதான் சரி. அடுத்த வருடத்திலிருந்து பள்ளிக் கூடம் போகிறான்" என்றான் ராஜா.

"உன் படிப்பெல்லாம் எப்படியிருக்கிறது?" என்று கேட்டேன்.

ராஜாவிற்கு ஆங்கில ரொமாண்டிக் கவிகளிடம் அந்தக் காலத்தில் பலருக்கும், ஒரு நூறு வருஷங்களாகவே இந்தியா பூராவிலும் இருந்து வந்திருக்கிற மாதிரி ஒரு ஈடுபாடு; எனக்குச் சில ஆண்டுகளுக்கு முன் பேராசிரியராக இருந்தவர் ஒருவர்தான் ராஜாவுக்கும் பேராசிரியர்.

இந்த பேராசிரியர் ஆக்ஸ்ஃபோர்டு சர்வகலாசாலையில் பட்டம் பெற்றவர்.

தான் படித்த சர்வகலாசாலையில் அவருக்கு மேலே முதல் பேராசிரியராக கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் படித்தவரைக் கொண்டு வந்து நியமித்துவிட்டார்கள் என்பதற்காக வருத்தத்துடன் ராஜிநாமா செய்துவிட்டு

வேறு கல்லூரிக்குப் போய் விட்டார். ஆக்ஸ்ஃபோர்டிற்கும் கேம்பிரிட்ஜிக்கும் பல நூற்றாண்டுகளாக இங்கிலாந்தில் போட்டி அது. இந்தியாவிலும் பரவியிருந்தது. ஆங்கிலேயர்களை மிகவும் நெருக்கமாகப் பின்பற்றும் பழக்கம் வியாபித்திருந்த காலம் அது.

பேராசிரியரைப் பற்றி சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்தோம். தியாகு "கண்ணா, கண்ணா பல்லக்கு," என்றான். சுவரில் ஒரு பல்லக்கை நாலுபேர் தூக்கிக் கொண்டிருக்கிற மாதிரி வரைந்து இருந்தான் பையன். பல்லக்கு காலியாக இருந்தது. "பல்லக்கு காலியாக இருக்கிறதே! அதில் யார் வருவார்கள்?!" என்று கேட்டதும் பளிச்சென்று, "ராஜிமாமி" என்று பதிலளித்தான் தியாகு. எனக்கு மிகவும் திருப்தியாக இருந்தது. படம் போடத் தெரிந்தது மட்டுமில்லை. சாதுர்யமாகப் பேசவும் தெரிந்தது.

"உன் மன்னி வரட்டுமே!" என்றாள். பையனுக்கு மன்னி யார் என்று தெரியவில்லை. "போடீ மன்னி வேண்டாம் அவ்வா ராஜிமாமியே வரட்டும்".

நான் குளிக்கக் கிளம்பினேன். "மாமா குளிக்கப் போறதைப் படம் போடட்டுமா?" என்றான் தியாகு, போட்டான் — யார் பர்மிஷனுக்கும் காத்திராமல் சோப்புப்பெட்டி என்னைவிடப் பெரிதாக இருந்தது. ஆனால் கொஞ்சம்தான் பெரிதாக இருந்தது — ரொம்பவும் பெரிதாக இல்லை.

•

## 11

“உங்களுக்குப் பைத்தியக்கார அனுபவம் நிறைய உண்டா?”

எழுத்தாளன் என்றாலே பைத்தியக்காரன் என்றுதானே அர்த்தம்? நான் எழுத்தாளனாக இருப்பதே எனக்குப் பித்தம் தூக்கி அடிப்பதனால்தான்.”

“அது சரி. கவிகள், காதலர்கள், பைத்தியக்காரர்கள் என்று ஷேக்ஸ்பியரே சொல்லியிருக்கிறான்! அதைச் சொல்லவில்லை நான்.”

“வேறு...”

“உங்கள் வீட்டில் பைத்தியம் என்று சொல்லும்படியாக யாரும் இருந்ததில்லையா?”

“இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் எங்கப்பா பல சமயங்களில் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போல இருக்கிறது’ என்று சொல்லிக்கொள்வார். எனக்குப் பல சமயங்களில் பைத்தியம் பிடிக்கும்போல இருப்பதாக நான் நினைத்ததுண்டு.”

“அப்படியானால் என்னைத் தவிர உங்களூரில் பைத்திய அனுபவம் முன்னே பின்னே கிடையாது என்று சொல்லுங்கள்.”

“நீ பைத்தியம் என்று உன்னையே நினைத்துக் கொள்கிறாயா!”

“ம்...ம்...”

“தான் பைத்தியம் என்று நினைப்புள்ளவன் நிச்சயமாகப் பைத்தியமாக இருக்கவே முடியாது.”

“அப்படியா? நிஜமாகவா...?”

•

# 12

என் மனைவி ராஜியைக் கொண்டுபோய் அவள் பிறந்தகத்தில் விட்டுவிட்டு நான் சென்னையில் ஒரு டைப்ரைட்டருடன் குடியேறினேன். தங்கசாலைத் தெருவில் ஒரு ஹோட்டலில் — அதற்கு ஹிண்டு ஹோட்டல் என்று பெயர் என எண்ணுகிறேன் — குடியேறினேன். ஜர்னலிஸம் பண்ணி பத்திரிகைகளுக்குத் தாராளமாக எழுதி ஏராளமாகச் சம்பாதித்துவிடுவதாக நினைப்பு. சம்பாத்தியம் எதுவும் வரவில்லை என்பது மட்டுமல்ல. என் சிறப்பான எழுத்துகளையும் ஒருவரும் போடக் கூடமாட்டேன் என்றார்கள். என் சிறப்பான எழுத்துகளைத் திருப்பியனுப்பிவிட்டு மட்டமான எழுத்துகளை மட்டும் வடிகட்டிப் போட்டார்கள். ஆனால் என் எழுத்துகள் போட்டவரையில் திருப்தியாக இருந்தது. சொல்ப அளவில் புகழும் பெருமையும் தேடித்தந்தது.

பட்டணத்தில் இருந்தபோது சிலசமயம் நான் சாத்தனூர் பத்து ஐயர் பிள்ளை ராஜாவைத் தேடிக்கொண்டு போவேன். அவனும் சிலசமயம் என் ஹோட்டல் ரூமுக்கு வருவான். அவன் பி.ஏ. ஹானர்ஸ் இரண்டாம் வருடம் படித்துக் கொண்டிருந்த போது அவனுக்கு அவன் தாய் கட்டாயப்படுத்திக் கலியாணம் செய்து வைத்துவிட்டார். மீனா என்று பெயர் அந்தப் பெண்ணுக்கு. இந்தப் பெண்ணுக்கு வயது பனிரெண்டு ஆகவில்லை. அவசரம் என்னவென்றால் அவள் பாட்டி ‘‘இப்போ, அப்போ’’ என்று கிடந்தாள். பேத்திக்குக் கலியாணம் பண்ணிப் பார்த்துவிட்டுச் சாக வேண்டும் என்று அவளுக்கு ஆசை. சாத்தனூர்ப் பெண்தான். கலியாணம் காரைக்காலில் நடந்தது. நானும்கூடப் போயிருந்தேன் கலியாணத்திற்கு.

சாதாரணமாக இலக்கியத்தைப் பற்றித்தான் பெரும்பாலும் பேச்சிருக்கும் எனக்கும் ராஜாவிற்கும் இடையே. நடுநடுவில் தியாகுவைப் பற்றிய பேச்சும் வரும். இருவருக்கும் அவனைப் பற்றி ஒரு ஈடுபாடு. நன்றாகப் படிக்கிறான் என்றும். அப்பாவுக்குச் செல்லப் பிள்ளையாக இருக்கிறான் என்றும், அவனைத் தன்னைவிட்டு நகர விடாமல் பார்த்துக் கொள்ளுகிறார் அப்பா என்றும் அவனை ஒன்றும் செய்யவிடாமல் குட்டிச்சுவராக்கி விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பார் அப்பா, போல இருக்கிறது என்றும் ராஜா சொன்னான். எனக்கு வருத்தமளித்தது இந்த செய்தி.

அடுத்த தடவை சாத்தனூர் போய்விட்டு சென்னை திரும்பும்முன் நான் தியாகுவையும், அவன் அப்பாவையும் பலமுறை சந்தித்தேன். அப்படி ஒன்றும் அவர்கள் நெருக்கமாக இருப்பது போலவோ, தியாகு குட்டிச்சுவராகிவிடப் போவது போலவோ எனக்குத் தோன்றவில்லை. ராஜா எதையோ நினைத்து எதையோ மிகைப்படுத்திக் கூறுகிறான் என்று தோன்றியது. ஆனால் அவனைச் சந்தித்தபோது அவனிடம் நான் எதுவும் சொல்லவில்லை.

•

## 13

“பைத்தியம் பிடிக்கிற காரியம் எப்படி நடக்கிறது? எதனால் நடக்கிறது? என்று நீங்கள் ஏதாவது நூல்களைப் படித்துத் தெரிந்து கொண்டிருக்கிறீர்களா?”

பிரத்யேகமாக எதுவும் படித்ததாக நினைவில்லை. ஆனால் பைத்தியம் என்று சொல்லக்கூடிய நாயக நாயகிகளைச் சில நூல்களில் படித்திருக்கிறேன்.”

“என்ன நூல்கள்? உதாரணமாக ஏதாவது?”

“ஆகஸ்ட் ஸ்டிரிண்ட்பெர்க் என்பவர் எழுதிய நாவல்களில் சில பைத்தியம் பிடித்த, பிடிக்க வைக்கிற தரத்தில் உள்ளவை. மிழிதிணிஸிழிளி — நரகம் என்று ஒரு நாவல்... ஒரு பைத்தியத்தின் நாட்குறிப்புகள்.”

“இப்பெண்ணையும்விடப் பெரிய நாடகாசிரியன் என்று அவரைப்பற்றி எப்பொழுதோ படித்த நினைவு இருக்கிறது. வேறு எந்த நூலும் பைத்தியங்களைப் பற்றி படித்ததாக நினைவில்லை. அது மாதிரி வேறு ஏதாவது...”

‘டான் கிவி ஹோட்டே’ யில் ஒரு சாதாரண மனிதனின் மனது உடைந்து பைத்தியமாகிற வழிகளைப் பார்க்கலாமே!”

“ஆமாம். சற்றேறக்குறைய பைத்திய எல்லையை ஒட்டியது தான் அது. பைத்தியத்தையே பைத்தியமில்லாமையாகக் காட்டிய மேதை.”

“பைத்தியமில்லாததைப் பைத்தியமாக்கிக் காட்டுபவர்கள் தான் அதிகம்” என்றேன்.

“ஏன்?”

“அது சுலபமாகத் தெரிகிறது!”

•

## 14

தியாகராஜனுக்கு ஐந்தாறு வயது நடந்துகொண்டிருக்கும் போதுதான் எல்லோரும் (அதாவது என் அப்பா, பாட்டி தவிர நான், என் மனைவி) சாத்தனூர் விட்டுக் கிளம்பிப்போய் விட்டோம்.

பணக்காரராக இருந்து நிறையப்பணம் சம்பாதித்து என் அப்பாவுக்கு, அவர் தன் பெண் பாப்பாவுக்குக் கலியாணம் தடபுடலாகச் செய்யப் பணம் தந்த, என் சித்தப்பா கிருஷ்ணசாமிக்கு வியாபாரத்தில் ஏராளமாக நஷ்டம் ஏற்பட்டு, பாகப்பிரிவினையாகாத சொத்தை ஜாமீனாகக் கொடுத்து, அவர் யாரிடமோ பணம் கடனாக வாங்கி விட்டார். அந்தக் கடனுக்காக, கோர்ட்டில் கேஸ் நடந்து, தாம் வாழ்ந்த வீட்டையும், இருந்த சொல்ப நிலத்தையும் விற்க அவர்களுக்குக் கட்டாயம் ஏற்பட்டதும், சாத்தனூர் வாழ்வு போதுமென்று அப்பா தீர்மானித்து விட்டார்.

கிராமத்தை விட்டால் எங்கே போவது? தமிழனுக்குத் தெரிந்த ஒரே போக்கிடம் பட்டணம்தானே? ‘கெட்டும் பட்டணம் சேர்’ என்று, அதனால்தானே சொல்கிறார்கள்! எனக்குக் கெட்டது வருகிறதோ வரவில்லையோ எங்களுக்கு பென்ஷன் வந்து கொண்டிருந்தது. பணக்காரர்களாக இல்லாவிட்டாலும் சுமாராக ஜீவனம் நடக்கும். இடையில் அக்காவும் பட்டணம்போன புதுசில் தனது தொண்ணூற்றி இரண்டாவது வயதில் காலமாகி விடவே என் குடும்பத்தில் நாங்கள் மூன்று பேர்தான். அப்பா, நான், என் மனைவி இதையெல்லாம் விவரமாகச் சொல்லிக் கொண்டிருக்க இந்தக் கதைக்கு அவசியமில்லை. ஆனால் என்ன நடந்தது தெரியவேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

நான் ஆங்கிலத்தில் எழுதுவதை நிறுத்திவிட்டுத் தமிழில் எழுதத் தொடங்கினேன். உடனே என் அப்பாவிற்கு கோபம் வந்துவிட்டது. “தமிழில் பழம் பெருமைகள் உண்டு. தமிழில் பணம் இல்லை; ஆங்கிலத்துக்குத்தான் எதிர்காலம்” என்பது அவர் கட்சி. எதிர்காலம் உண்டோ இல்லையோ தமிழில் எழுதுவது — தான் தமிழனாகிய எனக்கு நியாயம் என்று நான் சண்டை போட்டுப் பார்த்தேன். அவர் தான் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தார்.

நான் சொல்ல வேண்டியதை மாற்றி மாற்றி வெவ்வேறு விதங்களாகச் சொல்லிக் கொண்டு வந்தேன்.

பேச்சு கொள்கை, விவாதம் என்று நின்றிருந்தால் அதோடு போயிருக்கும். ஆனால் நான் பத்திரிகை போடுகிறேன் — அதுவும் தமிழில் பத்திரிகை போடுகிறேன் என்று ஆரம்பித்து அப்பா பணத்தில் பத்தாயிரம் பதினைந்தாயிரம் என்று செலவு செய்து விடவே அப்பா பணத்தைக் காபந்து பண்ணிக்கொண்டு ஊருக்குக் கிளம்பி விட்டார். கல்கத்தாவிலிருந்த சித்தப்பா, அவர் மனைவி இறந்தபிறகு தன் குழந்தைகள் படிப்பதற்காக என்று குற்றாலத்தில் ஒரு குடித்தனம் போட்டிருந்தார். வீட்டுக்குப் பெரியவராக, அப்பாவுடைய தங்கை மதுரத்தம்மாள் வந்து குடும்பத்தைப் பார்த்துக் கொண்டாள். சாமா சித்தப்பாவுடைய மனைவி, நான் தமிழ் பத்திரிகை நடத்திக் கொண்டிருந்த ஆறு மாதத்தில், ஒருமாதம் இறந்து விட்டாள். சாமா அவசர அவசரமாக இரண்டாவது கலியாணம் செய்துகொண்டு, இரண்டு பிள்ளைகள் பிறந்ததும், பெண்டாட்டியுடன் அதே அவசரத்துடன் சண்டை பிடித்துக்கொண்டு பிள்ளையையும் விட்டுவிட்டுப் போய்விட்டான். இதுவும் வேறு கதை. இந்தக் கதைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

இதற்குள் எனக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அப்பாவுக்குத் தன் தம்பியுடனும் தங்கையுடனும் இருக்க அவ்வளவாகப் பிடிக்கவில்லை. கொஞ்சநாள் என்னுடன் சிதம்பரத்தில் வந்து தங்கியிருந்தார் அப்போது ஒருதரம் சாத்தனூர் பத்து என்று சொல்லப்பட்ட பத்மநாப ஐயர் வந்து ஒரு நாள் என்னுடனும் அப்பாவுடனும் இரண்டு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். ராஜா நன்றாகத் தேறி வெளிமாகாணத்தில் ஒரு நல்ல காலேஜில் ஆங்கிலப் பேராசிரியராக நல்ல பெயர் வாங்கிக் கொண்டிருந்தான். அவனுக்கு ஆக்ஸ்ஃபோர்ட் போய்ப் படிக்க ஆசை. தான் உசிருடன் இருக்கிற வரையில் வேண்டாமென்றும் தான் செத்தபிறகு போகலாம் என்றும் சொல்லிவிட்டதாகப் பெருமையுடன் சொன்னார் பத்து. எனக்குக் கோபம் கோபமாக வந்தும் நான் ஒன்றும் சொல்லவில்லை. மற்ற பிள்ளைகளும் நன்றாகப் படித்து பாஸ் பண்ணி வேலை தேடிக் கொண்டிருந்தார்கள். அல்லது வேலையில் இருந்தார்கள். தியாகு கும்பகோணத்தில் காலேஜில் பி.ஏ., கெமிஸ்டிரி படித்து முடித்துவிட்டு

ஆங்கில இலக்கிய ஹானர்ஸ் போகப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறான். தனக்கு சம்மதமில்லை என்று சொன்னார் பத்து.

கடைசியாகத்தான், பத்து ஒரு தூரத்துச் செய்தியாக தன் மனைவி அதற்கு முந்திய வருஷம் இறந்துவிட்டதைச் சொன்னார். அவளைப் பற்றிய செய்தி வந்ததற்குக் காரணம் அவள் அவருடைய வாழ்க்கைக்கு உண்மையிலேயே கடைசியாகவும், ஆரம்பமாகவும் இருந்ததுதான். தன்னில் ஒரு பகுதியாகவும் என்று அவர் அவளை எண்ணியிருக்கக்கூடும். தனியென்று நினைப்பு இல்லை. இந்தப் பேச்செல்லாம் அப்பாதான் அதிகமாகப் பேசிக் கொண்டிருந்தார். நான் அதிகம் பட்டுக் கொள்ளவில்லை. இரண்டு பெரியவர்கள் கிழவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது நான் சிறுவன் என்ன சொல்ல...?

இதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தாம்பரத்தில் வீடு எடுத்துக்கொண்டு நானும் ராஜியும், என் பெண் பாபுவும் இருந்து வந்தோம். என் தமிழ்ப் பத்திரிகை எழுத்தும் இலக்கிய எழுத்தும், அத்துடன் நடுநடுவே ஆங்கில எழுத்தும் சரிவர நடந்தன. ஏதோ சாப்பிடப்போதுமான அளவிற்கு, சிரமப்பட்டுத்தான் என்றாலும், பணம் வந்து கொண்டிருந்தது. இப்படியே போனால் என்றைக்கோ ஒருநாள் பணக்காரனாகியும் போய்விடலாம் என்கிற நம்பிக்கை நடுநடுவே தோன்றியது போலவும் இருக்கும். சில சமயம் நம்பிக்கைக்கு எதுவும் இடமில்லை போலவும் தோன்றும். மொத்தத்தில் நம்பிக்கை இடமில்லாவிட்டாலும் நம்பிக்கையை வளர்த்துக்கொண்டு மனம் தளராது இருந்ததுதான் அதிகம்.

தாம்பரத்தில் ஒருநாள் கிறித்துவக் கல்லூரியில் ஆங்கில இலக்கிய ஹானர்ஸ் படிப்பதாகச் சொல்லிக்கொண்டு என்னைப் பார்க்க தியாகராஜன் வந்தான். நல்ல உயரமாக, சிவப்பாக, மெல்லிசாக, சிரித்த முகமாக இருந்தான். எனக்கு ஒரே ஒரு பெண்குழந்தைதான். தியாகுவிற்கு இருபது வயதிருக்கும். என் பெண்ணுக்கு வயது ஏழுதான். பத்துப் பனிரெண்டாக இருந்திருந்தால் அவனை என் மாப்பிள்ளையாக செய்துகொள்ள முயன்றிருக்கலாம். அவன் அப்பா பத்மநாப ஐயர் எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் முதல் காரியமாக ‘ஓங்காத்துப் பிள்ளைக்கு கலியாணம் செய்து கொடேன்’ என்றுதான் சொல்வார்; பிள்ளையாக இருந்தால் “எங்காத்துப் பெண்ணுக்குக் கலியாணம் செய்து கொடேன்” என்பார் என்றும் நினைவுக்கு வந்தது.

தியாகராஜன் வாரத்தில் ஒருநாள் அல்லது இரண்டுநாள் என் வீட்டில் ரேடியோ கேட்க வருவான். ஏதாவது ‘வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவிலோ, பி.பி.ஸி’யிலோ இலக்கியப் புரோக்ராம் இருக்கிறது’ என்று வருவான்.

“எவ்வளவு நல்ல பிள்ளை! எப்படிப் படிக்கிறான்! அவாத்துப் பிள்ளைகள் எல்லாமே படிப்பில் துடிதான்" என்று ராஜி சற்றுப் பெருமைப்படுகிற மாதிரியே சொல்லுவாள். அவளுக்குத் தன் தம்பிகள் இந்தமாதிரிப் பிறக்கவில்லையே என்று ஆற்றாமை.

சற்றேறக்குறைய ஏழெட்டு மாதங்கள், வாரத்தில் ஒரு தடவை, இரண்டு தடவை, வீட்டிற்கு வந்திருப்பான். நன்றாகப் படிக்கிற பிள்ளைதான். எப்போதும் இலக்கியத்தைப் பற்றித் தான் பேச்சு. சிலசமயம் தன் நண்பர்கள் ஒன்றிரண்டு பேரை அழைத்து வருவான். நான் பல தடவை அவனை சாப்பிடச் சொன்னதுண்டு. சாப்பிட வரமாட்டான். ஆனால் காபி சாப்பிடுவான் — ரேடியோ புரோக்ராம் கேட்டுக்கொண்டே.

சிலசமயம் ராஜாவைப் பற்றி, மற்றும் தெரிந்தவர்கள் பலரைப் பற்றிப் பேசுவான். அப்போது வெளிவந்திருந்த என் ‘சாத்தனூர் நாவலைப்’ படித்துவிட்டு, ‘என் அப்பா, அண்ணா எல்லோரையும் பற்றி எழுதியிருக்கிறீர்களே உங்கள்மேல் தான் கேஸ் போடவேண்டும்!” என்று விளையாட்டாகச் சொன்னான்.

“கேஸ் போடப்பா! அப்படியாவது என் புஸ்தக விற்பனை கூடுகிறதா பார்க்கலாம். கேஸ், கீஸ் என்று ஏதாவது வந்து, அமர்க்களப்பட்டு பெயர் அடிபட்டால்தான் என் புஸ்தகம் விற்பனையாகும்போல் இருக்கிறது” என்றேன் நானும் விளையாட்டாக.

•

# 15

“என் கை எப்படி நடுங்குகிறது பாருங்கள்!”

“ஏன் இப்படி நடுங்குகிறது?”

“நீங்கள் கேட்டவுடனேயே நின்றுவிட்டது. அதுதான் விசேஷம்.”

“அப்படியா?”

“மருந்து சாப்பிட வேண்டும். ஒரு டம்ளர் வெந்நீர் வேண்டும்.”

ராஜி வெந்நீர் கொண்டு வந்து தந்தாள்.

“நான் எதற்காக அடிக்கடி உங்களை வந்து இப்படித் தொந்தரவு செய்கிறேன் தெரியுமோ?”

“தொந்தரவு ஒன்றுமில்லை, இன்னும் அடிக்கடி வந்து போனாலும் வா.”

“உங்களோடு சற்று பேசிக்கொண்டிருந்து விட்டுப் போனால் மனம் சற்று நிம்மதியாக இருக்கிறது.”

“அப்படியா! சந்தோஷம்!”

“இதே மாதிரிதான் பெரியவர் சங்கராச்சாரியாரிடம் போய், பேசிக் கொண்டே, பார்த்துக் கொண்டோ இருந்துவிட்டு வந்தாலும் மனசில் ஒரு நிம்மதி பிறக்கிற மாதிரி இருக்கிறது.”

“ரொம்ப பெரிய இடத்தைச் சொல்லி என்னையும் சொல்கிறாயே.”

“உபசாரத்திற்கு நான் சொல்லவில்லை. உங்களிடம் வந்து, சற்றுநேரம் உட்கார்ந்திருந்து விட்டுப் போனாலும் அந்த மாதிரி ஒரு நிம்மதி பிறக்கிறது. ஏன் என்று எனக்கே தெரியவில்லை.”

“தினமும் உத்தர சுவாமிமலைக் கோயிலிலோ அல்லது வேறு ஏதாவது ஒரு கோயிலிலோ போய் அரைமணி நேரம் ஒரு மணி நேரம் உட்கார்ந்திருந்து பார்ப்பதுதானே! போகிறபோது கூப்பிட்டால் நானும் வரேன்.”

“கார் ஒன்று வாங்கி விட்டால் தேவலை. ஆனால் நான் கார் ஓட்ட முடியாது. பாரிஸில் நடந்த அந்த விபத்தில் கூட வந்த என் நண்பர்கள் இருவரும் இறந்தபின் நான் கார் ஓட்டாமல் இருப்பது நல்லது என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். ஆனால் லீலா ஓட்டலாம்.”

‘‘லீலா என்பது யார்?’’

‘‘லீலா யார் தெரியாதா? என் மனைவி ஒருநாள் அழைத்துக்கொண்டு வருகிறேன்.’’

இதற்குள் ராஜி வந்து, ‘‘அவசியம் அடுத்த வாரமே உங்கள் மனைவியையும் அழைத்துக்கொண்டு வாருங்கள்’’ என்றாள்.

‘‘வரேன். லீலாவும் உங்களையெல்லாம் பார்க்க வேண்டும் என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறாள். இங்கேயிருந்து பத்து நிமிஷம் பேசிக் கொண்டிருந்துவிட்டு போவது எனக்கு மிகவும் நிம்மதியாக இருக்கிறது வரட்டுமா?’’

வாசலில் இத்தனை நேரமும் டாக்சி காத்துக் கொண்டிருந்தது. ‘‘வழக்கமாக வர்ற டாக்சிதான். மாத வாடகையாகப் பேசிக் கொண்டிருக்கிறேன்.’’

•

# 16

ஒரு பிரபல ஆங்கிலக்கவி ஸ்டீபன் ஸ்பெண்டர் சென்னைக்கு வந்தபோது அவருடைய பிரசங்கம், மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்பார்வை பார்க்கும் பொறுப்பு எனக்குத் தரப்பட்டது.

அவரைத் தாம்பரம் கிறித்துவக் கல்லூரி இலக்கிய மாணவர்களை சந்திக்கவும் அழைத்துப் போனேன். பேச்சுக்குப் பிறகு W.B. Yeats இன் 'The Second Coming' என்கிற கவிதையையும் Gerard Hopkins இன் Glory be to God என்னும் கவிதையும், ஸ்டீபன் ஸ்பெண்டர் வாசித்தது எனக்கு இன்றுகூட மிகவும் பசுமையாக நினைவில் இருக்கிறது.

தியாகராஜன் ஒருநாள் வந்து, "சார் ஒருநாள் பூராவும் நான் அந்தக் கவியுடன் தங்கிவிட்டுச் செல்ல நீங்கள் ஏற்பாடு செய்து கொடுத்தால் நன்றியுடையவனாக இருப்பேன்" என்றான். ஏற்பாடு செய்து கொடுத்தேன்.

தியாகராஜன் ஆங்கில இலக்கியத்தில் நல்ல பரிச்சயம் இருந்தது போலவே சித்திரங்கள் வரைவதிலும் ஒரு சாமர்த்தியம் இருந்தது. ஆளைப் பார்த்து அப்படியே வரைந்து விடுவான். என்னை அப்படி ஒரு படம் வரைந்து எனக்குத் தந்திருக்கிறான். ஸ்டீபன் ஸ்பெண்டரை இரண்டொரு படங்கள் வரைந்து அவரிடம் கையெழுத்து வாங்கி என்னிடம் கொண்டு வந்து காட்டினான்.

ஸ்டீபன் ஸ்பெண்டர் சென்னையை விட்டுக் கிளம்பும்போது விளையாட்டாக, "சென்னையில் உங்களுக்கு நினைவில் இருக்கும்படியாக ஏதாவது அனுபவங்கள் ஏற்பட்டனவா? ஏதாவது ஒன்றிரண்டு சொல்ல முடியுமா?" என்று கேட்டேன்.

இரண்டு மூன்று இடங்களில் பேசியிருந்தார். பேராசிரியர்கள் பாஸ்கரன், ராமசாமி, துரைசாமி போன்ற பல ஆங்கில இலக்கிய மற்றும் பல அறிவாளிகளைச் சந்தித்திருந்தார். ஜெமினி ஸ்டுடியோவில் வாசன் தந்த பெரிய தேனீர்க் கூட்டத்தில் பலரைச் சந்தித்து உரையாடலில் ஈடுபட்டிருந்தார். வாசன் துரத்தித் துரத்தி 'ஔவையாரை' பிரத்யேகமாகப் போட்டுக்காட்டி 'Magic Picture' என்று ஸ்பெண்டரின் அபிப்ராயத்தைப் பெற்றிருந்தார். அண்ணாமலை யூனிவர்ஸிடி, சிதம்பரம் கோயில், மகாபலிபுரம் என்று பலதும் பார்த்திருந்தார்.

நான் கேட்ட கேள்விக்கு முந்திய பதில் தேடி வைத்துக் கொண்டிருந்தவர் போல, “சென்னையில் மூன்று அனுபவங்கள் என் மனத்தைக் கவர்ந்தன என்று சொல்ல வேண்டியதில்லை. உங்கள் மெரினா பீச். இரண்டாவது உங்களூரிலேயே மிகவும் அழகில்லாத முகம் படைத்த ஒருவர் பேச வாய்திறந்த போதெல்லாம் எவ்வளவு அழகாக ஆங்கிலம் பேசினார்! எவ்வளவு அறிவுள்ள வாக்கியங்கள் பேசினார்’ என்று ஆச்சர்யப்பட்டுப் போனேன். மூன்றாவது — தியாகராஜன் என்று — ஒரு பையனை — இலக்கிய மாணவனை — எனக்கு அறிமுகம் செய்து வைத்தாயே, அந்தப் பையனை என்னால் மறக்கவே முடியாது!”

இரண்டாவது ஸ்டீபன் ஸ்பென்டர் சொன்ன ஆசாமி யார் என்று எனக்குத் தெரியும். அப்போது ஹிண்டுப் பத்திரிகையில் இருந்த ரகுநாதய்யர் அது. ஆனால் தியாகுவைப் பற்றி ஸ்பென்டர் சொன்னது எனக்கு மிகவும் திருப்தியாக இருந்தது.’ ‘ஏன் அப்படி அவனை மறக்க முடியாதவனாய் நினைத்தார்? என்று மீண்டும் தூண்டிக் கேட்டேன். “அந்தப் பையனின் மனதில் அடக்க முடியாத பல விஷயங்கள் குழப்பிக் கொண்டிருக்கின்றன. உலகத்தில் முன்னேற வேண்டுமென்கிற ஆசை, கலையில், இலக்கியத்தில் சாதனைகள் செய்துகாட்ட வேண்டுமென்ற பேராசை — எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு அமைதி நாடும் வேகமே அவன் அமைதியைக் கெடுத்துவிடும் என்று எனக்குத் தோன்றுகிறது. எல்லாமாகச் சேர்ந்து அந்தப் பையனை என்ன செய்யுமோ — எங்கே போய் விடுமோ என்று என்னைத் தூண்டுகிறது. கல்லூரியில் படிக்கும்போது என் நண்பன் — அவன் சற்றேறக்குறைய இப்படியேதான் எதிலும் துடியாக இருப்பவன். அந்த நினைவில்தான் இந்தப் பையன் தியாகராஜன் நினைவு என்னை விட்டு அகலாது என்று நினைத்தேன்.”

“இத்தனையும் சேர்ந்து ஒருவனை பைத்தியமாக்காதா?”, என்று கேட்டேன்.

“பைத்தியமும் ஆக்கலாம். மிக மேன்மையான சாதனையாளனாகவும் ஆக்கலாம். இரண்டும் நிகழக்கூடும்” என்றார் ஸ்பென்டர்.

“இப்படி அவனைப்பற்றி ஸ்பென்டர் சொன்னதை நான் எந்த சமயத்திலும் தியாகராஜனிடம் சொல்லவில்லை. ஏதோ சொல்லக் கூடாது என்று தடுத்துவிட்டது; சொல்லவில்லை. எனக்குள்ளேயே, இந்தப் பையனை

பைத்தியம் என்றாரா, மகா அறிவாளி என்றாரா, என்று தீர்மானிக்க முடியவில்லை.

‘‘ரொம்ப தாங்க்ஸ் சார். ஸ்பெண்டருடன் இருந்த அந்த நாளை நான் மறக்கவே மாட்டேன்’’ என்றான் தியாகராஜன். ‘‘நீங்கள் செய்த உதவி மாதிரி எனக்கு வேறு யாரும் செய்திருக்க முடியாது. மீண்டும் தேங்க்ஸ்.’’

•

“ஆக்ஸ்போர்டு சர்வகலா சாலைக்குப் பயற்சிபெற நாங்கள் போனபோது ஸ்டீபன் ஸ்பென்டரை மீண்டும் பார்த்தேன். சென்னையில் அவருடன் செலவழித்து இன்புற்ற ஒரு நாளைப் பற்றியும் உங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தேன்.”

“உன்னையும் என்னையும் நினைவிருந்ததா அவருக்கு?”

“நினைவில்லாமல் என்ன? உங்களைப் பற்றியும் விசாரித்தாரே! நான் உங்கள் நாவலைப் பற்றி அவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். சென்னையில் தான் சந்தித்த மற்றவர்களையும் விசாரித்தார்.”

“அப்படியா? அவ்வளவு தூரம் நினைவிருக்கும் என்று நினைக்கவில்லை.”

“கடைசியாக விடைபெற்றுக்கொண்டு போகும்போது ஒரு கேள்வி கேட்டார். அதுதான் எனக்கு என்ன, ஏது என்று புரியவில்லை.”

“என்ன கேட்டார்.”

“சென்னையில் ஜனத்தொகையில் எத்தனை சதவிகிதம் பைத்தியக்காரர்கள்? என்று கேட்டார். இந்தியாவில் ஜனத்தொகையில் எத்தனை சதவிகிதம் பைத்தியம் பிடித்தவர்கள் இருப்பார்கள்? என்று கேட்டார். எனக்கு பதில் சொல்லத்தெரியவில்லை.”

“ஆங்கிலத்தைப் படித்துக்கொண்டு ஆங்கிலத்தை நம்பி நம்பி தினம் உயிர் வாழ்பவர்கள் எல்லோருமே பைத்தியக்காரர்கள் தானே. நூற்றுக்கு 90 பேர் சென்னை நகரில் மட்டும் பைத்தியக்காரர்கள். இந்தியாவில் 5 சதவிகிதம் இருக்கலாம் பைத்தியம் என்று சொல்வதுதானே?”

“சாதுர்யமாக எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை; தெரியாது என்று சொல்லிவிட்டேன்.”

“பைத்தியக்காரர்கள் எத்தனை என்று கணக்கெடுத்து வைத்துக்கொள்ள நமக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது?”

“அது சரி. நான் புத்திசுவாதீனமில்லாதவன் மாதிரித்தான் நடந்து கொள்கிறேனா சார்? நீங்கள் சொல்லுங்கள்.”

“அப்படி நீ நடந்து கொள்வதாக யார் சொன்னது?”

“யாரும் அப்படி என்னிடம் சொல்வதில்லை. எல்லோரும் அப்படி நினைக்கிறார்களோ என்று கவலை என் மனதில் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது.”

“ஏன் நான் பைத்தியமா என்று தன்னையே கேட்டுக் கொள்கிறவன் பைத்தியமாக இருக்க முடியுமா என்ன?”

“அப்படியென்றால் நான் பைத்தியம் இல்லை என்கிறீர்கள்.”

“அப்படி எனக்குத் தோன்றவில்லை என்கிறேன்.”

“ரொம்ப தாங்க்ஸ் சார்.”

•

# 18

தாம்பரத்தில் தியாகராஜனை சந்தித்ததற்குப் பிறகு ஒரு பத்து பன்னிரெண்டு வருஷங்களுக்கும் அதிகமாக அவனை நான் சந்திக்கவில்லை.

நடுவில் ஒருதரம் சென்னையில் நான் இருக்கும்போது தியாகுவின் அண்ணா ராஜா வந்தான். அப்போது அவன் வடக்கே ஏதோ ஒரு பல்கலைக்கழகத்தில் புகழ்பெற்ற பேராசிரியராக இருந்தான். நல்ல பெயர் அவனுக்குப் பேராசிரியராய், என்று பல நண்பர்களிடம் கேள்விப்பட்டிருந்தேன். அவன் அப்பா, அம்மா, தம்பி, தங்கைகள் பற்றிப் பேசுகிறபோது அவன் இலக்கிய ஹானர்ஸ் முடித்துவிட்டு மி.கி.ஷி. பரீட்சைக்குப் போனதாகவும் முதல் முறையிலேயே வென்றாலும் அவனை ஃபாரின் சர்வீசுக்குத் தேர்ந்தெடுக்காததால் மி.கி.ஷி.இல் போகவில்லையென்றும், அடுத்த வருஷமும் பரீட்சைக்குப் போய் மி.தி.ஷி.க்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ராங்கைத் தான் முயற்சி செய்து கொண்டிருப்பதாகவும் சொன்னான்.

‘‘அப்பாதான் போய்விட்டாரே! நீ இப்போது ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் சேர முயற்சி செய்யவில்லையா?’’ என்று கேட்டேன்.

‘‘அழைப்பு இருக்கிறது, குடும்பநிலை போக இடம் தரவில்லை’’ என்றான் ராஜா. மருந்துக் கடைக்குப் போக வேண்டும் என்றான். ஒரு மருந்துக் கடைக்குப் போனோம். திருவல்லிக்கேணி சிங்கராச்சாரி தெருவிலிருக்கும் நஞ்சுண்டராவ் மருந்து ஷாப்புக்குப் போனோம். ஏதோ பிரிஸ்கிரிப்ஷன் கொடுத்தான். மருந்து விற்பவன் ‘‘இதெல்லாம் பைத்தியக்காரர்களுக்குத் தருகிற மருந்தல்லவா? யாருக்கு சார்?.’’ என்று கேட்டான்.

‘‘ஏன், யாருக்கு என்று அவசியம் சொல்ல வேண்டுமோ?’’ என்று கேட்டான் ராஜா.

‘‘இல்லை, கேட்டேன்.’’

‘‘எனக்குத்தான் போதுமா?’’ என்று கேட்டுவிட்டு அந்த ஆசாமியை ராஜா ஒரு முழி முழித்துப் பார்த்ததும் அவன் பேசாமல் மருந்துகளைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் பணத்தை வாங்கிக்கொண்டு நகர்ந்துவிட்டான். நான் பட்டியலை வாங்கிப் பெயர் பார்த்தேன். ‘ஸிரப் ஆஃப் ப்ரமி’ என்றிருந்தது.

‘‘இதெல்லாம் பைத்தியக்காரர்களுக்கான மருந்துகள் தானா?’’ என்று கேட்டேன்.

‘‘அப்படித்தான் சொல்லி டாக்டர் எனக்கு ப்ரிஸ்கிரைப் பண்ணியிருக்கிறார்.’’

‘‘ஏன் உனக்குச் சித்த சுவாதீனமில்லாமல் இருக்கிறதா? இல்லை வருமுன் காப்பாக இந்த மருந்துகளா?’’

‘‘வருமுன் காப்பாகத்தான். ஆனால் இந்தக் காலத்தில் பைத்தியக்காரன் அல்லாதவன் யார்? சொல்லு,’’ என்றான் ராஜா.

‘‘என் போக்கையும், நடவடிக்கைகளையும் பார்த்து என்னைப் பைத்தியம் என்றுதான் என் மனைவியும், மனைவியைச் சார்ந்த உறவினர்களும் கூறுகிறார்கள்’’ என்றேன் நான்.

‘‘உத்தியோகம் என்று எதுவும் தேடிக்கொண்டு போகாமல், எழுதுகிறேன் என்று இருப்பது பைத்தியக்காரத்தனமாகத்தான் அவர்களுக்குப் புரிகிறது,’’ என்றேன் தொடர்ந்து.

‘‘அது உண்மையில் பைத்தியக்காரத்தனம் தானே? You are Qualified. உத்தியோகம் பார்த்துக் கொண்டு உத்தியோகத்திலிருந்து கொண்டே எழுதுவது சுலபமாகவும் இருக்கும். நீ சொல்வதற்குக் கூட அதிகம் மதிப்பு இருக்கும் என்று தோன்றுகிறது’’ என்றான் ராஜா.

‘‘அப்படியா நினைக்கிறாய் நீ? உங்கப்பா பாதிப்படிப்பில் நிறுத்திவிட்டு வந்து விவசாயத்தில் இறங்கினார்...’’

‘‘நிஜமாகவே அவர் பைத்தியமில்லாமல் வேறு என்ன? பைத்தியமாக இருக்கத்தொட்டுத்தான் இருபது, முப்பது ஏக்கரா நிலங்களைப் படிப்படியாக குறைத்துக்கொண்டு இரண்டு ஏக்கரும் ஒரு வீடும் என்று கொண்டு வந்து சொத்தை வைத்துவிட்டு செத்துப்போனார். அந்தக் கடைசி இரண்டு ஏக்கராவும் விற்கத்தான் சாத்தனூர் போயிருந்தேன். மகாலிங்கத்தின் பிள்ளை சாமா வாங்கிக் கொள்வதாகப் பேச்சு. பைத்தியம்தான். அதனால்தான் உலகமும் நம்மைப் பைத்தியமாக மதிக்கிறது.’’

அன்று சாத்தனூரில் காவேரியில் தண்ணீர் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. அப்போதெல்லாம் காவேரியிலும் வெள்ளம் வருவதுண்டு. பெருவெள்ளம் வருவதே நின்று விட்ட காலம் அல்ல. ஒருநாள் நாங்கள் மூவர்

— ராஜா, நான், மூன்றாவது யார் என்று சட்டென்று நினைவிற்கு வரவில்லை — காவேரியில் குளிக்கப் போனோம்: எனக்கு நீந்தத் தெரியாது என்று எத்தனை சொல்லியும் கேட்காமல் ராஜாவும் மற்றொருவனும் மேலண்டைத் துறையில்போய் என்னைக் காவேரியில் 'நீந்தக் கற்றுக்கொள் — இல்லாவிட்டால் ஆற்றோடு போ' என்று இறக்கி விட்டு விட்டார்கள். மேலைத்துறையில் இருந்து ஒரு நூறு கஜதூரம் வரையில் ஏறுவதற்கு இடம் கிடையாது — ஆற்றையொட்டிய படுகை நிலத்தில் புகையிலை பயிரிட்டிருந்தார்கள் — கரை ஏற முடியாது. தண்ணீரோ நிலைகொள்ளாமல் ஆறடி, ஏழடி எட்டடி என்று சில இடங்களில் ஏரியாகவும் ஓடுகிறது. எப்படி சர்வமானியத்துறைக்கு வந்தேன், எப்படிக் கரையேறினேன் என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம், Fear Death by Drowning என்று T.S.Eliotஇல் படித்த நினைவு வந்தது. கரையேறி வந்தவன் ராஜாவிடம் அந்த வரியைச் சொன்னேன். அவனுக்கு அப்போதெல்லாம் 'ஷெல்லியும், கிட்ஸும் தான் தெய்வங்கள்; எலியட் பின்னர்தான் பாடம்.

"கொஞ்சம் தப்பியிருந்தால் அன்று நான் ஆற்றோடு போயிருக்க வேண்டியதுதான். அப்பாவிடம் சொன்னபோது," "நீஞ்சக் கற்றுக்கொண்டு விடு சாமா!." என்று சொல்லி விட்டுப் போய் விட்டார். நீஞ்சத் தெரியாது என்று சொல்பவனைத் தண்ணீரில், காவேரி வெள்ளத்தில் இழுத்துவிட்டு வேடிக்கை பார்ப்பது பைத்தியக்காரத்தனமல்லாமல் வேறு என்ன?

அதை ஞாபகப்படுத்திக் கொண்டு ராஜாவைக் கேட்ட போது, அன்று சிரித்த மாதிரியே சிரித்தான் — இடி இடியென்று. தெருவில் போவோர், வருவோர் திரும்பிப்பார்க்க, "முதல் தடவை உன்னைக் காவேரி வெள்ளத்தில் இழுத்துவிட்டது பைத்தியக்காரத்தனம் அல்ல; அது அசட்டுத்தனம். இரண்டாம் தடவையும் இழுத்து விட்டிருந்தால்தான் அது பைத்தியக்காரத்தனமாகும்! என்றான்.

"அப்படியா?" — இப்படியும் பைத்தியக்காரத்தனத்திற்கு ஒரு விளக்கம் இருப்பது எனக்குத் தெரியவில்லைதான்.

•

## 19

“என்னைப் பைத்தியம் என்று என் மனைவியே சொல்லுகிறாள் சார்!”

“என்னைக்கூடத்தான் என் மனைவி பைத்தியம் என்று சொல்கிறாள்!”

“எதற்காக?”

“நான் மற்றவர்களைப் போல வேலைக்குப் போகவில்லையாம். மாதா மாதம் சம்பளம் வாங்கிக்கொண்டு வந்து அவளிடம் தரவில்லையாம்!”

“அப்புறம்.”

“ஒருத்தரும் படிக்காதது எதையோ எழுதிக்கொண்டு எழுத்தாளன், எழுத்தாளன், இலக்கியம், இலக்கியம் என்று அசட்டுத்தனமாக உயிரை விட்டுக் கொண்டிருக்கிறேனாம்.

“இதெல்லாம் பைத்தியத்திற்கு அறிகுறியாகி விடுமா?”

“நீதான் சொல்லேன் என் மனைவிக்கு.”

“நீங்கள் பைத்தியம் அல்ல என்று இந்தப் பைத்தியம் சாட்சி சொல்ல வேண்டும் என்கிறீர்கள்.”

“உனக்கு வேலையிருக்கிறது. கை நிறைய சம்பளம் வாங்குகிறாய். கண்ணான மனைவி ஒருத்தியிருக்கிறாள். அழகான குழந்தை ஒன்று இருக்கிறது. உன் மனைவியே டாக்டர். உனக்கு வைத்தியம் செய்வதையெல்லாம் அவளே செய்துவிடலாம். உன்னைப்போய் பைத்தியம் என்று சொல்லி விட முடியுமா?”

“உங்களுக்குத் தெரியாது சார். இரண்டு மாதம் என்னை ‘ஷதாரா’ மனநோய் நிலையத்தில் போட்டு அடைத்திருந்தார்கள். அதனால்தான் நான் சென்ற இரண்டு மாதமாக இங்கு வர முடியவில்லை.”

“அப்படியா? அடேடே! எனக்குத் தெரியவே தெரியாதே!”

“உங்கள் விலாசமும் தந்து உங்களை அழைத்து வந்தால் என் பைத்தியம் தெளிந்துவிடும் — எனக்கு ‘டென்சன்’ நீங்கள் வந்தால் அமைதி ஏற்படும் என்றுகூட சொல்லிப் பார்த்தேன். யாரும் கேட்கவில்லை!

“தெரிந்திருந்தால் வந்து பார்த்திருப்பேனே!”

‘‘என் மனைவி லீலாவிடம் கூடச் சொன்னேன். டாக்டரிடம் சொல்லிக் கேட்டுக்கொண்டு உங்களை அழைத்து வருவதாகச் சொன்னாள். ஆனால் டாக்டர்தான் வேண்டாம் என்று சொல்லிவிட்டாராம். ‘இரண்டொரு மாதத்தில் அவனுக்கே சரியாகிவிடும், என்று சொன்னாராம் டாக்டர். அதனால்தான் லீலா உங்களைப் பார்க்க வரவில்லை.’’

‘‘இப்போ...’’

‘‘இல்லையென்று சொல்கிறார்கள். எனக்கு என்னமோ பயமாக இருக்கிறது. மறுபடி அந்த அறையில் என்னை அடைத்துவிடுவார்களே என்று!’’

‘‘அறையில் அப்படி என்ன பயங்கரம்?’’

‘‘அறையில் ஒன்றுமில்லை. எல்லாம் மனத்தில்தான். வருகிறேன் சார். அடுத்த தடவை வரும்போது விபரமாக எல்லாம் சொல்லுகிறேன். என் நண்பன் அவசரமாக கூப்பிடுகிறான். வரட்டுமா?’’

‘‘லீலாவை அழைத்து வரவில்லையா!’’

‘‘வருவாள், வருவாள்! வரேன் மாமி. வரேன் சார்’’

‘‘டாக்சி கூப்பிடட்டுமா?’’

‘‘வழக்கமாக வரும் டாக்சி காத்திருக்கிறது.’’

•

# 20

பைத்தியம், பைத்தியக்காரர்கள், பைத்தியக்காரத்தனம்.

இப்படிப்பட்ட பலரை நம் எல்லோருக்கும் எந்தெந்த சந்தர்ப்பங்களிலோ சந்திக்கவேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது.

தன் வீட்டிலேயே இல்லாவிட்டாலும் ஊர்ப் பொதுவில் உள்ள பைத்தியக்காரர் என்மேல் கல்லைவிட்டு சின்ன வயசில் எறிந்திருக்கிற காலம் நினைவுக்கு வருகிறது. அதுதான் நான் முதல் முதலில் கண்ட பைத்தியம் என்றும் என்னால் சொல்ல முடியாது.

அதற்கும் முன் என் பணக்கார சித்தப்பாவுக்குப் பெண் பார்க்கப் போன இடத்தில் கண்ணாடித் தாத்தா என்று எல்லோரும் சொன்ன மூக்குக் கண்ணாடி அணிந்த ஒரு பெரியவர் வீட்டுத் தூணில் தாம்புக் கயிற்றினால் பிணைத்துக் கட்டப்பட்டு இருந்தார். அவருக்கு வயது அறுபதிற்கு மேல் இருக்கும். பணக்காரர் என்றும் சொன்னார்கள். முதல் மனைவியை இழந்து விட்டு, இரண்டாவது கலியாணம் பண்ணிக் கொண்டவர் என்றும் இரண்டாவது மனைவி அவருக்கு வசிய மருந்து வைப்பதாக எண்ணி ஏதோ தந்து கடைசியில் அவரைப் பைத்தியமாக்கி விட்டாள் என்றும் ஊரில் வதந்தி. உண்மையோ, என்னவோ தெரியாது. இரண்டாவது மனைவி மிகவும் லக்ஷ்மிகரமாக, அடக்கவொடுக்கமாக என்னையும் அப்போது உயிருடனிருந்து எங்களுடன் வந்திருந்த அம்மாவையும் வரவேற்று உள்ளே அழைத்துப் போனாள். சித்தப்பாவுக்குத்தான் பெண் என்றாலும் சித்தப்பா லாகூரிலிருந்தார். அவர் வரவில்லை. அண்ணாவும், மன்னியும் பார்த்துச் சரியென்றால் கலியாணத்திற்கு வந்து விடுவதாக ஒப்புக் கொண்டிருந்தார். அப்பாவும் வந்திருந்தார்.

அப்பா பைத்தியத்திடம் போய் நின்றுகொண்டு ‘‘என்ன சார் கிருஷ்ணய்யர் — இப்படி எல்லோரையும் பயமுறுத்திக் கொண்டிருக்கிறீர்களே — இது நியாயமா?’’ என்று கேட்டார்.

‘‘பயமாயிருந்தால் கிட்ட வராதே!’’ என்றார். பின் காறி அப்பாமேல் எச்சிலை உமிழ்ந்தார் கிருஷ்ண ஐயர்.

அப்பா சாமர்த்தியமாக நகர்ந்துவிட்டார். வீட்டிலிருந்த மற்றவர்கள் அவரை, ''அங்கே போகவேண்டாம். நாளைக்கு அமாவாசை. இரண்டு நாள் சற்று ஜாஸ்தியாக இருக்கும்'' என்று அழைத்துப் போனார்கள்.

நான் அந்த வீட்டிலிருந்த ஒவ்வொரு வினாடியும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவரைச் சுற்றியே தான் அந்த வீட்டில் பேச்சு, நடமாட்டம் எல்லாம் இருந்தது. அவர் பேத்தி லக்ஷ்மிதான் சித்தப்பாவிற்கு மனைவியாக வந்தாள். எனக்கு அவரை இரண்டாந்தரம் பார்க்க சந்தர்ப்பம் ஏற்படவில்லை. அவர் அதற்கடுத்த வருஷமோ, அதற்கும் அடுத்த வருஷமோ இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். இரண்டாவது மனைவி மருந்து வைத்துக் கொன்றுவிட்டதாகச் சொல்லிக் கொண்டார்கள். நிஜம் என்னவோ தெரியவில்லை.

இன்னொரு பைத்தியத்துடன் நான் கொஞ்சம் நெருங்கிப் பழகவே வேண்டிவந்தது. அது விஜயபுரத்தில் அப்பா போஸ்ட் — மாஸ்டர்; போஸ்ட் ஆபீஸிலேயே எங்கள் வீடு. தந்திக் குமாஸ்தா ஒருவர் இருந்தார். அவர் பெயர் கிருஷ்ணமூர்த்தி. முப்பத்தைந்து வயதிருக்கும். அவருக்கு திடீரென்று ஒரு நாள் பைத்தியம் பிடித்துவிட்டது என்றார்கள்.

அவருக்குப் பைத்தியம் பிடித்ததற்குக் காரணம் என் அப்பா தான் என்று ஊரில் பேசிக்கொண்டார்கள். பராபரியாகக் காதில் விழுந்த விஷயங்கள் சில. என் அப்பாவைத் தேடிக்கொண்டு ராஜயோகி, ராஜயோகி என்று ஒரு தாடிக்காரர் வருவார். அவரை அப்பா தன் குருவென்று பாராட்டுவார். அவருக்குப் பலமொழிகள் தெரியும். ஆனால் தெரியாத மொழிகளிலும்கூடப் பிரமாதமாகக் கவிபாடுவார் என்று எல்லோரும் சொல்வார்கள். பேச்சு கணீரென்று இருக்கும். ஒன்றரைக்காசு என்று வந்துவிட்டால் எண்பது காதம் ஓடி வருவார் என்று அம்மா சிலசமயம் சொல்லுவாள்.

அவர் எங்கள் வீட்டில் பத்மா என்று ஒரு தேவியை ஆவாஹனம் செய்து பூஜை செய்வார். நாலு, ஐந்து மணிநேரம் பூஜை நடக்கும். நவராத்திரியின்போது வந்தாரானால் ஊரிலிருந்த வயதுக்குவராத கன்னிப்பெண்களைக் கூப்பிட்டும் பூஜை செய்து பஞ்சபக்ஷபரமான்னத்துடன் சாப்பாடுபோட்டு பிரசாதம் கொடுத்து அனுப்புவார். செலவு அப்பாவினுடையது. சாப்பாடு தயாரிப்பு பாவம் அம்மா! ஒண்டியாகக் கஷ்டப்படுவாள்.

இந்த ராஜயோகியிடம் கிருஷ்ணமூர்த்தி ஏதோ மந்திரோபதேசம் பெற்று மந்திர உச்சாடனையோ, யோகப்பயிற்சியோ சரியாகச் செய்யாததால் புத்தி பேதலித்துவிட்டார் என்று வதந்தி. ஒருநாள் ஏதோ, யாருக்கோ தந்தி வந்தது. எழுபது வயதுக் கிழவன் மாயவரத்தில் இறந்துவிட்டான் என்று அவர் பிள்ளைக்குத் தந்தி வந்தது. தந்தி குமாஸ்தா கிருஷ்ணமூர்த்தி அந்தக் கிழவனுக்குக் கலியாணம் என்று வாசகத்தை மாற்றித் தந்தியை அவர் பிள்ளையிடம் அனுப்பிவிட்டார். தகப்பனைத் திட்டிக்கொண்டே கலியாணத்திற்கும் போய் கருமம் செய்துவிட்டு வந்த பிள்ளை என் அப்பாவிடம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார். இதற்குள் இன்னும் பல தந்திகளிலும் அவர் தன் கைவரிசையைக் காட்டியதால் அவரை சஸ்பெண்டு செய்துவிட்டு என் அப்பா தந்தி ஆபிஸையும் சிலநாள் கவனித்து வந்தார்.

ஒருநாள் — அன்று வெள்ளிக்கிழமை அப்பா பூஜை செய்துவிட்டு — வீட்டில் அன்னபூரணி பூஜை தினமும் செய்து கொண்டிருந்தார் — இது என் அம்மா இருந்த வரையில் சரிவர நடந்தது — நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டுடன் அப்பா வந்தபோது சஸ்பெண்டு செய்யப்பட்டாலும் ஆபிஸிற்குள் பழக்க தோஷத்தில் வந்துபோய்க் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி அப்பாவை இறுகக் கட்டிப் பிடித்துக்கொண்டு, ‘‘உங்கள் குங்குமப் பொட்டில் தேவி நடமாடுகிறாள்!’’ என்று கத்த ஆரம்பித்துவிட்டார். அப்பாவுக்கு எலும்பு நொறுங்கிப் போகிற மாதிரி ஆகிவிட்டது. ஆபிஸில் இருந்த நாலுபேர் சேர்ந்து கிருஷ்ணமூர்த்தியிடமிருந்து அப்பாவை விடுவித்து நீக்க வேண்டியதாகி விட்டது. அதற்குப் பின் அப்பா பெரிதாகக் குங்குமப்பொட்டு இட்டுக் கொள்வதை விட்டுவிட்டார்.

இந்தப் பைத்திய கிருஷ்ணமூர்த்தியைத்தான் நான் பல வருஷங்கள் அதற்குப் பின்னர் பல சந்தர்ப்பங்களில் சந்தித்திருக்கிறேன். அவருடைய சஸ்பென்ஷனுக்கு காரணமாக இருந்த அப்பா அவர் வேலைபோன பின் அவர் பென்ஷன், பிராவிடண்ட் பண்ட் முதலிய விஷயங்களில் முன்னின்று நடத்தி அவருக்கு உதவி செய்தார் என்பது தெரியும்.

தஞ்சாவூரில் நாங்கள் இருக்கும்போது எங்கள் வீட்டிற்கு வந்து பல நாட்கள் தங்கியிருப்பார். தன் வேலை, பென்ஷன் பணம் முதலிய விஷயமாக கிறுக்குத்தனமாக சிலசமயம் ஏதாவது பேசுவாரே தவிர வேறு விதத்தில்

பைத்தியம் என்றே சொல்ல இயலாது. கிறுக்குத்தனமான பேச்சு என்பதற்கு உதாரணமாக ஒன்றிரண்டு நினைவிற்கு வருகிறது. 'Thank God' என்பதுதான் 'தேங்காய் உடை' என்று வந்தது என்பார். ஆவணியாவட்டம் என்று சொல்லக்கூடாது, ஆமடையாவட்டம் அது – உண்மையில் பெண்டாட்டியைச் சுற்றி வந்து நமஸ்காரம் பண்ண வேண்டும்' என்பார். Morning rounds என்றால் காலையில் சாப்பிடுகிற இட்லி என்று அர்த்தம் என்பார். இது தவிர சில சமயம் காரணம் இல்லாமல் சிரிப்பார். இதைத் தவிர அவர் பைத்தியக்காரத்தனமான போக்குகள் எதுவும் காட்டவில்லை. வேலை நாட்களில் விஜயபுரத்தில் போய் மளிகைக் கடையில் அப்பா சிபாரிசின் பேரில் சேர்த்து நாளடைவில் பெரிய கணக்குப்பிள்ளையாகி விட்டார். சௌகரியமாகவே இருந்தார். அவருடைய முதல் பெண் கமலாம்பாளின் கல்யாணத்திற்கு அப்பா வர இயலவில்லை. நானும், அம்மாவும் போய்விட்டு வந்தோம். அதற்கடுத்த வருஷம் தான் தஞ்சாவூரில் அம்மா இறந்து போனது.

மூன்றாவதாக இன்னொரு பைத்தியத்தின் நினைவு சட்டென்று வருகிறது. அது சாத்தனூர் சர்வமானியத் தெருவில் இருந்த ஒருவர் பைத்தியமானதுதான். அப்போது தியாகுவிற்கு ஆறேழு வயதிருக்கலாம். அவன் சுவரில் சித்திரங்கள் எழுதிக் கொண்டிருந்த காலம். அதைச் சற்று விரிவாகச் சொல்ல வேண்டும்.

•

“கார் வாங்கி விட்டேன் சார்!”

“உன்னை மீண்டும் கார் ஓட்டக் கூடாது என்று டாக்டர்கள் சொல்லியிருப்பதாகச் சொன்னாயே தியாகு!”

“நான் ஓட்ட முடியாது. ஓட்ட ஆரம்பித்தேனானால் யுகோஸ்லாவியாவில் நடந்த கார் விபத்து நினைவிற்கு வந்து கண்ணையும், மனத்தையும் மறைக்கிறது.

‘‘அந்த விபத்தைப் பற்றி நீ எனக்குச் சொல்ல வேண்டும்.’’

“அதைப் பற்றி நினைக்கக் கூடாது, ‘‘பேசக் கூடாது என்று என் டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

“அப்ப சரி.”

“இருந்தாலும் இன்று நினைவிற்கு வருகிறது சொல்கிறேன். நான் யுகோஸ்லாவியாவில் ஒரு பெண்ணைக் காதலித்துக் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டேன். கலியாணத்தை பெல்கிரேடில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று அவள் சொன்னாள். ஜாக்ரெபிலிருந்து பெல்கிரேடுக்குப் பெண்ணை அழைத்து வருவதாக நானே கார் எடுத்துக்கொண்டு கிளம்பினேன். அவளது உற்றார், உறவினர் எல்லாம் ரெயிலில் வருவது என்று தீர்மானமாயிற்று. நானும் அந்தப் பெண்ணும் மட்டும் அதிகாலையில் கிளம்பினோம்...”

“ம்... ம்...”

“ம்... ம்... ம்... ம்...”

“வேண்டாம். வேறு ஏதாவது பேசு.”

“நடந்தது நடந்து விட்டது. பேசிப் பயன் என்ன? அழ வேண்டியதுதான்.”

“அழுது என்ன லாபம்?”

“லாபம் இருக்கு என்பதற்காகவா எல்லாற்றையும் செய்கிறோம்? டுஷான்ஷாவிற்கு வயது இருபத்தி இரண்டு.”

“போட்டோ ஏதாவது இருக்கிறதா?”

‘‘அவள் போட்டோக்களையெல்லாம் வைத்துக்கொள்ளக் கூடாது. அந்த நினைவு வரும் என்று டாக்டர்கள் கட்டாயப்படுத்தி அப்புறப்படுத்தி விட்டார்கள்.’’

‘‘அதுவும் சரிதான்.’’

‘‘அத்தனையும் நானே எடுத்த போட்டோக்கள். ஒரு ஆல்பம் நிறைய எடுத்து வைத்திருந்தேன்...’’

‘‘இதைத்தான் விதி என்று சொல்வது.’’

‘‘விதி என்று இதைச் சொல்லக்கூடாது.’’

‘‘வேறு எதைச் சொல்வது?’’

‘‘மற்றவர்களுக்கும் நடந்ததை நினைத்துப்பார்த்து ஆனந்தப்படவோ, கஷ்டப்படவோ முடியும்; என்னால் நினைத்துப்பார்க்க முடியாதபடி தடை விதித்திருக்கிறதே! இதைத்தான் விதி என்று சொல்ல வேண்டும்.’’

‘‘தடை டாக்டர்கள் விதித்திருக்கிறார்களா, இல்லை...’’

‘‘என் மனமே கூட விதித்திருக்கிறது என்று எண்ணுகிறேன். என் டுஷான்ஷாவின் உருவத்தைக்கூட என்னால் காண முடியவில்லை. அவள் பெயர் டுஷான்ஷாதானா, வேறு ஏதாவதா என்றுகூட நினைவிற்கு வரவில்லை.’’

‘‘பெல்கிரேட் போகும் போதுதானா அந்த விபத்து நடந்தது; ஒன்றும் தெரியவில்லை. என்ன நடந்தது...? ஏதோ நடந்தது... நடந்தது, நடந்தது, நடந்தது, நடக்கப் போவது, நிற்கப் போவது ஓடப்போவது, முடியப் போவது...வரேன் சார். டாக்சி நின்று கொண்டிருக்கிறது.’’

•

# 22

சாத்தனூரில் சர்வமானியத் தெருவில் ராமச்சந்திர சாஸ்திரிகள் என்று ஒரு புரோகிதர் இருந்தார். பார்ப்பதற்கு சித்தானைக்குட்டி மாதிரி கருப்பாக, ஆஜானுபாகுவாக இருப்பவர். ஒரு படி அரிசி வடித்து தினமும் சாப்பிடுபவர் என்று அவரைச் சொல்லுவார்கள். நன்றாகச் சாப்பிடுபவர் என்பதால் அவருக்கு போஜனம் பண்ணி வைப்பதில் தெருவாருக்கு மிகவும் திருப்தி. திருப்தியாக சாப்பிடுவார். அது தங்கள் பித்ருக்களுக்கு திருப்தியளிக்கும் என்று இந்த பிராம்மண ஸ்திரீகளின் நம்பிக்கை.

எங்கள் வீட்டிற்கு ஐந்தாறு வீடுகள் தள்ளி மேற்கே அக்ரஹாரத்தில் அவர் வீடு இருந்தது. அவருக்கு சீதாலக்ஷ்மி என்று மனைவியும் ஒரு கலியாணமான பெண்ணும், சிறு பையன் — பத்து வயதிருக்கும் — ஒருவனும் இருந்தனர். சீதாலக்ஷ்மியைப் பற்றி ஊரில், முக்கியமாகப் பெண்களுக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது. ஏதாவது கலியாண வீட்டிற்குப் போனாள் என்றால், அங்கு யாராவது ஏதாவது நகையையோ, சாமானையோ கை தவறி கவனப்பிசகாக வைத்துவிட்டு இரண்டு நிமிஷங்கள் மறந்து விட்டால் அதை அபேஸ் செய்து, உரிய வழிகளில் கும்பகோணத்திலிருந்த தன் சிற்றன்னை ஒருத்திக்கு அனுப்பி வைத்து அதை விற்றுக் காசு பண்ணி விடுவாள் என்று சொல்வார்கள். திருடர்கள் கோஷ்டி மாதிரி இது திருடி கோஷ்டி என்பது தெருவில் பிரசித்தமான விஷயம். ராமச்சந்திர சாஸ்திரிகளுக்காக அவளைக் கொஞ்சம் பொறுத்துக் கொள்வார்கள், அவ்வளவு தான். அதுவும் ஓரளவுதான். அவள் பெண் பெயர் உமா. அவளுக்குக் கும்பகோணம் திருடிக் கோஷ்டியின் தலைவியின் இரண்டாவது மகன் குஞ்சிதத்தை கலியாணம் செய்து வைத்திருந்தார்கள். குடும்ப உறவும், திருட்டு உறவும் சேர்ந்துகொண்டு லாபகரமாக இருந்தது.

இந்த ராமச்சந்திர சாஸ்திரிகளுக்கு ஒருநாள் திடீரென்று பைத்தியம் பிடித்து விட்டது என்றார்கள். அதிகாலையில் வேட்டி துணிமணிகளைக் கிழித்து எறிந்து விட்டு — நல்ல வேளையாகக் கோவணம் கட்டியிருந்தார். வீட்டை வீட்டு ‘ஓஹோ ஹோ’ என்று சத்தம் போட்டுக்கொண்டு கிளம்பிவிட்டார். அவர் என்ன சொல்கிறார் கேட்கலாம் என்று — சப்தமிகுதியால் — சற்று கவனித்துக்

கேட்ட பிறகுதான் தெரிந்தது. ‘‘கிட்டப்போகாதே — மூக்கைக் கடித்து விடுவாள்... மூக்கைக் கடித்து விடுவாள்’’ என்று கத்திக்கொண்டே தெருவில் அப்படி ஓடினார். சற்று நேரங்கழித்து மறுபடி ஓடினார்.

‘‘மானத்தை வாங்காதேங்களேன் — வீட்டுக்குத் திரும்பி வந்து பேசாமலிருங்களேன்’’ என்று அவரைப் பின் தொடர்ந்து கத்திக்கொண்டே அவர் மனைவி சீதாலக்ஷ்மி போனாள் இரண்டு தடவை. பின்னர் அவமானம் தாங்காமல் வீட்டிற்குப் போய் அடைந்து விட்டாள். என்ன ஆனாலும் ஆகட்டும் என்று உள்ளேயே கிடந்து விட்டாள்.

அப்போது சர்வமானியத்தெரு பிள்ளையார் கோயிலைப் புனருத்தாரணம் செய்து சரிபார்த்து மதில் சுவர் எழுப்பி கும்பாபிஷேகம் செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான பணவசூல் சொல்ப அளவில் நடந்து கொண்டிருந்தது. இந்தக் கும்பாபிஷேக வசூலை தன் பைத்தியம் வெளியே தெரிந்த ஒரு மாதத்திற்குள் ராமச்சந்திர சாஸ்திரிகள் நிறைவேற்றி வைத்துவிட்டார்.

சர்வமானிய அக்ரஹாரத்துப் படித்துறையில் அதிகாலையிலிருந்து தருமத்தோணி விடுவார்கள். சாதாரண நாட்களில் தருமத்தோணியில் பகலில் போகிறவர்கள் மிகக் குறைவு. சாயங்காலம் போகிறவர்கள் மாங்குடி கள்ளுக்கடையில் தண்ணிபோடப் போகிறவர்கள். சாத்தனூரில் கள்ளுக்கடை அப்போதெல்லாம் கிடையாது. அக்கரைக்கு, மாங்குடிக்குத்தான் போக வேண்டும். தருமத்தோணியை மற்றபடி உபயோகிப்பவர்கள் கும்பகோணத்திற்கு குறுக்கு வழியாக, காவேரி லைன்கரை வழியாகப் போகிறவர்கள்தான். மாதாமாதம் கிருத்திகை நாட்களில் சாத்தனூர் முருகன்; கோயிலில் மிகவும் விசேஷம். பல ஆயிரக்கணக்கான முருகபக்தர்கள் கும்பகோணம் பக்கத்திலிருந்தும் அதன் சுற்றுப்புறத்திலிருந்தும் சாத்தனூர் முருகன் கோயிலுக்கு வருவார்கள். கும்பகோணத்திலிருந்து மேற்கே நடந்து பாலந்தாண்டி மேலக்காவேரி வழியாகக் கப்பிரோடில் — வண்டியில் வரலாம்; அப்போது பஸ் அவ்வளவாகக் கிடையாது. காலையில் ஒரு பஸ், மாலையில் ஒரு பஸ், சாத்தனூர் வழியாய் திருவையாறு போகும். நடந்து சாத்தனூர் போவதற்கு ஐந்து மைல் நடக்க வேண்டும். கும்பகோணத்திலிருந்து காவேரி கீழண்டை லைன்கரை வழியாக வந்தால் மூணு மைல்தான் ஆகும். எனவே நடந்து வருகிற பத்தாயிரம் மக்களும் — அதற்கும் அதிகமாகவும் ஒரோரு

கார்த்திகைக்கும் கூட்டம் வரும் — லைன் கரையோடு வந்த சர்வமானியத்தெரு படித்துறையில் தருமத்தோணியில் ஆற்றைக் கடந்து, சர்வமானியத்தெரு வழியாக நடந்து மேற்கே இரண்டு பர்லாங்கில் உள்ள கோயிலுக்குப் போவார்கள்.

சர்வமானியத் தெருப் பிள்ளையார் கோயில், தெருவின் மேல் கோடியில் பாதித்தெருவை அடைத்துக்கொண்டு இருக்கிறது. ஒரு மூங்கில் கழியைப் போட்டுப் பாலம் மாதிரி மறுபாதித் தெருவையும் அடைத்து வைத்துவிட்டு ராமச்சந்திர சாஸ்திரிகள் இரண்டு பேரை ஜமா சேர்த்துக்கொண்டு, பளபளவென்று புளி போட்டுக்கொண்டு தன் பெரிய சாரீரத்தால் தெருவையடைத்துக் கொண்டு "சாத்தனூர் சர்வமானியத்தெரு பிள்ளையார் கோயில் புனருத்தாரணத் தருமம்!" என்று உரத்த குரலில் கூவிக்கொண்டு தாண்டிப் போகிறவர்களிடம் வசூல் பண்ண ஆரம்பித்து விட்டார். எல்லோரும் கோயிலுக்கு பக்தியுடன் போகிறவர்கள். இதுவும் கோயில் கைங்கரியம் தானே! இருக்கிற ரூபாய், கால், அரை, ஒண்ணு என்று கொடுப்பதற்கு அவர்கள் தயங்கவில்லை. இப்படி முதல் கிருத்திகை வசூல் மட்டும் ஆறாயிரம் ரூபாய் சேர்ந்தது. அதை ட்ரஸ்டி மகாலிங்கம் — நன்றியுடன் என்றுதான் சொல்ல வேண்டும் — பெற்றுக் கொண்டார். அதில் பாதியையாவது அவர் கோயில் புனருத்தாரணத்திற்குச் செலவிட்டார் என்பது நிச்சயம். முழுவதும் அவருக்கே உபயோகப்பட்டு விடாது. தெய்வ பயம் இன்னும் கொஞ்சம் மனிதர்களிடையே ஒட்டிக் கொண்டிருந்த காலம் அது.

மூன்று கிருத்திகைகளில் ராமச்சந்திர சாஸ்திரிகள் பிள்ளையார் கோயில் புனருத்தாரணத்திற்கு வேண்டிய பணத்திற்கு அதிகமாகவே வசூல் செய்து விட்டார். இந்த மூன்று கிருத்திகைகளில் நடுக்கிருத்திகை ஆடிக்கிருத்திகையாக அமைந்து விடவே ஏராளமான ஜனங்கள். அன்று மட்டும் பத்துப்பனிரெண்டாயிரம் ரூபாய் சேர்ந்தது என்று சொல்லிக் கொண்டார்கள். எனக்கோ, மற்றவர்களுக்கோ இந்தக் கணக்கு வழக்கெல்லாம் தெரியாது. மொத்த புனருத்தாரண பட்ஜெட்டே பதினைந்தாயிரம் முதல் இருபதினாயிரம் வரையில்தான். எல்லாமாகச் சேர்ந்து மகாலிங்க ஐயரிடம் நாற்பது, நாற்பத்தியைந்தாயிரம் சேர்ந்துவிட்டதாகவும், அதில் ஒரு இருபதினாயிரத்திற்கு அவர் வேறு ஒரு கிராமத்தில் மூன்று ஏக்கரா நிலம் வாங்கியதாகவும்

சொல்லிக் கொண்டார்கள். செய்யக்கூடியவர்தான். ஆனால் ராமச்சந்திர சாஸ்திரிகள் பணத்தை நிஷ்களங்கமாகப் பிள்ளையார் கோயிலுக்கென்றுதான் சேர்த்தார்.

இந்தப் பணவசூல் வேகம் இருந்தவரையில் ராமச்சந்திர சாஸ்திரிகளின் பைத்தியம் கொஞ்சம் கட்டுக்குள் அடங்கியிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். அந்த சேஷ்டைகள் பல தெரியும். அடிக்கடி ‘‘கிட்டப் போகாதே! மூக்கைக் கடித்து விடுவாள்’’ என்று தெருவெல்லாம் கேட்கும்படியாக முழக்கமிடுவார். நினைத்துக் கொண்டால் திடுதிப்பென்று வேட்டியை நெருப்புப் பற்றிக்கொண்ட மாதிரி தூக்கி எறிந்துவிட்டு குறுக்கும், நெடுக்கும் நாலுதரம் தடதடவென்று ஓடுவார். சில சமயம் ஓடி காவேரியில் குதித்து விடுவார். தண்ணீர் மேலெல்லாம் வழிவதைத் துடைத்துக் கொள்ளாமலே பெரும் கருத்த சரீரத்துடன் அவர் தெருவோடு கையையும், காலையும் வீசிக்கொண்டு வரும்போது பயங்கரமாகவே இருக்கும். ஒன்றும் நடக்காவிட்டாலும் எந்த நிமிஷமும் எதுவும் நடந்துவிடும் போல ஒரு பயம் ஏற்படும்.

ஆடிக்கிருத்திகைக்கு முன் அமாவாசை வந்து விட்டுப் போனதனால் அந்த அமாவாசைக்கு ராமச்சந்திர சாஸ்திரிகளின் பைத்தியம் உச்சகட்டத்தை எட்டியிருந்தால் கூட அவர் கவனம் முழுவதும் பணவசூலில் இருந்ததால் அதன் விளைவுகள் தெரியவில்லை. ஆனால் அதற்கடுத்த அமாவாசைக்கு பைத்தியத்தின் சேஷ்டைகள் அதிகமாகத் தெரிய ஆரம்பித்துவிட்டன ஆங்கிலேயர்கள் தங்கள் மொழியிலேயே பைத்தியத்திற்கும், சந்திரனுக்கும் உறவு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பைத்தியத்தின் நுட்பம் தெரிந்துதான் அப்படி வைத்திருக்கிறார்களோ என்று சொல்ல வேண்டியதாக இருக்கிறது. சில பைத்தியங்களை அமாவாசை நெருங்க நெருங்க அதிகமாக இனங்கண்டு கொள்ளமுடிகிறது என்பது உண்மைதான்!

ராமச்சந்திர சாஸ்திரிகளுக்குப் பைத்தியம் பிடித்து இரண்டாவது அமாவாசையன்று தெருவில் ஒரே ரகளை. பக்கத்து வீட்டுக்கார அலமேலு என்கிற பெண் கலியாணமாகிப் புதிதாகப் புருஷன் வீட்டிற்குப் போய்விட்டு சாத்தனூரில் தன் அப்பா வீட்டிற்கு வந்திருப்பவள். தன்னை அழகி என்று கொஞ்சம் ராங்கிபிடித்த போதிலும் நல்லவள்தான் — அவள் குளிக்கக் காவேரிக்குக் கிளம்பும்போது, ‘‘காவேரியில் குளிக்கப் போறதுக்கு

சோப்புப்பெட்டி எதுக்குடி?'' என்று அவள் கையிலிருந்த சோப்புப் பெட்டியைப் பிடுங்கித் தூர எறிந்துவிட்டார். அந்தப் பெண் 'ஓ' வென்று பயந்து அலறிக்கொண்டே உள்ளே ஓடிவிட்டாள். தெருவோடு வெற்றிலை விற்றுக்கொண்டு போன ஒரு சாயபு, கையிலிருந்த வெற்றிலைகளையெல்லாம் பிடுங்கி, "இங்கு யாருடா உன்னை வெற்றிலை விற்கச் சொன்னது?'' என்று எறிந்துவிட்டார். பக்கத்து வீட்டு சுப்பிரமணியின் மகன் புஸ்தக மூட்டையைச் சுமந்துகொண்டு ஸ்கூலுக்குக் கிளம்பியவனைத் தடுத்து நிறுத்தி, "நீ சிகரெட் பிடிக்க எதுக்குடா ஸ்கூலுக்குப் போகணும்? இங்கயே உன் வீட்டில் சிகரெட் குடி, உன் அப்பன் சந்தோஷப்படுவான். அவன் வேறு என்னவோ குடிக்கிறான். நீ சிகரெட் தானே குடிக்கிறே?'' என்றே அவனைப் பள்ளிக்கூடம் போக விடவில்லை.

எல்லோரும் சேர்ந்து ஏதேதோ சொல்லி அவரை சமாதானப்படுத்திப் பார்த்தார்கள். முடியவில்லை. நடுத்தெருவில் தெருவை அடைத்துக்கொண்டு போவோர் வருவோரையெல்லாம் வாயாலும் கையாலும் கிண்டிக்கொண்டிருந்தார். பதினோறு மணி வாக்கில் ராமுடு வழக்கம்போல் கோயிலுக்குப் போக மேற்கே கிளம்பும்போது, "பண்ணுகிற கல்மிஷத்தையெல்லாம் பண்ணிக்கொண்டு உனக்கென்னடா கோயில்?'' என்று அவரை வழிமறைத்துப் பேசாமல் தடுத்துவிட்டார். "நீ யாரடா?'' என்று ராமுடு கேட்டதற்கு, கபடமில்லாமல் சிரித்துக்கொண்டு "உன் வப்பாட்டியின் புருஷன்!'' என்று உரக்கச் சொல்லிக் கலகலவென்று சிரிக்க ஆரம்பித்துவிட்டது பைத்தியம்.

தெருவில் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு விஷயம் புரிந்துவிட்டது. ராமச்சந்திர சாஸ்திரிகளின் பைத்தியம் அவர் மனைவி விஷயமாக அவருடைய கையாலாகாத்தனத்தினால் விளைந்ததுதான். ஏற்கனவே கசமுசவென்று தெருவில் ராமுடுவையும் சீதாலக்ஷ்மியம்மாளையும் சம்பந்தப்படுத்தி பேச்சு எழுந்திருந்தது. அதில் உண்மையிருப்பது துல்லியமாகத் தெரிய ஆரம்பித்துவிட்டது. சீதாலக்ஷ்மியம்மாள் வெளியே தலை காட்டவில்லை. ராமுடு தன் வீட்டிற்கும் போனவர் கையில் ஒரு உருண்டையான பிளக்காத சவுக்குக்கட்டையை எடுத்துக் கொண்டு வந்து நடுத்தெருவில் வேறு எங்கேயோ பார்த்துக்கொண்டு, "கிட்டப் போகாதே! மூக்கைக் கடித்து

விடுவாள்!'' என்று சொல்லிக்கொண்டு இருந்த ராமச்சந்திர சாஸ்திரிகளை அந்தச் சவுக்குக் கட்டையால் அடித்து விட்டார். ''ஐயோ!'' என்று அலறிக்கொண்டு இரண்டு கைகளையும் தலையில் வைத்து அழுத்திக்கொண்டு, இரத்தம் பீறிட்டடிக்க, தரையில் சாய்ந்து விட்டார் சாஸ்திரிகள் அப்போதுதான் ''அடப்பாவி! ''அவரைக் கொன்னுட்டியே'' என்று அலறிக் கொண்டு சீதாலக்ஷ்மியம்மாள் ஓடி வந்தாள். பக்கத்து வீட்டு மங்களம்பாட்டி வெல்லம் பானையிலிருந்து ஒரு பிடி வெல்லத்தை எடுத்துக் கொண்டு, ''இதை ரத்தம் வர்ற இடத்தில் தடவு. சரியாகிவிடும்'' என்று சொல்லிக் கொண்டு வந்தாள். ராமுடு சவுக்குக் கட்டையை மெதுவாக உள்ளே கொண்டு போய்ப் போட்டு விட்டு ஏதும் நடவாதது போலக் கோயிலுக்கு கிளம்பிவிட்டார்.

மகாலிங்க ஐயரும் அவருடைய பிள்ளை சாமாவுமாக ராமச்சந்திர சாஸ்திரிகளை அவர் வீட்டிற்கு இழுத்துப்போய் சீதாலக்ஷ்மி அம்மாவைக்கேட்டு இரண்டு தாம்புக்கயிறுகளை வாங்கி அவரைத் திண்ணைத் தூணில் அசைய முடியாதபடி கட்டிப் போட்டார்கள். ''காபி, மோர் ஏதாவது கொடு. டாக்டருக்கு சொல்லியனுப்பு'' என்றெல்லாம் உபதேசித்து விட்டு மகாலிங்க ஐயர் வீடு கிளம்பினார். அவர் பிறருக்கு ஒரு விதத்திலும் உதவுவதே கிடையாது. இந்த விஷயத்தில் உதவியதற்குக் காரணம் உண்டு என்று தெருவில் சொன்னார்கள். ''மொத்தம் தெரு வசூல் எத்தனையாயிற்று பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகத்திற்கு என்பது ராமச்சந்திர சாஸ்திரிகளுக்கு மட்டும்தான் தெரியும்! அவர் முழுப்பைத்தியமாகக் கட்டிப்போடப்பட்டு விட்டார். அதற்குப்பின் அவர் எத்தனை என்று சொன்னாலும் யாரும் நம்பமாட்டார்கள்; இருபதாயிரத்தை இரண்டாயிரம் என்று சாதித்து விடலாம். இதை உத்தேசித்துத்தான் சாஸ்திரிகளைக் கட்டிப்போட்டு விட அப்பனும் மகனும் ஓடி வந்தார்கள் என்று சொன்னார்கள். சொன்னார்களைவிட அபிப்பிராயப்பட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் அப்போதெல்லாம் தெருவில் மகாலிங்க ஐயருக்கும் அவர் குடும்பத்திற்கும் கொடி கட்டிப் பறந்த மாதிரிதான் என்று எனக்கு நினைவிற்கு வருகிறது.

அன்று மாலை தியாகராஜன் எங்கள் வீட்டிற்கு வந்ததும் என் மனைவி ராஜி அவன் வாயைக் கிண்டியது நினைவிற்கு வருகிறது. ''அவாத்து மாமாவைக்

கட்டிப் போட்டிருக்கிறார்கள்!'' என்றான் பையன். அவனுக்கு அப்போது ஐந்தாறு வயதிருக்கும்.

''எதுக்குடா தியாகு. அவரைக் கட்டிப் போட்டிருக்கு?''

''அவருக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கு!''

''பைத்தியம்னா என்ன?''

''வாயிலே வந்தபடி பேசுறார். அவாத்து மாமியாலேதான் அவருக்குப் பைத்தியம் பிடிச்சிடுத்துன்னு அம்மா சொல்றா!''

''அதற்குமேல் குழந்தையைப் பேசவிடாதே, நன்றாக இராது'' என்று நான் சொன்னேன்.

ராமச்சந்திர சாஸ்திரிகள் பிறகு என்ன ஆனார் என்று இன்று வரையில் எனக்குத் தெரியாது. டாக்டர் வந்தார் போலிஸூம் வந்தது. ராமுடு தான் நிரபராதி என்று போலிஸிடம் சொன்னார். யாரும் அவர் மேல், பைத்தியத்தை அடித்ததற்காகக் 'கேஸ்' போடவில்லை. தன் புருஷன், பிள்ளையுடன் சீதாலக்ஷ்மியம்மாள் தன் உமாவுடன் சேர கும்பகோணம் போய்விட்டாள். இரண்டொரு மாதங்களில் வீட்டையும் யாருக்கோ ரகசியமாக விற்றுவிட்டாள் என்று கேள்விப்பட்டோம்.

அதற்கு இரண்டொரு மாதங்களுக்குப்பிறகு நானும் சாத்தனூரை விட்டுக் கிளம்பிவிட்டேன். ராமச்சந்திர சாஸ்திரிகள் என்ன ஆனார், அவர் குடும்பம் என்னவாயிற்று என்று எனக்குத் தெரியவில்லை. நானும் விசாரித்துத் தெரிந்து கொள்ள ஆர்வங்காட்டவில்லை.

•

‘‘இந்தப் பைத்தியத்தைக் கலியாணம் செய்து கொண்டு ஏன் கல்யாணம் பண்ணிக்கொண்டோம் என்று கஷ்டப்பட்டுக் கொண்டே காலத்தைத் தள்ளிக்கொண்டிருக்கிறாள். இவள் தான் லீலா’’

‘‘ஏன் அப்படியெல்லாம் சொல்லுகிறாய்? அவள் விரும்பித்தானே உன்னைக் கல்யாணம் செய்து கொண்டாள்?’’

‘‘ஆமாம். யுகோஸ்லாவியாவில் எனக்கு நேர்ந்த விபத்திற்குப் பிறகு நான் ஏழெட்டு மாதங்கள் மூச்சுபேச்சில்லாமல் கிடந்தேன். அண்ணா ராஜா வீட்டில்தான் இருந்தேன். வேறு எங்கே போவது? அண்ணாதான் வைத்தியம் எல்லாம் பண்ணினான். எனக்குப் பணமேது? காசேது?

‘‘ஏன் நல்ல உத்தியோகத்திலிருக்கிறாய்! உன்னிடம் பணம், காசுக்கென்ன குறைச்சல்?

‘‘அப்படியெல்லாம் மற்றவர்களைப் போல இருந்தால் ஏன் பைத்தியம் பிடிக்கிறது? சம்பாதித்ததைப் புஸ்தகங்கள் வாங்குவது, சித்திரங்கள் வரைவதற்கு வர்ணங்கள், பிரஷ், திரைச்சீலை வாங்குவது என்று என் சம்பளத்தையெல்லாம் மீறிச் செலவாகி விடுகிறது. கடன் வாங்காமல் காலம் தள்ளினால் போதும் என்று ஆகி விடுகிறது.’’

‘‘லீலா டாக்டருக்குப் படித்து முடித்துவிட்டாளோ இல்லையோ!

‘‘எம்.பி.பி.எஸ் ஆகிவிட்டது. எம்.டி.க்குப் படித்துக் கொண்டிருக்கிறாள்.’’

‘‘மூன்று வருஷமா?’’

‘‘இல்லை. ஐந்து வருஷம் ஆகும்.’’

‘‘அதற்குப் பின் அவளும் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டால் சரியாகப் போய்விடும்.’’

‘‘அது இன்னும் கிடக்கிறது. ஆமாம், சொல்ல மறந்து விட்டேனே. அண்ணா கடிதம் எழுதியிருந்தான் உங்களை ரொம்ப விசாரித்து எழுதியிருக்கிறான்.’’

‘‘அப்படியா! அமெரிக்காவிலிருந்து திரும்பி வருகிற உத்தேசம் இல்லை போல இருக்கிறது.’’

இப்ப சத்தியமாக இல்லை. இங்கே என்ன இருக்கிறது? ஒரு தம்பி பைத்தியம். மற்றவர் எல்லாம் அவரவர் பாட்டைப் பார்த்துக் கொள்கிறவர்கள்.''

''எல்லோரும் அவரவர் பாட்டைப் பார்த்து கொள்வதாக இருந்தால் நல்லதுதானே!''

''அப்படியும் எங்கே முடிகிறது? சமயம் நேர்ந்தால் இருக்கிறவனிடம் அகப்பட்டதைச் சுரண்டத்தானே உறவினர்கள் இருக்கிறார்கள்?''

''அப்படி உங்களைப்பற்றி நான் நினைக்க மாட்டேன் உன் அண்ணாவெல்லாம் நல்ல பசங்கள்.''

''நீங்க சொன்னா சரி. கிளம்பு லீலா. மாமியிடம் இன்னொருநாள் சாவகாசமாக நீ மட்டும் வந்து பேசிக் கொண்டிரு. குழந்தையைப் பக்கத்து வீட்டுக்காரரிடம் விட்டு விட்டு வந்திருக்கிறோம். ராமலிங்கம் வீட்டுக்குப் போய் விட்டுப் போக வேண்டும். கிளம்பு.''

''ராமலிங்கம் வீட்டுக்கு அவசியம் போக வேண்டுமா?''

''வரேன் என்று சொல்லியிருந்தேன். பத்து நிமிடத்துக்கு மேல் தங்க வேண்டாம். லீலா பத்து நிமிஷங்களில் கிளம்பி விடலாம்.''

''வரேன் சுப்ரமணியம் சார். ரொம்ப நாளாக உங்களையெல்லாம் வந்து பார்க்கவேண்டும் என்று ஆசை. பலநாளாக அவரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்.''

''இரு குங்குமம் தரேன் லீலா. ஒருநாள் குழந்தையையும் அழைத்துக் கொண்டு சாப்பிட வா. குழந்தையை விட்டு விட்டு வராதே. குழந்தையையும் எடுத்துக்கொண்டு வா. அவசரமில்லாமல் ஒரு நாள் பூராவும் இருந்துவிட்டு சாயந்தரம் காபி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்.''

லீலாவும், தியாகுவும் போனபின் ராஜி, ''பெண் ரொம்ப நல்ல பெண்ணாக இருக்கிறாள். இவர் இப்படி இருக்கிறாரே என்று வருத்தப்படுகிறாள். பாவம்.''

''பாவம்தான்.''

''அப்பா இல்லையாம். அம்மா மட்டும் இருக்கிறாளாம். தியாகுவுக்கு வைத்தியம் பண்ணிக் கொண்டிருக்கும்போது பார்த்து அவனைத்தான் கலியாணம் பண்ணிக் கொள்வேன் என்று பண்ணிக் கொண்டாளாம்.

“அவளே டாக்டர். தெரிந்துதானே செய்திருக்கிறாள். கஷ்டப்பட்டு என்ன பண்றது?”

“உடம்பு தேறி விடலாம் என்று நம்பிக்கையும் இருக்கிறது. சில சமயம் பித்து அதிகமாகப் போய்விடுகிறது. இரண்டு மாதம் ஷதாராவில் அடைத்துக்கூட வைக்கும்படியாகிவிட்டதாம். ஒன்றும் ஒளிவு மறைவில்லாமல், கள்ளங் கபடமில்லாமல் இருக்கிறாள். பாவம்.”

“நாம் தியாகுவிற்கு வேண்டியவர்கள். அவனுக்கு நல்லதைத்தான் விரும்புவோம் என்று சொல்லுகிறாள் அவ்வளவு

தான்.”

“சாத்தனூர் கோயிலுக்கு வேண்டிக்கொள்ளச் சொன்னேன்.”

•

பைத்தியங்கள் என்று சிலரை ஏதோ காரணத்திற்காக ஒதுக்கி வைத்துவிட்டு, மற்றவர்கள் இது பற்றிக் கவலைப்படாமல் தங்கள் விருப்பங்களை முக்கியமாகக் கருதி கவனிக்கப்போய் விடுகிறார்கள்.

யாருக்காவது பைத்தியம் பிடித்துவிட்டது என்றால் அவனுடைய வீட்டிலுள்ளவர்களுக்கு நெருங்கிய உறவினர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. மற்றபடி ஊரார் அநேகமாக வேடிக்கை பார்க்கிறார்களே தவிர உதவியோ, வேறு விதத்தில் அனுசரணையாகவோ எதுவும் செய்வதில்லை.

‘‘பைத்தியம் என்று ஒரு சிலருக்கு ஏன் பிடிக்கிறது?’’

‘‘தன்னுடைய ஆயுட்காலம் முழுதும் எங்கும் மறந்து கெட்டுப் போக்கிவிடாமல் தன் குடையை காப்பாற்றிக் கொண்டிருந்து விட்டவனை மிக வெற்றிகரமான சாதாரண மனிதன் என்று சொல்ல வேண்டும்’’ என்று யாரோ ஒரு ஆங்கிலேயர் சொல்லியிருக்கிறான்.

அந்த ‘சாதாரணத்தை’ சாதனையாகக் கருதுபவர்கள்தான் நம்மில் பெரும்பாலோரும். சாதாரணமாகக் குடையைப்பற்றி நினைவு தப்பிப் போகிறவனைப் பைத்தியம் என்றே உலகம் கருதுகிறது. உலகத்தோடு ஒட்டி வாழாதவன் அறிவாளி அல்ல என்று வள்ளுவர் சொன்னார். அறிவும், அறிவில்லாமையும் இன்று முக்கியமான விஷயமல்ல. அறிவை ஆதாரமாக வைத்து நம் வாழ்க்கை நடப்பதில்லை. இன்று உலகத்தோடு ஒட்டி வாழாதவனை வேலைக்குப் போகாமல் சும்மா வீட்டில் இருப்பதுவே சுகம் என்று இருப்பவனை வீட்டுக்காரியங்கள் எல்லாவற்றையும் மனைவியிடம் ஒப்படைத்துவிட்டு அக்கடா என்று இருப்பவனை, பணம் காசில் கவனம் அதிகம் இல்லாதவனை, லட்சிவாதியைப் பைத்தியமென்று கூறி வருகிறார்கள். எப்போதும் புத்தகம் படித்துக் கொண்டிருப்பவனை புத்தகப் பைத்தியம் என்கிறார்கள். எப்போதும் சினிமா பார்த்துக் கொண்டிருப்பவனை சினிமாப் பைத்தியம் என்கிறார்கள். பெட்டி பெட்டியாக நகைகளை வாங்கி சுமந்து கொண்டிருப்பவளை நகைப் பைத்தியம் என்கிறார்கள். இப்படி உலகில் எத்தனையோ விதவிதமான பைத்தியங்கள் இருந்தாலும் பொதுவாகப் பைத்தியம் என்று சொன்னால் காரணமில்லாமல் ஏதோ செய்து

கொண்டிருப்பவனை, தனக்குத்தானே பேசிக் கொண்டிருப்பவனை, நம்பகமான பேச்சில்லாதவன் என்பவனையெல்லாம் உலகம் பைத்தியம் என்று ஏற்றுக் கொள்கிறது.

என் நண்பன் ஒருவருடைய அண்ணா வெகு நாட்களாக பைத்தியமாக, பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்கிறான். சாதாரணமாக இந்த மாதிரி யாராவது குடும்பத்திலிருந்தால் அந்தக் குடும்பத்தினர் அதை மறைத்து வைத்தியம் பார்ப்பார்கள். வெளியே சொல்ல மாட்டார்கள். என் நண்பனே கொஞ்சம் கொஞ்சம் பைத்தியம்தான் — அதனால் மறைக்காமல் அடிக்கடி வெளியே சொல்லிவிடுவான். அடைத்துப் போடப்பட்டுவிட்ட பைத்தியக்காரன் அதிர்ஷ்டசாலி. அடைத்துப் போடப்படாமல் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிற பைத்தியங்கள் கல்லெறிபடுகின்றனர் அல்லது ஏதாவது தப்புத் தண்டா செய்துவிட்டு மாட்டிக் கொண்டு அவஸ்தைப்படுகிறார்கள்.

ஒரு சமயம் நான் ஒரு நண்பனைத் தேடிக்கொண்டு அவன் ஊருக்குப் போனேன். தமிழில் படு தரமான இலக்கியப் பத்திரிகை ஆரம்பித்து தமிழர்களை கரையேற்றி விட வேண்டும் என்று துடியாய் இருந்த இளவயது எனக்கு. என் நண்பர் பணக்காரர் என்றும் பணக்கார மிராசுதாரர்கள் நிரம்பிய ஒரு ஊரைச் சேர்ந்தவர் என்றும், அவருக்கு லட்சக்கணக்கில் சொத்திருந்தது என்றும் எனக்குத் தெரியும். ஒரு பத்திரிகை ஆரம்பிக்க அவர் உதவவேண்டும் என்று ஒருதரம் கேட்டுக் கொண்டேன். தருவதாகச் சொல்லியிருந்தார். அதைப் போய் வாங்கிக் கொண்டு வரலாம் என்று நான் அவர் ஊருக்கு ஒரு நாள் கிளம்பினேன் — கையிலிருந்த பத்து ரூபாயை எடுத்துக் கொண்டு. ஊரில் போய்ப் பார்த்தால் என் நண்பரை அவர் வீட்டுத் திண்ணையில் கட்டிப்போட்டு வைத்திருந்தார்கள். அவருக்கு அடிக்கடி சித்த சுவாதீனமில்லாமல் போய்விடும் என்றும், அந்த மாதிரி நேருகிற சமயங்களில் அவர் யாருக்காவது ஹிம்சை விளைவிக்கக்கூடாது என்பதற்காகக் கட்டிப்போட்டு வைப்பார்கள் என்றும் என்னால் நினைத்துப் பார்த்திருக்க முடியாது. குருடும், குருடும் சேர்ந்து குருடாட்டம் ஆடுகிற கதையை நினைத்துக்கொண்டு ஊர் திரும்பினேன்.

யாருக்கும் எந்த விதத்திலும் சித்த சுவாதீனம் இல்லாமல் போகலாம்தான். மனத்தில் தாங்க முடியாத கவலை, அல்லது ஏதாவது இசைகேடாக

அடிபட்டால், அல்லது ஒரு வியாதியின் கொடுமை காரணமாக — இப்படி எத்தனையோ காரணங்களினால் பைத்தியம் பிடிக்கலாம்.

பைத்தியக்காரர்களைப் பற்றி நான் அதிகம் படித்ததில்லை. ஹிட்லரையும், ஸ்டாலினையும்கூட பைத்தியக்காரர்களாகச் சொல்லிக் காட்டும் நூல்கள் சில படித்திருக்கிறேன். இருவருமே யாராவது தங்களைக் கொன்று விடுவார்களோ என்ற பயத்தில் பைத்தியக்காரத்தனமாகவெல்லாம் செயல்படுவார்கள் என்று படித்திருக்கிறேன். உயிருக்கு பயந்து, தற்காப்புக்கு மெய்க்காவலர்களை நம்பி நடமாடும் உலகத்துப் பெரிய மனிதர்கள் எல்லாம் பைத்தியக்காரர்கள் தானே?

பலவிதமாகத் தன்னை மேன்மையாகக் கருதிக்கொண்ட ஒரு அம்மா ஒரு தரம், “நான் எங்கேயும் தனியாக நடந்து போகமாட்டேன் சார். என்னை யார் என்று தெரிந்து கொண்டு கூட்டம் கூடித் தொந்தரவு கொடுக்க ஆரம்பித்து விடுவார்கள்” என்று என்னிடம் சொன்ன போது, “இது என்ன பைத்தியம்!” என்று எண்ணத்தான் எனக்குத் தோன்றியது.

எனக்குப் பைத்தியங்களையும், பைத்தியத்திற்கான காரணங்களையும் பற்றி விசாரித்து அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதில்லை. ‘மனம் ஏன் பேதலித்துப்போகிறது? ஏன் பைத்தியங்கள் பைத்தியங்களாகிறார்கள்?’ என்றெல்லாம் விசாரித்துத் தெரிந்து கொள்ள ஆசைதான். ஆனால் மேலைநாட்டு மனோதத்துவ முறைகளில் எனக்குப் போதுமான ஈடுபாடு கிடையாது. அவர்கள் பாவம், முடிச்சு, விடுவிப்பு என்றெல்லாம் சொல்லும்போது அவர்கள் கிறித்துவர்கள் ஆண், பெண் உறவு பாவம் என்கிற அடிப்படையில் ஏற்றுக்கொண்ட ஒரு தத்துவ அடிப்படையில் மனித நடவடிக்கைகள், போக்கு பூராவையும் கவனிக்கிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. ‘ஃப்ராய்ட்’ என்கிற மனோதத்துவ நிபுணர் கிறித்துவப் போக்கை எதிர்த்து, மறுத்து, மனித நடவடிக்கைகள் அடிப்படையில் ஆண், பெண் உறவு அடிப்படையில்தான் குழந்தைப்பருவத்திலிருந்து சாகும் வரை நடக்கின்றன என்று ஸ்தாபித்தான். அது எந்த அளவில் சாப்பிடுவது போல புஸ்தகம் படிப்பது போல. நிலவில் சுகித்திருப்பதுபோல, புழுக்கமாக இருக்கும்போது மழை பெய்வது போல, வயிறு கனமாக இருக்கும்போது வெளிக்குப்போவது போல, ஆண், பெண் உறவும் ஒரு இயற்கை சுபாவத்துக்குட்பட்ட தவறல்லாத ஒரு இன்பம்தான் என்று ஏற்றுக்கொள்கிற இந்திய மனிதனுக்கு இந்த மன அலசல் எவ்வளவு

தூரம் சரியாக வரும்? 'காமசாஸ்திரம்' நூலுக்கு இடம் தந்த இந்தியாவில் காமகாரியங்கள் பாவமாகுமா? சமுதாயம் சில விதிகளுக்குட்பட்டே காம சேஷ்டைகளில் ஈடுபடலாம் என்று நியமித்திருப்பதை ஏற்றுக்கொண்டு விட்டால், அது அடிப்படையில் பாவமாக கருதப்பட வேண்டிய அவசியமேயில்லையே.

பரங்கிப்புண் போன்ற பால்வர்க்க வியாதிகளினால் பைத்தியம் வரலாம் என்று சொல்கிறார்கள். 'செக்ஸ்' இல்லாத பெண்ணுக்கு மனவியாதி வரலாம் என்கிறார்கள். ஏன், எப்படிப் பைத்தியம் பிடிக்கிறது என்பது தெரியாததனால் பல விஷயங்களைச் சொல்லுகிறார்கள்.

மொத்தத்தில் குளறுபடியாகத்தான் இருக்கிறது.

எனக்குத் தெரிந்த பைத்தியங்களையெல்லாம் நினைவிற்குக்கொண்டு வந்து பார்க்கிறேன். எனக்கு ஒரே குழப்பமாகத்தான் இருக்கிறது.

•

## 25

நான் நடத்திக் கொண்டிருந்த சிறுபத்திரிகைக்கு விளம்பரம் தேடிக்கொண்டு கோவை போயிருந்தபோது அங்கே இருந்த சாத்தனூர்ப் பேர்வழி குண்டுராமனை தேடிக்கொண்டு போனேன்.

எனக்கும் குண்டுராமனுக்கும் சாத்தனூரில் இருந்த நாட்களிலேயே அவ்வளவு ஒத்துப் போனது கிடையாது. அவன் ராஜாவுக்கு மிகவும் நெருக்கமான நண்பன். அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அவர்களிருவரும் ஒண்ணாங்கிளாஸிலிருந்து இண்டர்மீடியட் முடிக்கிற வரைக்கும் ஒன்றாகப் படித்தவர்கள். சாத்தனூரிலிருந்து கிளம்பிக் காலேஜுக்குப் போகும்போது ஒன்றாகப் போவார்கள்.

எனக்கும் அவனுக்கும் அவ்வளவு நெருக்கமில்லையே தவிர எங்களுக்குள் சண்டை ஒன்றும் கிடையாது. அவன் அப்பா, அம்மா, தம்பிகள் எல்லோரையும் எனக்குத் தெரியும். பார்த்தால், சௌக்யமா என்று கேட்பதுடன் சரி. நாலு வருஷம் சாத்தனூரில் இருந்தபோது சற்று நெருக்கமாகப் பழக இடம் இருந்தது. அப்போது நெருங்கி வருகிற வயதில்லாததினால் அது சாத்தியமாக இல்லை. பல பெரிய ஸ்தாபனங்களில் நல்ல பதவி வகித்து சௌக்கியமாக இருந்தான் குண்டுராமன். பல வேலைகள் மாறி மாறியிருந்தாலும் அவனுக்கு ஒரு அதிர்ஷ்டம். அடுத்த வேலையும் நல்ல வேலையாகவே கிடைத்ததுதான் அந்த அதிர்ஷ்டம்.

கோவையில் ஏதோ வியாபார ஸ்தாபனத்தில் இருந்தான். அவனால் என் விளம்பரம் தேடும் முயற்சிக்கு உதவி ஏதாவது கிடைக்கலாம் என்று தோன்றியது. பத்திரிகை விஷயத்தில் பெருமை பண்ணிக் கொண்டு ஒதுங்கிப்போய்விட்டால் பத்திரிகைக்கு நஷ்டம். போய்ப்பார்த்து உதவி கேட்டேன். பெரிதும் உதவத்தான் உதவினான்; அப்படியும் என் பத்திரிகை பிழைக்கவில்லை. அது வேறு விஷயம்.

போன இடத்தில் ஒருநாள் சாப்பிடச் சொன்னான் சாப்பிட்டுவிட்டு பேசிக்கொண்டிருக்கும்போது சாத்தனூர் பற்றியும், முக்கியமாக ராஜா பற்றியும் பேச்சு வந்தது. பேச்சு வாக்கில் "உனக்கு ராஜா தம்பி தியாகுவைத் தெரியுமில்லையா?" என்றான்.

‘‘நன்றாகத் தெரியுமே. சாத்தனூரில் நான் இருக்கும்போது தானே அவன் பிறந்தான். பிறகு தாம்பரத்திலிருக்கும்போது என் வீட்டிற்கு ரேடியோவில் B.B.C V.O.A என்று கேட்க வருவான். முக்கியமாக கவிதை வாசிப்பு நிகழ்ச்சிகள் கேட்க வருவான். அப்போது தாம்பரத்தில் கிறித்துவக் கல்லூரியில் வி.கி. ஆங்கிலம் படித்துக் கொண்டிருந்தான்.’’

‘‘ஆமாம். அவன் I.A.S. போய்ப் பாஸ் பண்ணினான்.

‘‘I.A.S. போனான் என்றும், பாஸ் பண்ணினாலும் கூட I.F.S. வேலை தர மாட்டேன் என்றதால் மறுபடியும் மறுபடியும் I.A.S. போய் முதல் இரண்டு ராங்கிற்குள் வர முயலுகிறான் என்றும் ராஜா ஒருநாள் சொன்னான்’’ என்றேன்.

‘‘இரண்டாவது முயற்சியில் இந்தியாவில் இரண்டாவதாகத் தேறி ஜவஹர்லால் நேருவையே நேரில் போய்ப் பார்த்து I.A.S.இல் சேர்ந்து ஆக்ஸ்ஃபோர்டில் இரண்டு வருடம் தேர்ச்சி பெற்ற பின் பாரீஸ், வாஷிங்டன், அடிஸ் அபாவிலெல்லாம் இருந்தான். கடைசியாக யுகோஸ்லாவியாவிலிருக்கும்போது அவன் ஓட்டிக்கொண்டு போன ஒரு கார் விபத்துக்குள்ளாகி இவனுக்கும் அடிபட்டு விட்டது. கூட இருந்தவர்கள் இறந்து விட்டார்கள். தியாகு தான் காரை ஓட்டிக்கொண்டு போயிருக்கிறான்.’’

‘‘அடப்பாவமே!’’

‘‘எட்டு மாதமாக, மண்டையில் பட்ட அடியினால் மயக்கமாக இருந்துவிட்டு இப்போதுதான் நடமாட்டமும், பிரக்ஞையும் வந்திருக்கிறது என்று ராஜா கடிதம் எழுதியிருக்கிறான்.’’

‘‘சரியாகப் போய்விட்டதல்லவா? பாவம் மிகவும் நல்ல பையன். என் மனைவிக்குக்கூட அவனை ரொம்பவும் பிடிக்கும்’’ என்றேன்.

‘‘அவனுக்கு வைத்தியம் பார்த்த டாக்டர் பெண் அவனைக் கலியாணம் செய்து கொள்வதாகச் சொல்வதாகவும், அவனுக்கு வேலை போகவில்லை, ஆனால் டெல்லியிலேயே சில வருஷங்கள் வேலை பார்க்கட்டும் என்று கவர்ன்மென்டில் சொல்லியிருக்கிறார்கள் என்றும் ராஜா எழுதியிருக்கிறான்’’ என்றான் குண்டுராமன்.

‘‘எங்கேயாவது நல்லபடியாக இருந்தால் சரி. பத்துஐயர் வீட்டுப் பசங்கள் எல்லாம் மணியான பசங்கள்’’ என்றேன் நான்.

“அதிலும் மூத்தவனும், கடைசியும் ரொம்ப பிரமாதமான ஆசாமிகள். ராஜாவைவிடக் கூட தியாகு புத்திசாலி” என்றான் குண்டுமணி.

விபத்தில் அடிபட்டு எட்டு மாதம் மூச்சுப்பேச்சில்லாமல் கிடந்திருக்கிறான். வேலையில் மறுபடி சேரலாம், டெல்லியிலேயே இருக்க வேண்டும். இவ்வளவுதான் எனக்குக் கிடைத்த தகவல் குண்டுராமன் மூலமாக.

டெல்லிக்குப் போக வேண்டிய அவசியம் அதற்கடுத்த வருஷம் எனக்கு ஏற்பட்டது. சிம்லாவில் ஒரு கருத்தரங்கு. டெல்லியில்போய் ஒரு வாரமாவது தங்குவது என்றும், முடிந்தால் தியாகு அகப்படுவானானால் பார்ப்பது என்றும் தீர்மானித்துக்கொண்டுதான் போனேன்.

சிம்லா போகும்போது டெல்லியில் தங்க முடியவில்லை. திரும்பி வரும்போது ஒரே குளிர். குளிரில் கையும், காலும் நடுங்க ஒருநாள் போகிறபோக்கில் தியாகுவின் வீட்டை விசாரித்துக் கொண்டு போய்ப் பார்த்தேன்.

•

# 26

‘‘என் பித்தம் தெளிந்துவிடுமா சார்?’’

‘‘ஏன் கவலைப்படுகிறாய்? எல்லாம் நல்லதாகத்தான் நடக்கும்.’’

‘‘சங்கராச்சாரியாரும் நல்லதே நடக்கும் என்றுதான் நான் நமஸ்காரம் பண்ணியபோது ஆசீர்வதித்தார்.’’

எது நடந்தாலும் நல்லதற்குத்தான் என்று நினைப்பது நம் ஊரில் பெரியவர்கள் மரபு.’’

‘‘சுதந்திரமாக என்ன விஷயத்தையும் தீர்மானிக்க வேண்டிய வேலை இருக்கிற பதவியில், என்னை இப்ப சத்தியாக போடக் கூடாது என்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.’’

‘‘அப்படியா? அதுவும் நல்லதற்குத்தான் என்று வைத்துக் கொள்ளேன்.’’

‘‘என் சர்வீஸ் ரெகார்டு என்ன? இரண்டாம் தரம் மி.கி.ஷி.க்கு உட்கார்ந்து இரண்டு தடவையும் நன்றாகப் பாஸ்பண்ணி இண்டியன் ஃபாரின் சர்வீஸில் மிகவும் நம்பிக்கையுடன் சேர்ந்தேன். இப்படியாகி விட்டதே!’’

‘‘ஒன்றும் ஆகவில்லையே! இன்னும் சில வருஷங்கள் அந்நிய நாடுகளுக்கு அனுப்ப மாட்டார்கள். சில வருஷங்கள் பொறுப்பு எதுவும் உள்ள பதவி தரமாட்டார்கள் — அவ்வளவு தானே! அதுவும் சௌகரியம்தானே!’’

‘‘சாதாரணமாக முன்போல இருந்துவிட்டால் இந்த மாதிரியெல்லாம் தோன்றாது. பொறுப்புள்ள பதவி தந்து என்னை வேலை செய்யவிட்டார்களானால் என் பைத்தியம் தெளிந்து விடும்’’.

‘‘தான் பைத்தியமோ என்று சந்தேகப்படுகிறவன் ஒரு நாளும் பைத்தியமாக இருக்க முடியாது.’’

‘‘இது குரைக்கிற நாய் கடிக்காது என்கிற மாதிரிதான். இந்தப் பழமொழி அந்த நாய்க்குத் தெரியாதே என்று யோசிக்க வேண்டியதாக இருக்கிறது.’’

‘‘சும்மா மனசைப் போட்டு அலட்டிக்காதே தியாகு. உனக்குப் பைத்தியம் என்றால், யாருக்குத்தான் பைத்தியமில்லை. உன்னை வேலையை விட்டுப் போ என்று சொல்லவில்லை உன் சர்க்கார்.’’

‘‘நானே வேலையை விட்டு விட்டு என் பெயின்டிங்கை மாத்திரம் கவனிக்கலாமோ என்று எண்ணுகிறேன்.’’

‘‘அதை மட்டும் செய்யாதே தியாகு. கஷ்டப்பட்டுத் தேடிக் கொண்ட வேலையை விட்டுவிடுவது, ரிஸைன் பண்ணி விட்டு வந்து விடுவது, மிகவும் சுலபம்.’’

‘‘பெயின்டிங்கில் முழு மூச்சுடன் ஈடுபட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது.’’

‘‘அதுவும் மிகவும் சுலபம்தான். ஆனால் யோசித்துப்பார் பொறுப்பு அதிகமில்லாத பதவி. கையில் நிறையச் சம்பளமும் மாதாமாதம் வருகிறது. வேலையை விட்டு விட்டால், உன் வாழ்க்கைத்தரம் படிப்படியாகத் தரம் இறங்கிவிடும். பெயின்டிங்கில் பணம் சம்பாதித்துச் சாப்பிடவும், ஸ்தானத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் சக்தியுள்ளவர்கள் மிகவும் சொல்பமானவர்கள்.’’

‘‘நீங்கள் எப்படியோ ஆயுள்பூராவும் எழுத்தாளராகவே இருந்து விட்டீர்களே? அது எப்படிச் சாத்தியமாயிற்று? என்று பலரும் என்னைக் கேட்கிறார்கள். நேற்றுக்கூட என் சினேகிதன் ராமலிங்கம் கேட்டான்.’’

‘‘சுதந்திரத்தை நான் காப்பாற்றிக் கொண்டது உண்மை தான். ஆனால் எத்தனை கஷ்டப்பட வேண்டியதாக இருந்தது தெரியுமா? எத்தனை தியாகங்கள்? Even today... போதும் போதாததுமாக வருகிற பணத்தை வைத்துக் கொண்டு, எப்படி அடுத்த வாரம் மானேஜ் பண்ணப் போகிறோம், அடுத்த

மாதம் எப்படி என்று தெரியாமல் அவஸ்தைப்படுவது ஒருநாளா, இரண்டுநாளா...? சுலபமாகச் சொல்லி விட்டாய். தவிரவும்...’’

‘‘தவிரவும்...’’

‘‘தவிரவும் இந்த இருபது ஆண்டுகளில் நீ ஒருவிதமான வாழ்க்கைத் தரத்திற்குப் பழகி விட்டாய். வேலையை விட்டு விட்டால் அந்த வாழ்க்கைத்தரம் கிடுகிடுவென்று இறங்கி விடும். மனைவி, குழந்தை வேறு இருக்கிறது.’’

‘She has a Career of her own. டாக்டராக அவள் முன்னேறி குழந்தையைக் காப்பாற்றி விடுவாள். அந்தத் தைரியம் எனக்கு இருக்கிறது.’’

“அது நல்லதுதான். இருந்தாலும் வேலையை விடுவது பைத்தியக்காரத்தனம்.”

“பைத்தியத்திற்குப் பைத்தியக்காரத்தனமாக யோசனைகள் தோன்றுவது நியாயந்தானே! லீலாவும் நீங்கள் சொல்லுகிற மாதிரிதான் சொல்கிறாள்.”

“என்ன?”

“வேலையை விடாதே என்று.”

“எல்லோரும் அதுதான் சொல்வார்கள். சங்கராச்சாரியாரிடம், நீ கேட்டால்கூட அப்படித்தான் சொல்லுவார்.”

“எனக்குத்தான் செய்கிற வேலை திருப்தியாக இல்லை. சித்திரம் வரைகிறபோதுதான் சற்று நிம்மதி ஏற்படுகிறமாதிரி இருக்கிறது.”

“சித்திரம் எழுதுவதில்கூட யாராவது உன்னை ஓரளவிற்காவது மதிக்கிறார்கள் என்றால், அது உன் பதவிக்காகத்தான். உன் வேலையை, விட்டுவிட்டவுடனே உன் சித்திரத்தையும் குறைவாக மதிப்பிட ஆரம்பித்து விடுவார்கள்.”

“அப்படியா நினைக்கிறீர்கள்?”

“தாம்பரத்திலேயே வேலைக்குப் போகாமல் சித்திரக்காரனாக இருக்கத் தைரியம் இருந்து, செய்து கொண்டிருந்தால், அது விஷயம் வேறு. இப்போது அது சரிப்பட்டு வராது. முதலில் வேலையை விட்டுவிட்டால் எங்கே போய் இருப்பாய்!”

“அதுவே பிரச்சனைதான்.”

“டெல்லியில் இருப்பதனால் ஏதோ கொஞ்சம் சித்திரம் எழுதவும் அதைக் காட்சியாகக் காட்டவும் முடிகிறது. வேறு எங்காவது போய்விட்டால் அதுவும் முடியாது.”

“சங்கராச்சாரியாருடனோ, ரமணமகரிஷி ஆசிரமத்திலோ, அல்லது அரவிந்தர் ஆசிரமத்திலோ கூடப் போயிருந்து விடலாமா என்று தோன்றுகிறது.”

“அதற்கெல்லாம் ஒரு மனப்பக்குவம் வேண்டும்.”

“அந்தப் பக்குவம் எனக்கில்லை என்கிறீர்களா?”

“முன்னெல்லாம் ஒரு கதை சொல்லுவார்கள் தெரியுமா?”

“என்ன?”

“ஒரு வீட்டுக்காரன் — மனைவி, அப்பா, அம்மா, குழந்தைகள், தம்பி, தங்கைகள் எல்லோரும் இருந்தார்கள் அவனுக்கு — எப்பவாவது வீட்டில் மனஸ்தாபம் வந்துவிட்டால், நான் சாமியாராகப் போய் விடுவேன், சாமியாராகப் போய் விடுவேன் என்று பயமுறுத்துவான். அவன் மனைவி ரொம்பவும் பயந்து போய் ஆறுதலுக்காக இந்த விஷயத்தைத் தன் அண்டை வீட்டுக்காரியிடம் சொல்லுவாள். அண்டை வீட்டுக்காரி தன் கணவரிடம் அதைச்சொல்லி அந்த மனுஷர் சாமியாராகப் போய்விட்டால் எல்லோரும் கஷ்டப்படுவார்களே என்று வருத்தப்பட்டாளாம்!”

“அப்புறம்!”

“இதை ஒன்றிரண்டு தடவை கேட்டுக்கொண்டு பொறுமையாக இருந்த அண்டை வீட்டுக்காரியின் புருஷன் மூன்றாவது தடவையாகத் தன் மனைவி அதைச் சொன்னதும், ‘அடி அசடே! இந்த மாதிரி சாமியாராகப் போகிறேன் போகிறேன் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறவன் ஒரு நாளும் சாமியாராக எல்லாவற்றையும் துறந்துவிட்டுப் போய் விட மாட்டான். பயப்படாதே!’ என்றாராம். ‘ரொம்பத் தெரிந்தவர் மாதிரி சொல்கிறீர்களே? யார்தான் சாமியாராகப் போவார்கள்’ என்று அவர் மனைவி எகத்தாளமாகக் கேட்கவே அண்டை வீட்டுக்காரியின் புருஷன், ‘இதோ பார் — சாமியாராகப் போகிறவன் இந்த மாதிரி யாரிடமும் சொல்லாமல் சாமியாராகப் போய்விடுவான்!! என்று சொல்லிவிட்டு மேல்துண்டை உதறிப் போட்டுவிட்டு, ஓடிப்போய் விட்டாராம்!”

“நல்ல கதைதான்.”

“சாமியாராகப் போகிறேன் என்பவன்; தூக்குப் போட்டுக் கொள்ளப் போகிறேன் என்பவன் மற்றும் ‘நான் பைத்தியமா; நான் பைத்தியமா’ என்று அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கிறவன் மாதிரி எல்லோருமேதான் பிறரைத்தான் சாமியாராகவும், தற்கொலைக்காரராகவும், பைத்தியமாகவும் ஆக்கி விடுவார்கள்.”

“நான் வந்துபோய் உங்களிடம் பேசிக் கொண்டிருப்பது உங்களைப் பைத்தியமாக்கி விடும்போல இருக்கிறதா?”

“அதெல்லாமில்லை. பேச்சுக்குத்தான் சொன்னேன். உன்னைப்பற்றிச் சொன்னதாக எண்ணிக் கொள்ளாதே தியாகு.”

‘‘லீலாகூட அவரைப்போய் அடிக்கடி தொந்தரவு செய்கிறீர்களே — வேண்டாமே! என்று இன்று கிளம்பும்போது கூடச் சொன்னாள்.’’

‘‘எனக்கு உன்னால் ஒரு தொந்தரவுமில்லை. என் மனைவி நேற்று கூட 'பத்து நாளாத் தியாகு வரவில்லை! என்ன விஷயமோ — போய்ப் பார்த்து விட்டு வாருங்களேன்' என்று சொன்னாள். நீ வருவதால் தொந்தரவு இல்லை. வராவிட்டால் தான் கவலையாக இருக்கிறது.’’

‘‘எனக்கென்று வேறு யாரும் கவலைப்பட இல்லை சார்.’’

‘‘ஏன், இல்லாமல் என்ன? எல்லோரும்தான் இருக்கிறார்கள். மணிமணியாக ஏழு அண்ணாக்கள், மன்னிகள், நாலைந்து சகோதரிகள் மற்றும்...’’

‘‘அவர்களையெல்லாம் நான் பார்த்துக்கூட ரொம்ப நாளாகிறது. டெல்லிக்கு வந்தால் தியாகுவை அவர்களுக்கு நினைவு வரும். மற்றபடி அவர்கள் என்னை நினைத்துக்கூடப் பார்க்கிறார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. உங்கள் காலம் வரையில் குடும்பங்கள் ஒற்றுமையாக இருந்தது உண்மைதான். சந்திக்கா விட்டால் கூட அன்பு இருக்கிறது — பிணைப்பு ஒன்று இருக்கிறது என்று நினைப்பது சாத்தியமாக இருந்தது. இன்று அதெல்லாம் இல்லை. அவரவர் பாடு என்று ஆகிவிட்டது.’’

‘‘அன்று கோவையில் குண்டுராமன்கூட உன்னைப் பற்றி எத்தனை அன்புடன் பேசிக் கொண்டிருந்தான் தெரியுமா? அவன் சொல்லியேதான் எனக்கு நீ வேலையில் சேர்ந்தது, விபத்திற்குள்ளானது, மயக்கமாக எட்டு மாதங்களுக்கு மேல் கிடந்தது உனக்குக் கலியாணமானது, எல்லாமே தெரியவந்தது.’’

‘‘குண்டுராமனா? அண்ணாவுடைய அத்தியந்த சிநேகிதன் அவர். போன மாதம்கூட டெல்லிக்கு வந்திருந்தார். பெண்ணுக்கு வரன் வேண்டும். யாராவது I.A.S. பையனாகப் பார்த்துச் சொல்லு என்றார். ஒரே பெண்தானே அவருக்கு? நிறையச் செலவழித்துக் கலியாணம் செய்யத் தயாராக இருந்தார். நான் இரண்டொரு மகாராஷ்டிரப் பையன்களையும் பஞ்சாபிப் பையன்களையும் சொன்னேன். தமிழ்ப் பிராமணப்பையனாக வேண்டும்; அதுவும் எங்களூர்க்காரப் பையனாக வேண்டும் என்றார். அப்படி யாரையும் எனக்குத் தெரியவில்லை. நான் சரியான வரனாகச் சொல்லவில்லையே என்று அவருக்கு என்கிட்டே கோபம்!’’

“எதுக்கு அவரைச் சொன்னேன் என்றால் எத்தனையோ பேர் நாம் அறியாமலே நம் எல்லோருக்கும் நண்பர்களாக இருக்கிறார்கள். நண்பனே ஒருவனும் இல்லை என்று நினைப்பவனுக்கும்கூட ஒரு ஆப்தன் முனைந்து வருவான்.”

“இருக்கட்டும் ரொம்ப நேரமாக இன்று பேசிக் கொண்டிருந்து விட்டோம். வரட்டுமா? காபி வேண்டாம். இப்போ வீட்டுக்குப் போய் சாப்பிடத்தான் போகிறேன். காபி வேண்டாம்.”

•

# 27

அன்று தியாகராஜன் வீட்டுக்கு நான் போனபோது தியாகுவும், ஒரு வேலைக்காரனும்தான் இருந்தார்கள். அன்று மாலையே ஆறு மணிக்கு நான் ரெயிலேற வேண்டியிருந்ததால் ஒரு மணி நேரம்தான் அவனோடு பேசிக் கொண்டிருக்க முடிந்தது.

முக்கியமாக இலக்கியம், கலை என்றுதான் பேச்சு.

அன்று ஏதோ ஒரு சித்திரத்தைத் தீட்டி முடிக்க வேண்டும் என்பதற்காக அவன் ஆபிஸிற்கு லீவு போட்டுவிட்டு வீட்டில் உட்கார்ந்திருந்தான். சித்திரத்தையும் முடிக்க முடியவில்லை. நூறாவது தடவையோ, இருநூறாவது தடவையோ 'Hamlet' எடுத்துப் படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய மகோன்னதமான உச்சரிப்பில் நாடகம் நடிக்கிற பாணியிலேயே பிடிவாதமாக சில காட்சிகளைப் படித்துக் காண்பித்தான். அவனைத் தடுத்து நிறுத்தி வேறு விஷயங்கள் பேச எனக்கு மனமில்லை. கேட்டுக் கொண்டிருந்தேன்.

"உன் மனைவி இல்லையா?" என்றேன். அப்போது அவளுக்கு இன்னும் அந்தப்பெண் பிறக்கவில்லை என்று ஞாபகம்.

"காலேஜ் போயிருக்கிறாள். அதாவது ஸஃப்தர்ஜங் ஆஸ்பிடலுக்கு போயிருக்கிறாள்."

"சென்னையில்தானே இருக்கிறீர்கள்?"

"இல்லை, தஞ்சாவூரில். அநேகமாக இரண்டொரு வாரத்தில் டெல்லிக்கு வரலாம் என்று பார்க்கிறேன்."

"வேலை ஏதாவது இருக்கிறதா?"

"எப்போதும் உள்ள வேலைதான். எங்கேயிருந்தாலும் நடக்கிற வேலைதான். எனக்கு ஒரே இடத்தில் இருக்க இருப்புக் கொள்ளவில்லை, பம்பாய், திருவனந்தபுரம், தஞ்சாவூர், சென்னை, விசாகப்பட்டிணம், கௌஹாத்தி என்று சுற்றிக் கொண்டிருக்கிறேன்."

"டெல்லி வந்ததும் சொல்லுங்கள். வந்து பார்க்கிறேன். அண்ணா குடியுங்குடித்தனமுமாக அமெரிக்கா போய்விட்டான் தெரியுமா? இல்லையோ!"

“யாரோ சொன்னார்கள். நீ எப்படியிருக்கிறாய்?”

“SO SO! சிலசமயம் எங்கே இருக்கிறேன், என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பது நினைவிற்கு வரமாட்டேன் என்கிறது. ஏதோ மேகம் மனத்தில் மூட்டம் போடுவது போல் இருக்கிறது.”

“டாக்டர் என்ன சொல்கிறார்”?

“Depression—க்கு இடம்கொடுக்காதே! உனக்கு எதில் இஷ்டமோ அதைச் செய்” என்கிறார். எனக்கு சித்திரம் வரைவது ஆறுதல் அளிப்பதாகத் தோன்றுகிறது. அதைச் செய்கிறேன்.”

சுற்றி வர இருந்த சித்திரங்களைப் பார்த்து விட்டு, “Abstract சித்திரங்களா?” என்று கேட்டேன். என் பெண்ணுக்குக்கூட சித்திரக்கலையில் ஆர்வமிருக்கிறது என்று சொல்லி விட்டு நான் கிளம்பத் தயாரானேன்.

“வண்டியில்லை. வண்டியிருந்தால் உங்களை உங்கள் மருமகன் வீட்டில் கொண்டுபோய் விட நானே வருவேன். டாக்டர் நான் இனிமேல் வண்டியோட்டக் கூடாது என்று சொல்லி விட்டார். ஆபிஸில் எனக்குத்தான் பொறுப்பான வேலைகளைத் தரக்கூடாது என்கிறார்கள். எதற்காக உயிர்வாழ வேண்டும் என்று தெரியவில்லை” என்றான் தியாகு.

“Depression—க்கு இடம் தரக்கூடாது என்று டாக்டர் சொன்னார் என்கிறாய்! இப்படியெல்லாம் நினைப்பது தப்பில்லையா!”

“நான் வேண்டுமென்று, Depression—க்கு இடம் தரவில்லையே, அது தானாக வருகிறது.”

“கவிதை எழுதிப் பாரேன், அது Depression—ஐத் துரத்தப் பயன்படலாம். சித்திரம் இருக்கவே இருக்கிறது. வேறு ஏதாவது ஒரு புது interest pickup பண்ணிக் கொண்டால்?”

“இந்த வயதில் என்ன interest புதுசாக pick up பண்ண முடியும்?”

“எதுவும் முடியும். நமது மனசுதானே காரணம்?”

“அதுதான் பலகீனமாக இருக்கிறது, எனக்கென்னவோ இதெல்லாவற்றிற்கும் ஒரே முடிவுதான் என்று தோன்றுகிறது”

“என்ன முடிவு?”

“சாவு, Death.”

“ஏன் அப்படித் தோன்ற வேண்டும்? Death என்பது எல்லாவற்றிற்கும், எல்லோருக்கும் வருகிற முடிவுதானே; அதைப் பற்றிப் பயப்பட வேண்டியதில்லையே. இருக்கிறவரையில் நல்லபடியாக, active ஆக, நிம்மதியாக இருக்க வேண்டாமோ?”

“அப்படியானால் சங்கராச்சாரியார் அல்லது அதுபோல வேறு யாரிடமாவது உபதேசம் பெற்றுக்கொண்டு ஜபம், Meditation, தியானம் மந்திரம் என்று ஏதாவது செய்வது தானே!”

“பெரியவர் – சங்கராச்சாரியார் – காயத்திரியே போதும் என்றார்.”

“அதையாவது செய்வது தானே? நிம்மதி பிறக்குமே.”

“மனம் எனும் குரங்கு பிடித்துக் கொண்டிருக்கிறது விடமாட்டேன் என்கிறது.”

“இதற்குள் பஸ் வந்துவிடவே நான் கிளம்ப வேண்டியதாகி விட்டது.”

•

# 28

“சேலத்து ஜனங்களெல்லாம் இன்று ராத்திரி உடுக்கடித்து சாமியாடப் போகிறார்கள். நான் போய்க் கொண்டிருக்கிறேன். நீங்களும் வரேளா சார்?”

“சாமியாட்டமா? சாமி ஆடிக் குறி சொல்வானா, நம்மூர்க் கோயில் போல...”

“ஆமாம். கீர்த்தி நகருக்குப் பக்கத்தில் ஒரு முள்ளமாரியம்மன் கோயில் கட்டியிருக்கிறார்களாம். அங்கே நடக்கிறது.”

“இங்கே டெல்லி வரையில் வந்துவிட்டது இது. ஏன் வரக்கூடாது?”

“மனிதர்களுக்குத் தேவைகள் இருப்பதனாலேதானே இதெல்லாம் ஏற்பட்டன.”

“திரும்ப எத்தனை மணி நேரமாகும்?”

“ஒண்ணு இரண்டு மணி அதிகம்கூட ஆகலாம். எனக்கே நிச்சயமாகத் தெரியாது.”

“சங்கராச்சாரியாரிடமும் சென்றாய் — இங்கே சாமியாட்டத்துக்கும் போகிறாயே! இது எப்படி?”

“இரண்டும் பூரணமாக எனக்குத் திருப்தியளிக்கவில்லையே! என்ன செய்வது?”

“இரண்டையும் மறந்து விடுவது!”

“யாரோ வந்து சொன்னான். அதையும் தான் பார்ப்போமே என்று கிளம்பினேன். சாமி எனக்கு என்ன குறி சொல்லுகிறது. பார்க்கலாமே!”

“நல்ல குறிதான் சொல்லும். ஒரு ரூபாய் விட்டால் இன்னும் நல்ல குறி சொல்லும். பத்து ரூபாய் விட்டால் இன்னும் நல்ல குறியாய்ச் சொல்லும்.”

“பத்து ரூபாய்க்கு அந்த அளவு மன ஆறுதல் பெறலாமே!”

“எத்தனை நிமிஷத்துக்கு அல்லது எத்தனை மணி நேரத்திற்கு?”

“அது உண்மைதான். இதெல்லாம் தாற்காலிகமானதுதான். அப்போ என்னையும் போக வேண்டாம் என்கிறீர்களா?”

“போக வேண்டாம் என்று நான் சொல்லி நீ போகாமல் இருந்து விட்டால் என்னையும் உன்னையும் குற்றம் சாட்டிக் கொண்டேயிருப்பாய்!”

“அப்படியானால் போ என்கிறீர்களா?”

‘‘நான் இரண்டும் சொல்லவில்லை. போவதானால் போ. போகாவிட்டால் பேசிக்கொண்டு இரு.’’

‘‘அப்படியானால் நீங்கள் வரவில்லை.’’

‘‘நிச்சயமாக நான் வரவில்லை. முதற்காரியம் குறி பார்ப்பதிலெல்லாம் எனக்கு நம்பிக்கையில்லை. ஏதோ ஏமாற்று, புரட்டு என்றுதான் இதையெல்லாம் பற்றி சொல்லத் தோன்றுகிறது. இரண்டாவது இந்த உடுக்குச் சத்தமும், ஆவேசமும் ஒரு அளவுக்கு என்னுள் ஒரு நரம்புப்புரளலும், முறுக்கும் உண்டாக்கும். அது உனக்கும் நல்லதல்ல என்று நான் நினைக்கிறேன்.’’

‘‘நல்லதல்லதான். எனக்கும் தெரிகிறது. ஆனால் பிராந்தி அருந்துவது நல்லதல்ல என்று தெரிந்தும் செய்கிறோமில்லையா!’’

‘‘உன் உதாரணம் சரிதான். பிராந்தி அருந்தாதிருப்பதும், உடுக்கடித்துப் பாராதிருப்பதும், ஏன் ஜோசியம் பார்க்காமலிருப்பதும்கூட நாமாக அறிந்து செய்யாமல் இருந்தால் நல்லதுதான்.’’

‘‘எனக்கு ஒரு பாஸ்போர்ட்டிற்கு உன் கையெழுத்து வேண்டும். நான் மறந்தே போய்விட்டேன் பார். நாளைக்கு உன் ஆபீஸ் ரூமுக்கு வருகிறேன் கையெழுத்து மட்டுமானால் இங்கு வாங்கிக்கொண்டு விடுவேன். சீல் எல்லாம் வேண்டுமே. நாளைக்கு நீ ஆபிஸில் இருப்பாயா?’’

‘‘நாளைக்கு வேண்டாம். நாளன்னைக்கு மத்தியானம் பதினொன்று, பனிரெண்டு மணிவாக்கில் வாங்களேன்.’’

‘‘வாரேன்’’

‘‘எங்கேயாவது foreign trip...’’

‘‘அதெல்லாம் ஒன்றுமில்லை. கையுடன் பாஸ்போர்ட் இருப்பது நல்லது தானே என்று தோன்றியது.’’

‘‘நான் குறி கேட்கப் போகிறேன் சார். வரட்டுமா?’

‘‘அப்ப சரி.’’

‘‘நீங்களும் வந்தால் நன்றாக இருக்குமே என்று பார்த்தேன்.’’

‘‘எனக்கு இரவு நேரங்களில் கண் சரியாகத் தெரிவதில்லை. தவிரவும் எனக்கு இதில் இஷ்டமில்லை. நீ போவதானால் போ.’’

“டாக்சியிலேயே போய்விட்டு அதே டாக்சியிலேயே வந்து விடுகிறேன். வழக்கமாக வருபவன்தான். பயம் ஒன்றுமில்லை.”

“பயப்பட எதுவுமில்லை. ஆனால் உனக்கு மன அமைதி தருவதற்குப் பதில் சாமியாட்டம், அமைதியின்மையைத்தான் தரும்.”

“ஒரே மாதிரியான அமைதியின்மையைத் தவிர்த்து வேறு விதமான அமைதியின்மையை நாடிப் போவது நல்லதுதானே!”

“உன் டாக்டருக்குத் தெரிந்தால் என்ன சொல்லுவார்?”

“டெல்லி டாக்டர்களுக்கு அப்படியெல்லாம் தங்கள் ஜீணீtவீமீஸீtகளிடம் ஈடுபாடு கிடையாது சார். அதுவும் நான் கவர்ன்மெண்ட் ஆசாமி. எப்படி எக்கேடு கெட்டாலும் அவர்களுக்கு ஒன்றுதான்.”

“அப்படியா?”

“எலக்ட்ரிக் ஷாக் ட்ரீட்மெண்ட் என்று ஒன்று கொடுக்கிறார்கள். அதை நினைத்தாலே பயமாக இருக்கிறது சார்.”

“அப்படியா?”

நல்லவேளையாக அந்த ட்ரீட்மெண்டை வருஷத்துக்கு இரண்டு தடவைகளுக்கு அதிகமாகத் தரக்கூடாது என்ற விதி இருக்கிறது என்கிறார்கள் — இல்லாவிட்டால் வாராவாரம் எனக்குப் போட்டுக் கொன்றுகொண்டேயிருப்பார்கள்.”

“உனக்கு எலக்ட்ரிக் ஷாக் ட்ரீட்மெண்டு கொடுத்து இப்போது எத்தனை நாளாச்சு?”

“ஒரு மாசம் இருக்கும். அதையெல்லாம் இப்போது நினைவு படுத்தாதீர்கள்.”

“உடுக்கடிப்பதும், பூஜைபோடுவதும் சாமியாடுவதும் அந்த மாதிரி ஒரு ட்ரீட்மெண்டு என்று உனக்குத் தோன்றுகிறதா?”

“இதில் tமீஸீsவீஷீஸீ ஏறுமே தவிர வலி இருக்காது. முறுக்கு ஏற ஏற அதற்கேற்ற மாதிரி அமைதியும் தொடரும்.”

“ஏதோ ஹோமியோபதி கொள்கை மாதிரி இருக்கிறது. எனக்கு பூராவும் புரியவில்லை.”

“எனக்கே புரிந்துதான் செய்கிறேன் என்று சொல்லத் தெரியவில்லை சார். ஏதோ போகவேண்டும் என்று தோன்றுகிறது போகிறேன். நல்லதா, கெட்டதா? என்று கூடத் தீர்மானித்துக் கொள்ள இயலவில்லை.”

“நம்மைவிடப் பெரியவர்களெல்லாம்கூட நல்லது, கெட்டது என்று பூரணமாகத் தெரிந்துகொள்ள முடியாமலேதான் காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்... காபி சாப்பிட்டு விட்டுப் போ.”

“உங்களாத்துக் காப்பி நன்றாக இருக்கிறது. கொடுக்கச் சொல்லுங்கள். சாப்பிட்டு விட்டுப் போகிறேன்.”

காபி சாப்பிட்டதும் கிளம்பினான்.

கீர்த்திநகர் என்பது நான் இருந்த சவுத் எக்ஸ்டன்ஷனிலிருந்து பத்து மைல்களுக்கப்பால் இருக்கிறது. அன்று இரவு பூராவும் என் காதில் உடுக்கடிப்பது ஒலிப்பது போலவும் ஒலித்துக்கொண்டேயிருந்தது. என்ன சொன்னான் என்றுதான் புரியவில்லை. வார்த்தைகள் தெளிவாக இல்லை. சப்தம் மாத்திரம்தான் இருந்தது. புரியாத ஒரு மொழியில் பேசுகிறானா அந்தப் பூசாரி...!

•

# 29

தியாகராஜன் உறவுக்காரர் ஒருவர் சென்னையில் என் வீட்டுக்குப் பக்கத்தில் ஏதோ பிரமாதமான வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறார். என்ன வியாபாரமென்று எனக்கு நிச்சயமாகத் தெரியாது. வெளிப்படையாகச் செய்கிற வியாபாரம் ஒன்று. ஆனால் கறுப்புப் பணம் வருவதற்காக வேறு ஒரு வியாபாரம். மொத்தத்தில் அவர் தகப்பனார் நிறையப் பணம் வைத்திருந்து அகாலத்தில் மரணமடைந்து தன் பிள்ளையிடம் வியாபாரங்களையும், பணத்தையும் ஒப்படைத்துப் போனார் என்று கேள்வி.

ராஜா கொஞ்சநாள் அவர்கள் வீட்டில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தான். அப்போது சில சமயம் அவனைத் தேடிப் போன சமயத்தில் அந்தப் பணக்காரராகிக் கொண்டிருந்த பெரியவரைப் பார்த்திருக்கிறேன். பேசியுமிருக்கிறேன்.

''சாமா சார், படிப்பினாலெல்லாம் என்ன பிரயோசனம் சார்? நீங்கள் கூடத்தான் நன்றாகப் படித்திருக்கேள் பணம் சம்பாதிக்கத் தெரியவில்லையே — என்ன பண்றது? பணம் சம்பாதிக்கச் சொல்லித் தரும் படிப்பு ஒன்றுதான் படிப்பு என்கிற பெயருக்கு லாயக்கு சாமா சார். மூன்று வருஷப் படிப்பானாலும் யாருக்கும் என்ன லாபமும் கிடையாது'' என்று சொல்லுவார் அந்தப் பெரியவர்.

அவர் அபிப்ராயத்தை மறுத்துச் சொல்லவோ, ஒட்டிச் சொல்லவோ எனக்கு ஒன்றும் போதுமான வழியில்லை. ''ஒப்புக் கொள்கிறேன் சார்'' என்று சொல்லிவிட்டுத் தப்பித்து விடுவேன். ராஜா இருந்தானானால், ''சாரோடு ஒன்றும் பேசி ஜெயிக்க முடியாது. இப்படி ஒப்புக்கொண்டு விடுவதுதான் சரி'' என்பான்.

''அவர் மாதிரி நம்மிடையே நினைப்பவர்கள் ரொம்பப் பேர் இருக்கிறார்கள். உன் அப்பாவோ என் அப்பாவோ அப்படி நினைக்காதவர்களாக இருக்கலாம். அந்த அளவிற்கு அவர்கள் தோல்வியுற்றவர்கள்தானே!'' என்றேன் நான் ராஜாவிடம். ராஜா அதைப் பற்றி அதிகமாகப் பேசமாட்டான்.

அந்தப் பெரியவர் மட்டும்தான் அப்படி என்றில்லை. அவர் பெற்ற மூன்று பிள்ளைகளும் அப்படித்தான். ஒரு சமயம் ராஜா, ''உனக்கு அவர் மூன்று

பிள்ளைகளைத்தானே தெரியும். அவருக்கு இன்னொரு சின்ன வீட்டில் இன்னொரு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.''

''புரியவில்லை'' என்றேன்.

''சாருக்கு இரண்டு செட் குடும்பங்கள். இரண்டு செட் குழந்தைகள். இரண்டும் சட்டப்படி.''

''பணம் சம்பாதித்தற்கு அது அடையாளமாக்கும்'' என்றேன் நான்.

''அது மட்டும் போதாது என்று ஒரு பத்து வருஷம் சார் சினிமா பிஸினஸ் பண்ணினார். அதில் இரண்டொரு சின்னவீடுகள் சட்டப்படி இல்லாமல் வேறு இருந்ததாகச் சொல்வார்கள்.''

எனக்கு அவர்களில் யாரோடும் நெருங்கிய பழக்கம் கிடையாது. பார்த்தால் சௌக்கியமா என்று கேட்பதோடு சரி. அதுவும் ஒரு பையனுடன் மட்டும்தான் பேசிப் பழக்கம். அவன் பெயர் வேங்கடராமன். நான் டெல்லியில் தியாகராஜனைப் பார்த்துவிட்டு திரும்பி வந்ததும் அகஸ்மாத்தாக அவனைப் பார்த்தேன். பார்த்தவன் ''சௌக்கியமா?'' என்று கேட்டதுடன் போயிருக்கலாம். அசட்டுத்தனமாக, ''நான் டெல்லியில் தியாகுவைப் பார்க்கப் போயிருந்தேன்'' என்றேன்.

முதலில் யாரைப் பற்றிப் பேசுகிறேன் என்றுகூட அவனுக்குத் தெரியவில்லை. ''சாத்தனூர் பத்து ஐயரின் கடைசிப் பிள்ளை தியாகுவை. உங்களுக்கு ஏதோ உறவில்லை அவன்?'' என்றேன்.

''ஆமாம், ஆமாம். அவனுக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டு விட்டது ஒரு விபத்து காரணமாக. சரியாகிப் போவது துர்லபம் என்று சொன்னார்கள்'' என்றான் வேங்கடராமன்.

''அப்படியா? அப்படியொன்றும் தெரியவில்லையே பார்த்து ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தேன். சித்தப்பிரமை எல்லாம் இருப்பதாகத் தெரியவில்லை. யாரோ வேண்டாதவர்கள் கதைகட்டி விட்டிருக்க வேண்டும். சாதாரணமாகத்தான் பேசிக் கொண்டிருந்தான். வேலைக்கும் போய் வருகிறான்'' என்றேன்.

''கேஸ் தேறாது என்று யாரோ சொன்னார்கள். வேண்டியவர்கள்தான்'' என்று திரும்பவும் வேங்கடராமன் சொல்லவே எனக்குக் கோபம் வரும்போல

இருந்தது.

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நான் நேரில் பார்த்து விட்டு வந்திருக்கிறேன் என்று சொன்னபோதிலும் இப்படிச் சொல்லுகிறானே என்று கோபம் வந்தது. ஆனால் அவனிடம் அதை விவாதித்துக் கொண்டு நிற்பதில் லாபமில்லை என்று, ''வரேன், பார்த்தேன் என்று சொன்னேன் அவ்வளவுதான்,'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டேன்.

சில பேருக்கு யாராவது சரியாக இருக்கிறார்கள், நன்றாக இருக்கிறார்கள் என்று கேட்டால் மனம் பொறுப்பதில்லை. யாரைப் பற்றியும் ஏதாவது குறையும், குற்றமும் சொல்லிக் கொண்டிருந்தால்தான் அவர்களுக்குத் திருப்தியாக இருக்கும். நன்றாக இருக்கிறான் என்று கேள்விப்பட்டு சந்தோஷப்படாமல் துயரப்படவும், 'அப்படியில்லை, சரியாகவில்லை', என்று சொல்லி அதில் இன்பம் காணவும் நம்மில் பலர் முற்படுகிறார்களே — இது ஏன்? பொறாமை என்று இதைச் சொல்ல முடியாது. இந்த வேங்கடராமன் என்பவனால் மெட்ரிகுலேஷன் கூடப் பாஸ் பண்ண இயலவில்லை. அப்பா எப்படியோ சம்பாதித்து வைத்துவிட்டுப் போன பணத்தை வைத்துக்கொண்டு வெளியே பெரிய மனிதன் என்று காலந்தள்ளிக் கொண்டிருக்கிறான். வெளிப்படையான பிஸினெஸ்ஸிலேயோ கூடத் தொடர்ந்து நடத்துவது யாரோ — ஒரு தாய்மாமன், அவனில்லாவிட்டால் இத்தனை நாள் தெருவில் அலைந்து கொண்டிருக்க வேண்டியவன் என்றும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இவன் தியாகராஜனைப் பொறாமை கொண்டதாக எண்ணுவதற்கு அவர்களிருவருக்கும் ஒருவித ஒற்றுமையும் இல்லையே!

ஏதோ ஒரு அசட்டு மனப்பாங்குதான்.

'ஒன்றுமில்லை, உடல் குணமாகிவிட்டது' என்று சொன்னால் 'உடல் நலம்பெறக் கூடாது அவன்' சித்தப்பிரமை பிடித்து அலையவேண்டும் என்று நம்புகிற மாதிரி பேசுகிறான்.

நாய் வாலை நிமிர்த்த முடியாது. உலகில் சின்ன மனதுள்ளவர்கள்தான் அதிகம். என்ன செய்ய முடியும்.

•

"அன்றைக்கு இரவு உடுக்கடித்து பூஜை போட்டுக் குறி கேட்கப் போனாயே — என்ன சொன்னான் பூசாரி?"

"போனேனா? போகவில்லையா? எனக்குத் தெரியவில்லை. பூசாரி ஏதாவது சொன்னானா? ஒன்றும் சொல்லவில்லையா? போனதும் தெரியவில்லை. வந்ததும் தெரியவில்லை சார்."

"அப்படியா?"

"லீலாவுக்குத்தான் ரொம்பக் கோபம்."

"ஏன்?"

"ஏன் என்றும் தெரியவில்லையே. மனிதர்களுக்கு எதற்காக எந்தச் சமயத்தில் எப்படிக் கோபம் வருகிறது என்று யாருக்குத் தெரிகிறது?"

"எல்லாச் செயல்களுமே காரண காரியங்களுக்குள் அடங்கி விடுவதில்லையே! அதுவும் சரிதான்."

"குழந்தைக்கு ரெண்டு நாட்களாக உடம்பு சரியாக இல்லை."

"என்ன உடம்பு?"

"அதைக் கேட்டால் என்னைக் கோபித்துக் கொள்கிறாள் லீலா. என்ன செய்ய?"

"நீ ஒன்றும் செய்யவில்லையே!"

"தண்ணீர் தொட்டியில் தூக்கிப் போட்டுவிட்டு மறந்தே போய்விட்டேன் சார். மறதிக்கு என்ன செய்ய? மறதிக்கு மாற்று ஏதாவது உண்டா?"

"எதைத் தூக்கிப் போட்டாய் தண்ணீர்த் தொட்டியில்? குழந்தையையா?"

"நான் என்ன பைத்தியமா — அப்படிப் போட?"

"எதைத் தூக்கிப் போட்டாய் தண்ணீர்த் தொட்டியில்?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை. நானே வழுக்கி விழுந்து விட்டேன். பலமான அடி..."

"ம்...ம்...ம்..."

“மறுபடியும் பத்து மாதம் மயக்கம் வந்துவிடப் போகிறதோ?”

“அதெல்லாம் வராது. பயப்படாதே. தினமும் காயத்ரி சொல்கிறாய் இல்லையா?”

“காயத்ரியா? காயத்ரி திருவாலங்காட்டில் இருக்கிறாள். அவள் புருஷன் இறந்து விட்டான் சார். பாவம்! ரொம்ப நல்ல பையன். அவள் விதவையாக அவள் அண்ணா சிவராமன் வீட்டிலிருக்கிறாள், வேறு எங்கே போவாள்?”

“அப்படியா? அந்தக் காயத்திரியை எனக்குத் தெரியாது.”

“உலகத்திலுள்ள எல்லோருக்கும் எல்லோரையும் தெரிந்திருக்க முடியுமா சார்? A peculiar and a particular வேண்டும். Hamletக்குக் கூட ஒரு local habitation and a given name இருக்கிறது. அதனால் அவனைக் கடவுள் என்று சொல்லி விட முடியுமா?”

“தியாகு! காபி சாப்பிடு!”

“உங்காத்து காபி நன்றாகத்தான் இருக்கிறது. இந்தக் காப்பி அம்மா சாத்தனூரில் போட்டுத் தந்த காப்பி மாதிரி இருக்கிறது. என் அம்மா, போய் விட்டாள் சார் — தெரியுமோல்லியோ?”

“தெரியுமே!”

“நான் படிப்பு, படிப்பு என்று உசிரை விட்டுப் படித்துக் கொண்டிருந்த சமயம் அது. அம்மா செத்துப் போனவுடனே தந்தி அடித்தார்கள். உடனே கிளம்பித்தான் போனேன். அவள் உடம்பைக்கூடப் பார்க்க முடியவில்லை. இரண்டாவது நாள் பாலூற்றும்போதுதான் போனேன்.”

“பாவம்! உங்கம்மாவைப் போல நல்ல பெண்மணி...”

“செத்துப் போனவர்கள் எல்லோரையும்தான் நல்லவர்கள் என்கிறோம். சாவு யாரை விட்டது? எல்லோரும் நல்லவர்கள் தான்.”

“எல்லோரும் நல்லவர்கள்தான் என்று நினைப்பது நல்லது தானே?”

“I had not thought that death had undone so many— So Many!”

“சுமங்கலியாகப் போனாள். உங்கம்மா பாக்கியசாலி.”

‘‘உலகம் அப்படித்தான் சொல்கிறது. இவள் செய்த புண்ணியத்திற்கெல்லாம் அடுத்த ஜென்மத்தில் பலன் கிடைத்திருக்கும். அடுத்த ஜென்மம் என்பதில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா சார்?’’

‘‘நம்பிக்கையில்லாமல் எப்படிப் போகும்? இந்தியனாகப் பிறந்துவிட்ட தோஷம் மறு ஜென்மம் என்பதில் நம்பிக்கை வைக்காமல் இருக்க முடியவில்லையே!’’

‘‘எதையும் செய்து முடிக்க மனிதனுக்கு ஒரு ஜென்மம் போதாது சார். செய்ய வேண்டிய காரியங்களை ஒழுங்காகச் செய்ய ஒரு ஜென்மம் போதாது. நீங்கள் Hamlet படித்திருக்கிறீர்கள். இல்லையா?’’

‘‘ம்...ம்...ம்...!’’

‘‘There are many things on Earth...என்று சொல்வதற்காகச் சொல்லவில்லை. Hamlet—ஐப் படித்துப் புரிந்துகொள்வதற்கு ஒரு ஜென்மம் போதாதுதான் சார்.’’

‘‘இப்படி எத்தனையோ நூல்களைப் பற்றிச் சொல்லலாம்,’’

‘‘நாம் வாழ்வதற்கு நூல்களிலிருந்து கற்றுக் கொள்கிறோமா?’’ பூர்வ ஜென்ம வாசனையிலிருந்து கற்றுக் கொள்கிறோமா? அல்லது சொந்த அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்கிறோமா?’’

‘‘ஒன்றிலிருந்தும் இல்லை. கற்றுக் கொள்ளாமலேதான் நாம் வாழ்ந்து முடிந்து விடுகிறோம்.’’

‘‘வரட்டுமா சார்?’’

‘‘போய் வா!’’

‘‘போகுமுன் ஒன்று சார், யுகோஸ்லாவியாவில் டுஷான்யா என்று ஒருவள். அவள் அப்பா ஜாக்ரெப் சர்வகலாசாலையில் கணிதப்பேராசிரியர். அவர் கவிதை எழுதுவார். டுஷான்யாவிற்கு இருபது வயதுதான் இருக்கும். என்னோடு பெல்கிரேடுக்குக் கிளம்பி காரில் வந்தாள் சார்!’’

‘‘அப்படியா!’’

‘‘ஆமாம். என்னால் அவள் உயிரே போய்விட்டது சார். நான் உயிரோடுதானே இருக்கிறேன்?’’

‘‘இதற்கு நான் என்ன பதில் சொல்லுவது!’’

“எனக்கு டுஷான்யாவின் அப்பாவை அதற்குப் பிறகு சந்திக்கவே துணிவு வரவில்லை. பாவம், ரொம்ப நல்ல மனிதன்.”

“நீதான் விபத்தினால் அடிபட்டு மயக்கமாகிக் கிடந்தாயே! அதற்குப் பிறகு இந்தியாவிற்கு வந்து விட்டாய். எப்படி டுஷான்யாவின் அப்பாவைச் சந்தித்திருக்க முடியும்?”

“அதற்குச் சொல்லவில்லை. டுஷான்யாவின் அப்பா ஒரு கவி என்று சொன்னேனே? அவர் பிரபலமான கவி. To Tusonia என்று ஒரு கவிதை படித்தேன் நேற்று.”

“அவர் எழுதியதா?”

“அதுதான் தெரியவில்லை. அவர் பெயர் மறந்துவிட்டது எனக்கு. வரேன் சார். அடுத்த வாரம் வரேன். வரட்டுமா?”

வாசல் வரையில் போய்விட்டுத் திரும்பி வந்தான். “சார் அன்று குறி கேட்கப் போனேன். தெரியுமில்லையா? உங்களுக்கு. அவன் குறி சரியாகத்தான் சொன்னான்.”

“என்ன சொன்னான்?”

“குறி ஏதோ சொன்னான். மறந்தே போய்விட்டது.”

“இரண்டும் கெட்டானாகச் சொன்னானாக்கும். ஜோசியர்கள், குறி சொல்பவர்கள் எல்லோருமே இப்படித்தான்.”

“வரேன் சார். வரட்டுமா?” என்று இந்தத் தடவை நிஜமாகவே டாக்சியில் ஏறிக்கொண்டு போய்விட்டான் தியாகு.

குறிகாரன் என்ன சொன்னான்? என்று எனக்குத் தெரியாத விஷயமாகவே கடைசிவரையில் ஆகிவிட்டது.

•

முதலில் நான் டெல்லிக்கு வந்துவிட்டு பின்னர் என் பெண்ணையும், மனைவியையும் டெல்லிக்கு அழைத்துக்கொண்டேன். முதலில் அவர்களுக்குச் சென்னையை விட்டு வரவே பிடிக்கவில்லை. டெல்லியில் பால் சொல்ப விலையில் நன்றாகக் கிடைக்கிறது — சென்னையில் ஒரு வாசனையடிக்கிறதே என்று எல்லாம் சொல்லி அவர்களை வரவழைக்க வேண்டியிருந்தது. டெல்லிக்கு வந்து குடியேறியதும் அவர்களுக்கு டெல்லி மிகவும் பிடித்து விட்டது. 'அடாடா என்ன வெயில்!' என்றும், 'அடாடா, என்ன குளிர்!' என்றும் சொல்லிக் கொண்டவர்கள் இப்போது டில்லியை விட்டுக் கிளம்பலாமா என்றால் மறுத்துச் சொல்லி விடுகிறார்கள்.

டெல்லிக்கு வந்து பத்துநாள் மட்டும் இருந்தபோது தியாகராஜன் ஒருநாள் வீட்டுக்கு இரவு அழைத்துப்போய் சாப்பாடு போட்டான். மெடிக்கல் கல்லூரியிலிருந்து திரும்பி வந்த அவன் மனைவிதான் சமைத்தாள். நல்ல சாப்பாடு. இன்னும் ஒருநாள் இரவு ஏதோ பார்ட்டி கொடுக்கிறேன் வா, என்று கூப்பிட்டான். போனேன் குடி பார்ட்டிதான். யாரோ மாற்றலாகிப் பாரிஸ் போகிற ஆபிஸ் நண்பனுக்காக. புதுசாகப் பலரைச் சந்தித்தேன். ஏற்கனவே சந்தித்திருந்த தியாகுவின் சில பழைய நண்பர்களையும் சந்தித்தேன். ராமலிங்கம், நடராஜன் என்று பலரையும் நான் அடிக்கடி தியாகுவுடன் சந்தித்ததுண்டு.

''Brilliant fellow; இப்படி நேர்ந்து விட்டது'' என்று அவர்கள் சொல்லுகிறபோது, 'இது எங்கே போய் முடியுமோ' என்று அவர்கள் பயப்பட்டது தெரிந்தது. நல்லபடியாக மட்டும் முடியப்போவதில்லை என்றும், அந்த விபத்தின் விளைவுகளை தியாகராஜன் பூராவாக அனுபவிக்காமல் போக முடியாது என்றும் அவர்கள் நினைப்பது தெரிந்தது. தியாகு பல சமயங்களில் தெளிவாகவே பேசினான் — நிதானம் தவறாமல் இருந்தான். சில சமயங்களில் பேச்சில், நடத்தையில் ஒரு lower. ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமை தெரிந்தது.

''லீலாவிடம் பேச்சுக் கொடுத்து அவள் கணவனைப் பற்றி என்ன நினைக்கிறாள் என்று தெரிந்துகொள்ள நான் செய்த முயற்சிகள்

பலிக்கவில்லை. தியாகுவை எனக்குப் பல ஆண்டுகள் தெரியும் — பிறந்தது முதலே தெரியும். என்ன சொன்னாலும் லீலாவைப் பற்றிய வரையில் நான் அந்நியன் தானே! புது ஆசாமிதானே. அவள் மனம்விட்டுப் பேசாததில் தவறு ஒன்றும் இல்லைதான். அவளும் தன் படிப்பில், தியாகராஜனுடன் சந்தோஷமாக இருப்பது மாதிரித்தான் தோன்றியது.

குழந்தை என்று பிறந்த பிறகு எல்லாம் சரியாகி விடும் என்று தோன்றியது. அவளே டாக்டர். குழந்தை பெற்றுக் கொள்வாளோ, மாட்டாளோ என்று என் மனைவி சந்தேகப்பட்டாள். என் மனைவிக்கு லீலாவைப் பார்த்த நாளிலிருந்து பிடித்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ''ராங்கியில்லாமல் அடக்கமான பெண்ணாக இருக்கிறாள். அழகாகவும் இருக்கிறாள். படிப்பும் இருக்கிறது. அவளுக்கென்ன குறை? பாவம் அவள் புருஷனுக்கு விபத்தில் மண்டையில் அடிபட்டுச் சிலசமயம் சித்தப்பிரமை போல இருக்கிறது. அது தானே சரியாகிவிடும் என்று எண்ணுகிறேன். ''சாத்தனூர் முருகனுக்கும், திருப்பதி வெங்கடாசலபதிக்கும் வேண்டிக்கோ — தானாகச் சரியாகிப் போய்விடும். கவலைப்படாதே'' என்று சொன்னேன். தியாகுவிற்குப் பைத்தியம் ஒன்றும் இல்லை. சிலசமயம் அந்த விபத்து காரணமாகப் பித்துப்பிடித்த மாதிரி இருக்கிறான். அவ்வளவுதான். நாளடைவில் சரியாகிப் போய்விடாதோ?''

''சரியாகிப் போய்விட வேண்டும்!''

''தானே சரியாகிப்போய்விடும். நல்ல படிப்பு! எப்படி இருக்கிறான் ராஜாவாட்டம்! இத்தனையும் வீணாகப் போய் விடவா கடவுள் விடுவார்!''

''கடவுள் எதையும் நம்மைப்போல் நினைப்பதில்லையே! அதில்தான் சிரமம் இருக்கிறது'' என்றேன்.

''குதர்க்கமாக ஏதாவது சொல்ல வேண்டாம்; தியாகுவுக்கென்ன? எத்தனை மரியாதையான பிள்ளை. சாத்தனூரிலிருந்து எனக்குத் தெரியுமே அவனை! தாம்பரத்தில் வருவானே — மற்ற காலேஜ் பையன்களைப் போலவா இருந்தான் அவன்? இருந்தாலும் அவனுக்கு இப்படியெல்லாம் வந்திருக்க வேண்டாம்.''

''வந்துவிட்டது. என்ன செய்ய?''

''வைத்தியம் பார்த்துக்கொண்டு, உடம்பையும் தேற்றிக்கொண்டு ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதுதான்.''

‘‘ஜாக்கிரதைக்குக் குறைவில்லை. அப்படியொன்றும் மனம் தேறாமல் போய்விடாது என்றுதான் இன்னும் வேலையிலும் வைத்துக்கொண்டு சம்பளமும் கொடுக்கிறார்கள்.’’

‘‘ஏண்ணா? தியாகுவுக்கு மாதம் இரண்டாயிரம் சம்பளம் வருமோல்லியோ?’’

‘‘எனக்கு அதெல்லாம் நிச்சயமாகத் தெரியாது. இரண்டாயிரம் வரலாம். மேலேயும் வரலாம். அதற்குத் தகுந்த செலவும் இருக்கும். பாவம்! போதாததற்கு சித்திரம் வேறு வரைகிறான். அதுவும் செலவு அதிகமாகும்.’’

‘‘இதெல்லாம் பைத்தியம் பிடிக்க வழிதான். எழுத்தாளனாக இருப்பதும், சித்திரம் வரைவதும் அவனுக்கெதற்கு? பேசாமல் கைநிறையச் சம்பளத்தை வாங்கிக்கொண்டு உத்தியோகத்தைக் காப்பாற்றிக் கொண்டிருந்தால் போதாதா?’’

ஒரு எழுத்தாளனுடன் சற்றேறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு மேல் காலந்தள்ளிவிட்ட என் மனைவிக்கு எழுத்து, கலை என்று பெரிதாகச் சொல்லப்படுவதன் தரம், தன்மை எல்லாம் நன்றாகவே தெரியும். என்னுடனேயே பலதையும் அனுபவித்திருப்பவள் தானே!

‘‘சித்திரம் வரைவதில் ஒரு அமைதி இருக்கிறது என்கிறான் தியாகு!’’

‘‘அது எப்படியோ போகட்டும். வேலையைக் காப்பாற்றிக் கொள்கிற வரையில் சரி’’ என்றாள் ராஜி.

•

## 32

பாப்பாவுக்கு — அதாவது என் பெண்ணுக்கு டெல்லியிலேயே கல்யாணம் நிச்சயமாயிற்று. அவளே பார்த்துக்கொண்ட மாப்பிள்ளைதான். அவளுக்கு அதாவது அவர்களிருவருமாகவே செலவுசெய்து பண்ணிக்கொண்ட கல்யாணம். என்னிடம் அப்படியெல்லாம் செலவழிக்கப் பணம் ஏது?!

‘‘அப்பா தந்த பணத்தையெல்லாம் வைத்திருந்தால்...!’’ என்று ராஜி சொல்லிக்காட்டினாள்.

“அதெல்லாம் இப்போ பேசி என்ன லாபம்?” என்று யார் யாரையோ கடன் கேட்டேன். முக்கியமாகப் பாப்பாவைத் தெரிந்த பத்துப்பேரைக் கடனாகக் கேட்டேன். அவர்கள் கடனாக கொடுத்திருந்தால் எப்படித் திருப்பிக் கொடுத்திருக்கப் போகிறேன்? திருப்பி எதிர்பார்த்திருக்க முடியாத கடன் என்று சொல்ல வேண்டும். ஒரு குஜராத்தி எழுத்தாளர், ஒரு ஹிந்தி எழுத்தாளர் இருவரும் ஆயிரம் ஆயிரம் ரூபாய் ஆளுக்குக் கொடுத்தார்கள். ஒரே ஒரு தமிழ் எழுத்தாளர் (தி. ஜானகிராமன்) ஒரு எழுநூற்றியைம்பது ரூபாய் கொடுத்துதவினார். இதில் ஐந்நூறு இரண்டொரு மாதத்தில் திருப்பித் தந்துவிட்டேன். பாக்கி 250 அவரே ‘சிரமப்படாதே வேண்டாம்” என்று சொல்லிவிட்டார்.

ஆனால் கல்யாணம் நாற்பதினாயிரம் செலவில் நடந்தது.

தியாகராஜன் திருமணத்தன்று கூடவே இருந்தான். லீலாவும் அப்போது நாலைந்து வயதிருக்கும் பெண் குழந்தையும் கல்யாணத்திற்கு வந்திருந்தார்கள். லீலாவின் அம்மாகூட வந்திருந்தாள் என்று நம்புகிறேன். ராஜிக்கு அவர்கள் எல்லோரையுமே பிடித்திருந்தது. லீலாவின் அம்மாவும் ரொம்ப நல்லவளாக இருக்கிறாள் என்று சொன்னாள்.

தியாகராஜன் கல்யாணத்திற்கு, பால் — பாயாசமா, சேமியா பாயாசமா என்று கேட்டு இரண்டு வேளையும் இரண்டும் உண்டு என்றதும் சந்தோஷத்துடன் நாக்கைத் தீட்டிக்கொண்டு, மூணு கப் பாயாசம் சாப்பிட்டேன் என்று லீலாவிடம் சொன்ன போது, “உடம்புக்கு ஆகாது” என்று டாக்டராகச் சொல்லி விட்டு அவள் பேசாதிருந்து விட்டாள் என்று கவனித்தேன்.

தியாகராஜனும் அவன் மனைவியும் பணமாக மொய் எழுதாமல் ஒரு கைத்தறிப்புடவை வாங்கி வந்து ஓதி விட்டார்கள். கல்யாணத்திற்கு வந்தவர்கள் பலருடனும் கலகலவென்று ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாவிட்டாலும் பல விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தான் தியாகராஜன்.

ஒரே ஒருவர் — ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர் மட்டும் என்னிடம் வந்து ரகசியமாக, “இவர் — இந்தத் தியாகராஜன் என்பவர் சம்பந்தா சம்பந்தமில்லாமல் என்னமோ பேசிக் கொண்டிருக்கிறாரே?” என்று கேட்டார்.

‘‘அவருக்கு மனது ஏதோ கோளாறு போல இருக்கு!’’ என்றார். ‘‘அப்படியெல்லாம் ஒன்றும் இல்லையே!’’ என்று சொல்லி விட்டு நகர்ந்து விட்டேன்.

கல்யாணமெல்லாம் முடிந்து லீலா விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பும்போது ராஜியிடம் என் காதில் விழும்படியாகக் கூறிக்கொண்டிருந்தாள். ‘‘என் படிப்பு முடிந்து விட்டது மாமி! எனக்கு நைஜீரியாவில் வேலை கிடைக்கும் போல இருக்கிறது. போகலாமா, வேண்டாமா என்று யோசனை.’’

‘‘நைஜீரியாவா? அது எங்கிருக்கிறது?’’

‘‘ஆப்ரிக்காவில். தியாகுவைத் தனியாக விட்டு விட்டுன்னா போகணும்?’’

‘‘ஆமாம். குழந்தையையும் அழைத்துக்கொண்டு போக வேண்டும்’’ என்றாள் லீலா.

‘‘அதன் அவசியம் தெரிந்தது. குழந்தையை அவனை நம்பி விட்டுவிட்டுப் போக முடியாது. அவனுக்கும் கஷ்டம். பிரிந்திருக்கிற தாய்க்கும் எப்போதும் கவலையாக இருக்கும்.

‘‘இங்கேயே வேலை கிடைக்காதோ?’’

‘‘கிடைக்கும் பார்க்கணும். சிரமம்தான். பிறகு ஏதோ கிடைக்கலாம் என்று கிடைப்பதை விட்டுவிட்டால் நஷ்டம் தானே! நான் இருந்து என்ன செய்யப் போகிறேன்?’’

‘‘அப்படியா? நம்ம ஆளு என்று ஒருத்தர் இருக்கிற தைரியம், தெம்பு வேறு எதில் வரும்?’’ என்று கேட்டாள் என் மனைவி.

‘‘இன்னும் தீர்மானம் பண்ணவில்லை.’’

‘‘தியாகராஜன் என்ன சொல்கிறார்?’’

‘‘உன் விஷயம். நீ தீர்மானம் செய்துகொள் என்கிறார்’’ என்றாள் லீலா. ‘‘எனக்கு நைஜீரியாவில் போய்ப் பார்ப்பது நல்லது என்றுதான் தோன்றுகிறது.’’

‘‘வேறு ஒருவரும் வந்து தியாகுவுடன் இருக்க முடியாது. இல்லையா?’’

‘‘யார் வந்து இருப்பார்கள்? அவரவர் இடம் அவரவருக்கு ஏற்பட்டு இருக்கிறதே! என்ன செய்வது? வரேன் ...’’

இதைக் கேள்வியுற்று என் பெண் பாப்பாவுக்குக் கோபம் கோபமாக வந்தது. ‘‘எப்படி அவள் தியாகுவைத் தனியாக விட்டுப் போகலாம்? அதுவும் அவ்வளவு தூரம் ஐந்து வருஷங்களுக்கு?’’ என்றாள் பாப்பா.

‘‘இதில் சொல்ல முடியாத சில விஷயங்களும் இருக்கலாம் பாப்பா. நமக்கு முழு விவரமும் தெரியாது. டாக்டர்களே சொல்லி இருக்கலாம். கணவனும் மனைவியும் சில காலம் பிரிந்திருப்பது நல்லது என்று அபிப்ராயம் சொல்லியிருக்கலாம். வேறு குழந்தை இந்தச் சமயத்தில் பிறந்தால் அதற்கு எப்படி மனநிலை இருக்குமோ என்று பயம் இருக்கலாம். தான் படித்த படிப்பு வீணாகி விடக்கூடாதே என்று இருக்கலாம்...’’

‘‘அது எப்படியிருந்தாலும் லீலா இந்தச் சமயத்தில் தியாகுவைத் தனியாக விட்டுப் போகக்கூடாது என்றுதான் தோன்றுகிறது’’ என்றாள் பாப்பா.

‘‘அவனை வேண்டுமென்று, ‘லவ்’ பண்ணித்தான் கல்யாணம் பண்ணிக் கொண்டாள். உடல் தேறினாலும் மனம் தேறாதோ என்கிற பயம் அப்போதுகூட இருந்திருக்கத்தானே வேண்டும்! சுய லாபத்திற்காக, சுய காரியமாக அவனை விட்டு விட்டுப் போகிறவளாகவும் எனக்கு அவளைப் பார்த்தால் தோணவில்லை. என்னவோ, ஏதோ — தெரியாமல் அவள் செய்வது தப்பு என்று சொல்லிவிடக்கூடாது. நான்கூடச் சொன்னேன் — லேசாக ஓரளவுதான் சொல்லலாம்.

நாங்கள் யாரும் அதற்குப் பிறகு லீலாவைச் சந்திக்கவில்லை.

தியாகராஜன் சொல்லித்தான், லீலா குழந்தையையும் அழைத்துக்கொண்டு நைஜீரியா போய்விட்டாள் என்பது தெரியவந்தது. நைஜீரியாவில் குழந்தையின் படிப்புக்கு இடம் வசதியாக இல்லாததால் மால்டா தீவில் ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஹாஸ்டலில் சேர்ந்திருப்பதாகவும், அவள் லீவு எடுத்துக் கொண்டு போய்ப் பார்த்துவிட்டு வரப் போவதாகவும் பின்னர் ஒருதரம் வந்தபோது தெரிவித்தாள். அவன் சொல்லித்தான் நைஜீரியாவில் லீலாவின் ஒப்பந்தம் ஐந்து ஆண்டுகளுக்கென்றும், கூடுமானால் இன்னும் இரண்டு வருஷம்கூட நீடிக்கலாம் என்றும் தெரிய வந்தது.

அதற்குப்பின் அவன் நைஜீரியா போகவும் இல்லை. குழந்தையையோ, மனைவியையோ, மறுபடி பார்த்ததாகவும் தெரியவில்லை. எனக்குத்

தெரியவில்லை என்றுதான் சொல்லலாமே தவிர பார்க்கவில்லை என்றும் நிச்சயமாக எனக்குத் தெரியாது. இந்த விஷயத்தில். 'நாம் கிணறு வெட்ட பூதம் ஏதாவது புறப்படப் போகிறதே!' என்று பயம். என் மனைவி சிலசமயம் லீலாவையும், குழந்தையையும் பற்றிக் கேட்பாள். "போன மாதம் கூடக் கடிதம் வந்தது" என்பான் தியாகு. அதைப்பற்றி அவனும் அதிகம் சொன்னதில்லை. நாங்களும் விசாரிக்க முன்வரவில்லை. மனப் புண்ணைக் குத்திக் கிளறிவிடுவது மாதிரி ஆகிவிடுமோ என்ற பயம்!

•

# 33

தன்னுடைய நாற்பத்தைந்தாவது பிறந்த நாள், அவசியம் வரவேண்டும் என்று என்னைக் கூப்பிட வந்த தியாகராஜன் பாப்பாவையும், பாப்பாவினுடைய புருஷன் மணியையும் கூப்பிட்டான். போனோம்.

முக்கியமாக, நாங்கள் அவனை மதிக்கவில்லை; மதிக்காமல் வராமல் இருந்துவிட்டோம் என்று அவன் நினைத்துவிடக் கூடாதே என்பதற்காகப் போனோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

மனதிற்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுத்த பிறந்தநாள் பார்ட்டி அது என்றுதான் சொல்ல வேண்டும். நெருங்கியவர்கள் என்று சொல்லும்படியாக ஒருவரும் அவன் பிறந்தநாள் பார்ட்டிக்கு வரவில்லை. எங்கள் மூன்று பேரையும் தவிர இரண்டுபேர்தான் தெரிந்தவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் வந்திருந்தார்கள். அவர்களும் தியாகுவுக்கு ஷ்வீsலீ பண்ணிவிட்டு, Happy Birthday சொல்லிவிட்டுப் போய்விடத் தயாராய் இருந்தார்கள்.

யாரோ ஒருவன் — உத்திர சுவாமி மலைக்கோயிலில் அபஸ்வரமாகப் பாடிக் கொண்டிருப்பவன் — காசு கொடுத்து அவனைப் பாடச் சொல்லியிருந்தான். அவன் முருகனைப் பற்றிய பாடல்களைத் தத்துப் பித்தென்று அபஸ்வரமாகவும் வார்த்தைகள் சீராக வராமலும் பாடலே சரியாக இல்லாமலும் பாடிக்கொண்டிருந்தான். டாக்டர் குடிக்கவேண்டாம் என்று கண்டித்துச் சொல்லியிருந்தும்கூட, தியாகு அன்றைக்கு சற்று அதிகமாகவே குடித்துக் கொண்டிருந்தான் என்று தோன்றியது. மனைவியும், குழந்தையும் இல்லையே, வீட்டில். அவன் வைத்தது தானே சட்டம்!

பிறந்தநாள் கேக்கில் நாற்பத்திஐந்து மெழுகுவர்த்திகளைக் கொளுத்திவைத்து வாயில் ‘உப்’பென்று மெழுகுவர்த்திகளை ஊதி அணைத்துக்கொண்டிருந்த தியாகுவை, “இது என்ன பழக்கம்? நம்ம வீட்டிலெல்லாம் விளக்கை ஊதி அணைக்கக் கூடாது, அது தவறு என்று சொல்வார்கள். நாற்பத்தி ஐந்து மெழுகுவர்த்திகளைத் கொளுத்தி வைப்பதிலாவது அர்த்தம் இருக்கிறது. ஊதி அணைப்பது அச்சான்யமாகக்கூட இருக்கிறது!” என்று பாப்பா சொல்லவே, “அது நியாயம்தான் எங்க அம்மா, வீட்டிலே விளக்கை வாயால் ஊதி

அணைத்தால் கூட, ‘‘வாயால் ஊதாதே! கையால் அமர்த்து,’’ என்று சொல்லுவாள். நீங்க சொல்றது சரிதான்’’ ஊதுவதை நிறுத்திவிட்டான் தியாகு.

கேக், சாப்பிட ஏதோ டிபன் — எல்லாம் சரியாகத்தான் இருந்தது. ஆனால் மொத்தத்தில் சந்தோஷமான பார்ட்டியாக அமையவில்லையே அது என்ன குறை என்று சொல்லத் தோன்றவில்லை.

வந்தவர்களில் ஒருவன் ஏதோ ஷேக்ஸ்பியர் நாடகத்தில் ஏதோ பாடத்தில், தியாகு சொன்ன மாதிரி இல்லை. வேறு விதமாக இருப்பதாக, சொல்லப் போக அன்று அபார கோபம் வந்துவிட்டது தியாகுவிற்கு. உறங்கிக் கொண்டிருந்த எதையோ எழுப்பிவிட்டதுபோல இருந்தது. புஸ்தகத்தைத் திறந்து பார்த்து இரண்டு நிமிஷத்தில் முடித்துக்கொண்டிருக்கிற விஷயத்தைப் பற்றி இரண்டு மணிநேரம் விவாதம். இவன் கத்த, அவன் கத்த கடைசியில் தியாகு சொன்னதுதான் சரி என்று ஏற்பட்டும் விஷயம் விடாமல் புகைந்துகொண்டேயிருந்தது வேறு, பார்ட்டிக்குப் பின்னணியாக ஒரு மனத்தளர்ச்சியை ஏற்படுத்தியது.

எனக்கு மட்டும்தான் அப்படியிருந்ததா, மற்றவர்களுக்கும் அப்படித்தானா என்று பிறகு கேட்டுத் தெரிந்து கொண்டேன். பாப்பாவுக்கும் அப்படித்தான் இருந்தது என்று சொன்னாள்.

இரவு எட்டரை மணிக்கு ஏதோ ஒரு ஏக்கத்துடன் வீடு திரும்புகிறவர்கள் போல வீடு திரும்பினோம். அன்றிரவு ஒருவரும் அதிகமாகத் தியாகுவைப் பற்றிப் பேசவில்லை.

பார்ட்டிக்கு வராமல் வீட்டிலேயே குழந்தைகளைப் பார்த்துக்கொண்டு தங்கிவிட்ட ராஜி, பார்ட்டி நன்றாக இருந்ததா என்று கேட்டதற்கு பாப்பா தான், ‘‘ஏதோ நடந்தது’’ என்று சொன்னாள். நான் எதுவும் சொல்லவில்லை.

•

# 34

நான் அன்று காலையில் ஹிஷிமிஷி லைப்ரரிக்கோ, பிரிட்டிஷ் கவுன்சில் லைப்ரரிக்கோ போய்விட்டு வந்து வழக்கமாக சாப்பிடுகிற நேரத்திற்கு இரண்டு மணி நேரம் தாமதமாக ஒரு மணிக்கு சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.

சாம்பார் சாதம் சாப்பிட்டு விட்டேன். ராஜி மோருக்கு சாதம் போட்டுவிட்டு மோர் கொண்டு வர உள்ளே போனாள். நான் ஊறுகாய் பாட்டிலைத் திறந்து ஊறுகாய் போட்டுக் கொண்டிருந்த போது போன் மணி அடித்தது. மோர் கொண்டு வந்த ராஜி போனை ஒரு கையில் வைத்துக் கொண்டு, ‘‘ஹல்லோ யார் வேணும்?’’ என்று போனை எடுத்துக் கேட்டுவிட்டு உங்களுக்குத்தான் போன்’’ என்றாள்.

நான் எழுந்து ரிசீவரைக் காதில் வைத்துக்கொண்டு ‘‘யார்’’ என்றேன்.

‘‘க.நா.சுப்ரமணியமா பேசுவது?’’

‘‘ஆமாம்.’’

‘‘உங்களுக்கு தியாகராஜனைத் தெரியுமில்லையா?’’

‘‘I.A.S. தியாகராஜனைத்தானே? தெரியுமே!’’

‘‘நேற்று மாலை அவர் இறந்துவிட்டார்.’’

‘‘ஏன்? என்ன பண்ணிற்று? பத்து நாட்களுக்கு முன்கூடப் பார்த்தேனே!’’

‘‘ஒரு வாரமாக உடம்பு சரியாக இல்லை. டாக்டர்கள் எலக்ட்ரிக் ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள்!Treatment failed!’’

‘‘அடப்பாவமே! இந்த எலக்ட்ரிக் ஷாக் ட்ரீட்மெண்ட் என்றால் பயமாக இருக்கிறது என்று என்கிட்டே கூடச் சொல்லியிருந்தான்!’’

‘‘யாராவது தகவல் தெரிவித்து அவர் மனைவி...’’

‘‘அவர் அண்ணா வந்திருக்கிறார். இரண்டாவது அண்ணா நாலைந்து மாதம் முன்கூட வந்திருந்தார். பாங்கில் இருக்கிறாரே — அவர்.’’

‘‘மாலியா?’’

‘‘ஆமாம். அவர் மனைவியும் மாலை வருகிறார்.’’

“நைஜீரியாவிலிருந்தா?”

“ஆமாம். நீங்கள் அவர் நண்பர் என்று தெரியும் சொல்லவேண்டுமென்று தோன்றிற்று சொன்னேன்.”

“Thanks!”

போன் துண்டிக்கப்படாததால், “நான் வரக்கூட முடியாது. எனக்குக் கண் சரியாகத் தெரிவதில்லை. வேறு யாரையாவது துணைக்கு அழைத்துக்கொண்டுதான் வரவேண்டும்” என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது எதிர்ப் பக்கத்தில் போனை வைத்துவிட்ட சப்தம் கேட்டது.

ராஜி, “என்னது? என்ன?” என்று கேட்டாள்.

“தியாகு போய்விட்டானாம் பாவம்” என்று சொல்லிவிட்டு கை கழுவிவிட்டு வந்து உட்கார்ந்தேன். மிகவும் சோகமாக சோர்வாக இருந்தது

“பாவம்! லீலாகூட உடன் இருக்கவில்லைபோல இருக்கிறதே!”

“வர்றாளாம்!”

“போகப் போகிறேளா?”

“எங்கே எல்லாம் நடக்கிறது என்றுகூடக் கேட்டுக்கொள்ளவில்லை. ஆனால் நான் போய் என்ன செய்ய? என்னைப் பார்த்துக்கொள்ள ஒரு ஆள் வேண்டும்.”

ஒரு பத்து நாட்களுக்கு சமய சந்தர்ப்பமில்லாமல் தியாகராஜனைப்பற்றி எங்களுக்குத் தெரிந்ததை மாற்றி மாற்றி சொல்லிக் கொண்டிருந்தோம். முடிந்த வாழ்க்கை முடிந்துவிட்டது. பத்து நாளில் எதையும் மறந்துவிடத்தானே வேண்டியிருக்கிறது? ஒரு வருஷத்தில் எப்படியாவது பேசுவது, நினைவுக்குக் கொண்டு வருவது என்று ஆகிறது. இரண்டாவது வருஷத்தில் அதுவும் குறைந்து தேய்ந்துவிடுகிறது.

அப்புறம் எப்பவாவது நினைவிற்கு வருகிறது அவ்வளவு தானே!

•••